
யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி



# தமிழ் ஆரம்

தமிழ் மன்றம் - 2016

ஆரம்
03

J/JAF HINDU LADIES COLLEGE

தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வோம்

யா.இ.ம.க- தமிழ் மன்றம்

# தமிழ் ஆரம்

## இதழ் – 03

யாழ்/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

**2016**

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி

வாழிய வாழியவே!

வானமளந்த தனைத்து மளந்திடும்

வண் மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி

இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி

என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்

துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று

சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி

வாழ்க தமிழ்மொழியே!

வான மறிந்த தனைத்து மறிந்து

வளர் மொழி வாழியவே!

# கல்லூரிக் கீதம்

திரு மிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி எங்கள்
பெருவருமிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடும் கல்லூரி உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி – உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ,

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடும் கல்லூரி – உயர்
சிந்தை வளம் பெற மெய்ப்பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி – வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவை
சுரந்திடுங் கல்லூரி – உனை
வந்தனை செய்து பைந்தமிழ்மாலை
வாழ்த்தொடு சூடோமோ – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ,

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடும் கல்லூரி – ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி – இந்து
நங்கையர் வாழ்வின் லட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ,

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி – என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி – நித்தம்
நிலமகள் நெற்றித் திலமென்றேத்த
நிலைத்திடுங் கல்லூரி – உனைத்
தலைமுறையாகத் தொழுதுளங்குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

# பொருளடக்கம்


☞ ஆலய பிரதம குருக்களின் வாழ்த்துச்செய்தி VII

☞ வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி VIII

☞ அதிபரின் வாழ்த்துச்செய்தி IX

☞ கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி X

☞ உதவிக்கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி XI

☞ மன்றப் பொறுப்பாசிரியரின் வாழ்த்துச்செய்தி XII

☞ மன்றத் தலைவரின் மனப்பதிவுகள் XIII

☞ மலராசிரியர்களின் உள்ளங்களிலிருந்து XIV

☞ செயலாளரின் நன்றிகள் XV

☞ யாழ்/ இந்து மகளிர் கல்லூரி தமிழ் மன்றம் - 2016 XVI

☞ தமிழ்த் தினப்போட்டி முடிவுகள் - 2016 XVII

1) தோல்விகள் தடையல்ல.. 01

2) உலக தாய்மொழித் தினம் 02

3) வாசிப்புத் திறனை மேம்படுத்துவோம் 03

4) எனது ஆசானே 04

5) தங்கத் தமிழ் 05

6) விஞ்ஞானமும் இலக்கியமும் 06

7) இன்றைய வாழ்வில் இசைத்துறையின் பங்களிப்பு 09

8) செய்யும் தொழிலே தெய்வம் 11

9) முதுமை 13

10) முதியோர் உலகை ஒளிரச் செய்வோம் 14

11) தமிழ்மொழியின் பெருமையை உலகறியச் செய்த தனிநாயகம் அடிகளார் 16

12) அனைவருக்கும் கல்வி 18

13) நினைவுகள் 19

14) ஊனம் 22

15) நீதி நூல்களும் மனித விழுமியங்களும் 23

16) நான் விரும்பும் தமிழறிஞர் 25

17) பெண்ணியம் 27
18) என் அழிந்திடாத உறவு அம்மா 29
19) பாரதி கண்ட கல்விப் புரட்சி 30
20) புது வசந்தம் 32
21) போதைப்பொருள் பாவனை 33
22) தமிழ்மொழியின் சிறப்புக்கள் 35
23) கனவு 37
24) "வலது குறைந்தோரும் சமுதாயத்தின் அங்கத்தினரே" 38
25) பெண்களை மதிப்போம் 40
26) குவலயம் சிறக்க வேண்டும் 42
27) இன்றைய உலகில் இளைஞர்களும் தொடர்பாடல் சாதனங்களும் 43
28) தமிழர் பண்பாடு 46
29) பாடசாலை நினைவுகள் 48
30) நாட்டார் இலக்கியங்கள் 49
31) எண்களின் ஓர் ஜாலம் 51
32) தமிழ் மொழியே! 53
33) தாய் அன்பு 55
34) பள்ளிக் காலம் 57
35) மரபுக்கவிதை பற்றிய பயில்வும் பயிற்சியும் 59
36) கவிஞர் வள்ளுவர் - அழகியல் பார்வையில் திருக்குறள் - 63
37) அடியார் வழிபாடு : தோற்றமும் வளர்ச்சியும் 68
38) மாணவரின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் வகிபாகம் 78
39) தற்கொலை பிரச்சினைக்குத் தீர்வல்ல? 82
40) எமது நூலகங்கள் 86
41) பெருங்காப்பியம் 89
42) அடைமொழியால் குறிக்கப்பெறும் சான்றோர் 90
43) நன்றிகள்

# வாழ்த்துச் செய்தி



அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றத்தினர் நடாத்தும் இத் தமிழ் விழாவிலே வாழ்த்துரை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இக்கல்லூரியில் வருடா வருடம் விழாக்கள் தடையின்றி நடைபெற அருள்பாலிக்கும் நடுத்தோட்ட விநாயகரை நினைவில் நிறுத்தி விழாவிற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து உள்ளங்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இத்தகைய விழாக்கள் மூலம் மாணவர்களின் படைப்பாற்றல், கலைத்திறன்கள், மொழித் திறன்கள், ஆளுமை விருத்தி போன்றன வெளிக்கொணரப்படுகின்றன. இம்முறையும் தேசிய மட்டத்தில் 1ஆம், 2ஆம் இடங்களைப் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்க்க உதவிய மாணவிகளையும் அவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பாராட்டுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் இவ்விழா சிறக்க விநாயகப் பெருமான் அருள் புரிய வேண்டி எனது நல்லாசிகளை வழங்கி நிறைவு செய்கின்றேன்.

பா. நகுலேஸ்வரக் குருக்கள்
ஆலய பிரதம குருக்கள்,
யாழ். இந்து மகளிர் இராஜவரோதய நடுத்தோட்டப் பிள்ளையார் கோவில்.

# வாழ்த்துச்செய்தி



யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றத்தினரால் வெளியிடப்படும் ''தமிழ் ஆரம்'' சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

அறிவு விருத்தி, சிந்தனை ஆற்றல் புத்தாக்கத் திறன் என்பவற்றை விருத்தி செய்வதில் மொழியானது பெரும் பங்காற்றுகின்றது. அத்தோடு தாய்மொழியூடாகவே எமது பண்பாடு கலாசாரங்கள், விழுமியங்களை மாணவர்களுக்கு கையளிக்க முடிகின்றது. இந்த வகையில் தமிழ்மொழிப் பாடம் தொடர்பான பாட, இணைப்பாட விதான செயற்பாடுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

இலத்திரனியல் சாதனங்களின் அபரிமிதமான வளர்ச்சி எம் மாணவர் சமுதாயத்தின் வாசிப்புப் பழக்கத்தை, எழுத்தாற்றல் திறனை பின்தள்ளிச் செல்கின்ற போக்கை உருவாக்கியுள்ளமையை வேதனையோடு சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது. இன் நிலைப்பாட்டை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் வகையில் இத் ''தமிழ் ஆரம்'' சஞ்சிகை வெளியீடானது உதவும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர வாய்ப்பளித்து நிற்கும் இச் சஞ்சிகையை வெளியிடுவதில் முனைப்போடு செயற்படும் அதிபர், ஆசிரியர் குழாத்திற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

தமிழ் மன்றத்தினால் வெளியிடப்படும் இத்தமிழ் ஆரம் தொடர்ந்து வரும் காலங்களிலும் சிறப்பாக வெளிவர இறையாசியை வேண்டி என்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ந. தெய்வேந்திரராஜா
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்விப் பணிமனை.

# வாழ்த்துச்செய்தி



எமது பாடசாலையில் பல்வேறு மன்றங்களின் ஊடாக பல செயற்பாடுகள் மாணவிகளின் ஆளுமை வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் ஆற்றி வருவது மகிழ்ச்சிக்குரியது. அந்தவகையில் தமிழ் மன்றத்தின் "தமிழ் ஆரம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இணையத்தளப் பாவனை, தொலைபேசிப் பாவனை போன்றன சமூக மட்டத்தில் வாசிப்பு, எழுத்தாற்றல் திறன்களை வெகுவாகக் குறைத்து உள்ளது. இது மாணவர்கள் மத்தியில் தாக்கவிளைவுகளை ஏற்படுத்தி இருக்கின்றது. இதனால் மாணவர்களின் ஆக்கத்திறன் போதிய அளவில் வளராத போக்கு காணப்படுகிறது. எமது கல்லூரியில் தமிழ் மன்றம் மாணவர்களினதும் ஆசிரியர்ளினதும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையில் மேற்படி சஞ்சிகையை வெளியிடுவதைப் பெருமனதுடன் வரவேற்கிறேன்.

இந்தச் சஞ்சிகை வெளியீடு மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் படைப்பாக்கத்திறனுக்கு க்ளம் அமைக்கும் செயற்பாடாக அமைகிறது. இவ் வெளியீடு ஆரோக்கியமானதாக அமைய உழைத்த மாணவிகள் துறைசார் ஆசிரியர்கள் பாராட்டுக்கு உரியவர்கள். எதிர் காலத்தில் "தமிழ் ஆரம்" மாற்றங் காணும் உலகுக்கு ஏற்ப மேலும் கனதியான படைப்புக்களைத் தாங்கி வெளிவர இறைவனை இறைஞ்சி நிறைவு செய்கிறேன்.

திருமதி. மிமலாதேவி விமலநாதன்,
அதிபர்,
யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

# தமிழ் ஆரம் -
# தமிழ் மொழியின் அணிகலன்




யாழ் இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் வெளியீடாக மலரும் "தமிழ் ஆரம்" சஞ்சிகையை வாழ்த்தி வரவேற்பதில் உவகையுறுகின்றேன். கடந்த மூன்று அகவைகளாக மாணவிகளின் மொழித்திறன் ஆற்றல் களமாக தமிழ் ஆரம் பிரவாகிப்பதை நினைந்து பாராட்டுகின்றேன்.

ஒரு மொழியின் இருப்பிற்கு அதன் பன்முகப்பிரயோகம் இன்றியமையாதது. அந்த வகையில் இச்சஞ்சிகையானது செம்மொழியாம் எம் தமிழ் மொழியின் எழுச்சிக்கு இளைய தலைமுறையினர் தம் படைப்பாற்றலால் நல்கும் வலுவூட்டலாகவே கருதுகின்றேன். யாழ். இந்து மகளிர் கல்லூரி அண்மைக்காலமாக தமிழ் மொழித்திறன் போட்டிகளில் தேசிய மட்டத்தில் விருதுகள் பல பெற்று வடபுல கல்வியுலகிற்கு பெருமிதம் சேர்த்து வருவதை இத்தருணத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். இத்தகைய வெற்றிகளுக்கு தமிழ் மன்றத்தின் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளும் அணி சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

கல்வித் தெய்வத்தின் அருள் வாக்கை விருதுவாக்காகக் கொண்ட யாழ். இந்து மகளிர் கல்லூரியின் சாதனைப் பயணத்திற்கு "தமிழ் ஆரம்" சஞ்சிகையும், தமிழ் மன்றமும் உந்து விசைகளாகத் திகழட்டும்.

எப். எக்ஸ். அன்ரன்
கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்.

# ஆசிச் செய்தி



யாழ். இந்து மகளிர் கல்லூரி நங்கையரின் நற்றமிழ் ஆரத்தின் முத்தமிழ் ஊற்றாகிய மூன்றாம் இதழுக்கு பற்றோடும் பணிவோடும் வாழ்த்துரை வழங்கி வணங்கி மகிழ்கின்றேன்.

நகரின் மத்தியில் எழிலோடு இயங்கும் இக்கல்லூரியின் இயற்றமிழ் இயம்பும் இளமங்கையரதும் இசைத் தமிழ் இசைக்கும் வனிதையரும், அபிநயமும் கவிநயமும் கலந்து படைக்கும் பாவையரும் சங்கமித்து சமைத்து ஆரமாய் அமைத்து அணியும் தமிழ் ஆரம் தரம் குன்றாமல் தமிழுக்கு உரம் கொடுக்கும் உயரிய நூலாக வருடம் ஒருமுறை மாந்தரின் மனங்களில் மகிழ்வோடு அணியப்படுகின்றது.

தணியாத தாகமாய், தமிழ்த் தாகம் பெருகவும், தமிழூக்கம் தழைக்கவும், தமிழ்மொழி சிறக்கவும் தமிழ் மன்றத்தின் தார்மீகப் பணி தடம்பதித்துத் தொடர இறையருளுடன் கூடிய எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

தி. தயாபரன்
உதவிக் கல்விப் பணிப்பாளர். (தமிழ்)
யாழ்ப்பாணக் கல்வி வலயம்.

# மன்றப் பொறுப்பாசிரியரின் வாழ்த்துச்செய்தி



திருமிகும் எங்கள் யாழ் நகருக்கு அணியாகத் திகழ்ந்திடும் யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி சைவத் தமிழ்ப் பெண் பிள்ளைகளின் வளமான கல்விக்கு வித்திடும் கலைக்கோயிலாக விளங்குகின்றது. கல்வியையும் கலைகளையும் ஒருங்கே வளர்த்திடும் இந்நிறுவனத் தமிழ் மன்றத்தின் தமிழ் ஆரத்தை வாழ்த்தி மகிழ்கிறேன்.

தாய் நாட்டையும் தாய் மொழியையும் பெற்ற தாயையும் நேசிக்கும் பண்பு இளைய சமுதாயத்திடம் இயல்பாகவே உள்ளது. தம் மொழி மீது கொண்ட ஈடுபாட்டின் வெளிப்பாடே தமிழ் ஆரம் சஞ்சிகை ஆகும். தமிழ் மன்ற மாணவிகளின் அயரா உழைப்பின் அறுவடையாக வரும் ஆரம், கல்வி உலகிற்கு நற்பயனை வழங்குவதுடன் எதிர்வரும் காலங்களில் தமிழர்களின் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ வேண்டும் என இறைவனைப் பணிந்து வேண்டுகின்றேன்.

திருமதி கேதீஸ்வரி ஆனந்தரட்ணம்
தமிழ் மன்றப் பொறுப்பாளர்

# மன்றத் தலைவரின் மனப்பதிவுகள்



யாழ்ப்பாணத்தில் பெண் கல்விக்கு காத்திரமான பங்களிப்பை யாழ் இந்து மகளிர் கல்லூரி வழங்கி வருகின்றது. தமிழ்மொழித் தினத்தில் எமது பாடசாலை மாணவிகள் தேசிய மட்டத்தில் பல சாதனைகளை நிலைநாட்டி வருகின்றார்கள். தமிழ் மன்றத்தின் தலைவர் என்ற வகையில் மாணவர்களின் படைப்பாக்கத் திறனிற்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டியது மிக முக்கியமான பணியாகும். அந்த வகையில் தமிழ் ஆரம் சஞ்சிகையை தமிழ் மன்றம் வெளியிட இருப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

எங்களிடம் மறைந்து காணப்படுகின்ற ஆற்றல்களை வெளிக்கொணர வேண்டியது முக்கியமான கல்விப் பணியாகும். நாங்கள் ஆக்கத்திறன் சிந்தனை உடையவர்களாக, சூழலை இரசனை உணர்வோடு நோக்குபவர்களாக உருமாற்றம் பெறுவது இன்றியமையாதது ஆகும். ஒரு மனிதனின் வாழ்க்கைக் காலத்தில் மாணவப் பருவம் மிக முக்கியமானது. ஆளுமை வளர்ச்சியில் அடித்தளமிடும் காலமாக மாணவப்பருவம் காணப்படுகின்றது. அந்தப் பருவத்திலே மாண்பான சிந்தனை ஆற்றல்களை வளர்த்தெடுக்க வேண்டியது பாடசாலையின் பொறுப்பாகும். தமிழ் மன்றம் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு தமிழ் ஆரத்தினை வெளியிடுவது மன்றத் தலைவி என்ற வகையில் மனநிறைவைத் தருகின்றது.

கல்வி என்பது நடத்தையில் ஏற்படுகின்ற மாற்றம் என்று கூறுவார்கள். தமிழ் ஆர வெளியீடு மாணவிகளிடத்திலே ஆரோக்கியமான நடத்தை மாற்றத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. எங்களுடைய இந்த முயற்சிக்கு துணையாக இருக்கின்ற பாடசாலையின் முதல்வர், பிரதி அதிபர், உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் என்றும் என் நன்றிக்குரியவர்கள். காத்திரமான படைப்புக்களுடன் வெளிவருகின்ற தமிழ் ஆரம் எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். தொடர்ந்து காலத்தின் தேவைக்கேற்ப புதிய தகவல்களைத் தாங்கி தமிழ் ஆரம் வெளிவர இறைவனை இறைஞ்சுகிறேன்.

செல்வி ச. கீர்த்திகா

தலைவர்,

தமிழ் மன்றம்.

# மலராசிரியர்களின் உள்ளங்களிலிருந்து...





தமிழ் ஆரம் சஞ்சிகை வெளியிடுவதற்கு ஆற்றலை சகல தரப்பினருக்கும் நிறைவாக வழங்கிய பரம்பொருளின் பாதார விந்தங்களுக்கு சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம். எமது பிரதேசத்தில் பெண் கல்விக்கு ஏற்றம் கொடுக்கும் கல்லூரி அன்னைக்குத் தலை வணங்கி மூன்றாவது சஞ்சிகையாக இது பிரசவிப்பதை நினைத்து மன நிறைவடைகின்றோம்.

சஞ்கிகை மலர்வடைய எமக்கு ஆலோசனையையும், அறிவுறுத் தல்களையும் அள்ளி வழங்கிய கல்லூரி முதல்வர், பிரதி அதிபர்கள், துறைசார் ஆசிரியர்கள் போன்றோருக்கு நன்றி கூறுவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றோம். சகோதரிகளின் ஆக்கங்களையும், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் போன்றோரின் கனதியான படைப்புக்களையும் தாங்கி வருவது குறிப்பிடத் தக்கது. அந்த வகையில் அத்தனை பேருக்கும் சிரம் தாழ்த்துகிறோம். தமிழ் மன்றம் தனது பணிகளின் ஓர் அங்கமாக மேற்படி சஞ்சிகையை வெளியிடுவதன் மூலம் எமது உள்ளடக்கிகளைப் படைப்புகளாக மாற்ற சந்தர்ப்பம் வழங்கியதை பெருமனதுடன் இச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுகிறோம்.

எண்ணியது முடிதல் வேண்டும்
நல்லதே எண்ண வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல் அறிவு வேண்டும்

எனும் பாரதியின் வாக்கை நினைவு கூர்ந்து எதிர்காலத்தில் மாறிவரும் கல்விப்போக்குகளை இனம் கண்டு எமது தாய் மொழி வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் மிகவும் கனதியான ஆக்கமாக எமது சகோதரிகள் இப்பணியைத் தொடர்வார்கள். வருடம்தோறும் தமிழ் மொழியின் பெருமை பேச தமிழ் ஆரம் உதயமாக வேண்டும். தனது தொடர்ச்சியைப் பறைசாற்ற இறைவனை இறைஞ்சி நிறைவு செய்கிறோம்.

செல்வி சுகிர்தா சிவசுப்பிரமணியம்

செல்வி டிலக்ஷிகா அரவிந்தன்

# செயலாளரின் நன்றிகள்



யா/யாழ் இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றச் செயலாளராகச் செயற்படுவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

ஆரம் - மூன்றின் வெளியீட்டிற்கு ஆதாரமாக இருந்த அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

எம் ஆரத்திற்கு ஆசிச்செய்தி வழங்கி அது வளர்ச்சியடைய உறுதுணையாக நின்ற கல்லூரி முதல்வருக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

ஆசிச் செய்தி, வாழ்த்துச் செய்தி வழங்கிய சான்றோருக்கும் ஆக்கம் வழங்கி மலரின் மலர்விற்கு உதவிய சகோதரிகள் மற்றும் பெரியோருக்கும் மிகுந்த நன்றிகள்

தமிழ் மன்றத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் சிறப்பாக நடைபெற வழிகாட்டிய அதிபர், பிரதி அதிபர், துறை சார்ந்த ஆசிரியர்கள் ஏனைய ஆசிரியப் பெருந்தகைகள் அனைவருக்கும் நாம் என்றென்றும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம்.

இதழின் மலர்விற்கு விளம்பரம் வழங்கிய வர்த்தகப் பெரு மக்களுக்கு எம் நன்றிகள். மேலும் இதழை அழகுற வடிவமைத்த கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும் மன்றம் சார்பாக நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

தமிழ் மன்றம் பூரணமாக இயங்க முழுப் பங்களிப்பையும், ஆர்வத்தையும் வழங்கிய மன்ற உறுப்பினர்கள், கல்லூரித் தோழிகள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

செல்வி அ. ஆர்த்தி
செயலாளர்,
தமிழ்மன்றம்.

# யாழ்/ இந்து மகளிர் கல்லூரி
# தமிழ் மன்றம் - 2016

| | |
|---|---|
| **காப்பாளர் :** | திருமதி மிமலாதேவி விமலநாதன் |
| **பொறுப்பாசிரியர் :** | திருமதி கேதீஸ்வரி ஆனந்தரட்ணம் |
| **தலைவர் :** | செல்வி கீர்த்திகா சந்திரமோகன் |
| **உபதலைவர் :** | செல்வி தேவதர்ஷினி நடராசா |
| **செயலாளர் :** | செல்வி ஆர்த்தி அற்புதம் |
| **உபசெயலாளர் :** | செல்வி பவதாரணி நரேந்திரராஜா |
| **இதழாசிரியர்கள் :** | செல்வி சுகிர்தா சிவசுப்பிரமணியம் |
| | செல்வி டிலக்ஷிகா அரவிந்தன் |
| **ஆசிரிய ஆலோசகர்கள் :** | திருமதி ச. செபமாலைதாசன் |
| | திருமதி இ. நித்தியானந்தன் |
| | திருமதி செ. உமாகரன் |
| | திருமதி ப. தாமோதரகுமார் |
| | திருமதி க. தனமூர்த்தி |
| | திரு. அ. லிங்கராஜ் |
| | திருமதி ய. விக்கினேஸ்வரமூர்த்தி |
| | திருமதி கு. ரகுநாதன் |
| **மலர்க்குழு :** | செல்வி டிலக்ஷிகா அரவிந்தன் |
| | செல்வி டிலீசியா றொமீலியட் |
| | செல்வி பிரியங்கா அருட்செல்வன் |
| | செல்வி நிதர்சனா சுதாகரன் |
| | செல்வி திருமகள் கந்தையா |
| | செல்வி சுகிர்தா சிவசுப்பிரமணியம் |
| | செல்வி நவன்யா பத்மநாதன் |
| | செல்வி கேதுஷா ரவிச்சந்திரன் |

# தமிழ்த் தினப்போட்டி முடிவுகள் - 2016

| இல. | நிகழ்ச்சி | பிரிவு | மாணவர் பெயர் | கோட்ட மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | கட்டுரை வரைதல் | 4 | ஜெ. ஜீவனா | 3 | - | - | - |
| 02. | கட்டுரை வரைதல் | 5 | செ. சிந்துஜா | 2 | - | - | - |
| 03. | இலக்கணப் போட்டி | 5 | வா. மந்துசா | 3 | - | - | - |
| 04. | திறனாய்வுப் போட்டி | 5 | கி. சிந்துஜா | 1 | 1 | 3 | - |
| 05. | குறுநாடக ஆக்கம் | 5 | உ. டிலோஜனா | 1 | 3 | - | - |
| 06. | கவிதை ஆக்கம் | 4 | க. சங்கவிகா | 1 | 1 | 2 | - |
| 07. | கவிதை ஆக்கம் | 5 | ஹ. பாத்திமா றிஸ்மியா | 1 | 2 | - | - |
| 08. | சிறுகதை ஆக்கம் | 4 | சி. நிருபா | 2 | - | - | - |
| 09. | பாவோதல் | 3 | ச. மயூரி | 3 | - | - | - |
| 10. | பாவோதல் | 4 | சி. ரிலக்சனா | 2 | - | - | - |
| 11. | இசை தனி | 2 | உ. கம்சிதா | 1 | 2 | - | - |
| 12. | இசை தனி | 3 | சி. ராகப்பிரியா | 2 | - | - | - |
| 13. | இசை தனி | 4 | ச. அருந்ததி | 1 | 2 | - | - |
| 14. | இசை தனி | 5 | சி. பிறேமினி | 1 | 1 | 1 | 2 |
| 15. | நடனம் தனி | 2 | இ. ருக்ஷிகா | 1 | 2 | - | - |
| 16. | நடனம் தனி | 3 | பி. நிவேதனா | 1 | 1 | 1 | 1 |
| 17. | நடனம் தனி | 4 | சு. மானசா | 1 | 2 | - | - |
| 18. | நடனம் தனி | 5 | சு. திலக்ஷி | 1 | 2 | - | - |
| 19. | நாட்டிய நாடகம் | தி.போ | | 1 | 1 | 1 | 1 |
| 20. | மேடை நாடகம் | தி.போ | | 1 | 2 | - | - |
| 21. | இசை குழு - I | | | 2 | - | - | - |
| 22. | இசை குழு - II | | | 1 | 2 | - | - |
| 23. | நடனம் குழு - I | | | 1 | 1 | 2 | - |
| 24. | பேச்சு | 2 | ஜோ. டில்ஹிஷா | 2 | - | - | - |
| 25. | இலக்கிய விமர்சனம் | 5 | மோ. பவதாரணி | 3 | - | - | - |

# எங்கள் அதிபர்



திருமதி மிமலாதேவி விமலநாதன் SLPS - 1

# முத்தமிழ் குழுமம் - 2016



*இருப்பவர்கள் (இ-வ):* திருமதி ப. தாமோதரகுமார், திருமதி இ. நித்தியானந்தன், திருமதி கு. உருத்திரகுமாரன், திருமதி கே. ஆனந்தரட்ணம், திருமதி ல. லிங்கேஸ்வரன் (பிரதி அதிபர்), திருமதி மி. விமலநாதன் (அதிபர்), திருமதி ச. சிவநாதன் (பிரதி அதிபர்), திருமதி ச. செபமாலைதாசன், திருமதி க. தனமூர்த்தி, திருமதி செ. உமாகரன், திரு. அ. லிங்கராஜ்.

நிற்பவர்கள் (இ-வ): திருமதி க. ஜெயதாஸ், திருமதி ய. விக்கினேஸ்வரமூர்த்தி, திருமதி க. சிவனேஸ்வரநாதன், திருமதி ம. ஜெபராஜா, திருமதி சா. மதிரூபன், திருமதி பி. வாகீசன், திருமதி ச. கேதீஸ்வரன், திருமதி த. விமல்ராஜ், திருமதி த. கணேசநாதன், செல்வி வி. வெங்கடேஸ்வரன்.

# தமிழ்ப் பாட ஆசிரியர் குழுமம் - 2016



இருப்பவர்கள் (இட.வல) : திருமதி இ. நித்தியானந்தன், திருமதி கே. ஆனந்தரட்ணம், திருமதி ல. லிங்கேஸ்வரன் (பிரதி அதிபர்), திருமதி மி. விமலநாதன் (அதிபர்), திருமதி ச. சிவநாதன் (பிரதி அதிபர்), திருமதி ச. செபமாலைதாசன், திரு. அ. லிங்கராஜ்.

நிற்பவர்கள் (இட.வல) : திருமதி ப. தாமோதரகுமார், திருமதி ய. விக்கினேஸ்வரமூர்த்தி, திருமதி க. தனமூர்த்தி, திருமதி செ. உமாகரன்.

# தமிழ் மன்றம் - 2016



*இருப்பவர்கள் (இ-வ)*: திருமதி கே. ஆனந்தரட்ணம், செல்வி ச. கீர்த்திகா, திருமதி ல. லிங்கேஸ்வரன் (பிரதி அதிபர்), திருமதி மி. விமலநாதன் (அதிபர்), திருமதி ச. சிவநாதன் (பிரதி அதிபர்), செல்வி அ. ஆர்த்தி, திருமதி ச. செபமாலைதாசன்.

*நிற்பவர்கள் (1ஆம் வரிசை) (இ-வ)* : செல்வி ஹ. நர்மதா, செல்வி றொ. டிலீசியா, செல்வி அ. பிரியங்கா, செல்வி க. திருமகள், செல்வி ந. நிஷாரா, செல்வி செ. புஷ்கரணி, செல்வி செ. அனுரா, செல்வி ஜீ. சயீரா, செல்வி சு. நிதர்சனா, செல்வி கு. பிரஷாந்தி, செல்வி பா. பானுஜா, செல்வி சி. சுகிர்தா, செல்வி ப. நவன்ஜா, செல்வி சு. சுபாசினி.

*நிற்பவர்கள் (2ஆம் வரிசை) (இ-வ)*: செல்வி ம. ஆரணி, செல்வி க. ஜீவனா, செல்வி க. ஜானுயா, செல்வி ப. கஜலக்ஷி, செல்வி செ. ரக்ஷனா, செல்வி இ. டர்ஷிகா, செல்வி ர. கேதுஷா, செல்வி ந. தேவதர்ஷினி, செல்வி அ. திலக்ஷி, செல்வி த. திருமகள், செல்வி அ. டிலக்ஷிகா, செல்வி சு. தட்சாயினி, செல்வி ந. பவதாரணி.

## மலர்க்குழு - 2016



*இருப்பவர்கள் (இ-வ)*: திருமதி கே. ஆனந்தரட்ணம், திருமதி ல. லிங்கேஸ்வரன் (பிரதி அதிபர்), திருமதி மி. விமலநாதன் (அதிபர்), திருமதி ச. சிவநாதன் (பிரதி அதிபர்), திருமதி ச. செபமாலைதாசன், திரு. அ. லிங்கராஜ்.

*நிற்பவர்கள் (இ-வ)* : செல்வி அ. டிலக்ஷிகா, செல்வி றொ. டிலீசியா, செல்வி அ. பிரியங்கா, செல்வி சு. நிதர்சனா, செல்வி க. திருமகள், செல்வி சி. சுகிர்தா, செல்வி ப. நவஞ்ஜா, செல்வி ர. கேதுஷா.

# தேசிய மட்டச் சாதனைகள் - 2016



தனி நடனம் - முதலாம் இடம்



நாட்டிய நாடகம் - முதலாம் இடம்



தனி இசை - இரண்டாம் இடம்



தனி நடனம் - இரண்டாம் இடம்
2015





தனி இசை - இரண்டாம் இடம்
2015

# தோல்விகள் தடையல்ல .....

தோல்வியே வெற்றியின் முதற்படி என்பது அறிஞர்களின் கூற்று. தோல்வியைக் கண்டு சோர்வடையும் எவராலும் வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்குத் துணிவோடு நகர முடிவதில்லை. தொடர்ந்து முயற்சி செய்தால் கடினமானதையும் சாதிக்கலாம். வாழ்விலே வெற்றிகள் ஈட்டலாம். தோல்வியைக்கண்டு சோர்வடையாது இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுக்கொடுத்தவர் காந்தி மகான் ஆவார். நம் முன்னோர்களும் பல தோல்விகளைத் துணிகரமாகச் சந்தித்துத்தான் இறுதியில் நாட்டைச்சுதந்திர நாடாக்கினர் என்பதை நாம் உணர வேண்டும்.

வெற்றிக்கனியைப் பறிக்க வேண்டுமானால் எத்தனையோ முட்பாதைகளில் பயணிக்க வேண்டும் என்ற உண்மையை நாம் மாணவ பருவத்தில் உணர்ந்து எம் முயற்சியில் கண்ணுங்கருத்துமாக இருக்க வேண்டும். தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டிகளிலே அறிந்து கொள்ளலாம். பல பந்தயங்கள் சவால்களில் இதை நாம் உணர முடியும்.

சகிப்புத்தன்மை எம் வெற்றிக்கு வழிகாட்ட வல்லது. மாணவ பருவத்தினராகிய நாம் தோல்விகளால் துவண்டுவிடக் கூடாது. முயன்றால் கல்வியில் மாத்திரமன்றி விளையாட்டிலும் போட்டிகளிலும் வெற்றிகளை ஈட்டிக்கொள்ள முடியும்.

வெய்யில் இல்லையெனில் நமக்கு நிழலின் அருமை தெரியாது. அதுபோலத் தோல்விகள் தான் எமக்கு வெற்றியின் அருமையை உணர்த்தும் பாடங்கள். மேலும் தோல்வி என்பது வெற்றியைவிடச் சிறந்த பாடம் கற்றுத்தரும் ஆசானுமாகும்.

தோல்வியை வெகுவாக அலட்டிக்கொள்ளல் மனித முன்னேற்றத்துக்குத் தடைக்கல்லா அமையும். அது எம்மில் தாழ்வுச் சிக்கலையும் விரக்தியையும் ஏற்படுத்தும். அவை உள்ளத்தை மாத்திரமன்றி உடலையும் நலிவாக்கும். "தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா?" என்ற பாடல் வரிகள் தெம்பு தரக் கூடியவையாகும்.

படிந்துவிட்ட கண்ணாடிபோல எமது உள்ளமானது தற்காலிகமாக இருளடைந்து விடலாம். எனினும் அதைத் துடைத்துவிட்டால் அது மீண்டும் ஒளிரும். தற்காலிகமான தோல்விகள் எம்மைப் பாழடித்துவிட மாட்டா. நாமறிந்த சில வீரர்களும் சாதனையாளர்களும் கூடத் தோல்விகள் என்ற படிக்கட்டுகளில் ஏறி விழுந்து முன்னேறியவர்கள் என்பதை அறியும்போது எம்மில் புத்துணர்வு பிறக்கிறது. காலமும் நேரமும் கூட முயற்சிக்குத் தடையல்ல. ஆகவே தொடர்ந்து முயல்வதுதான் தோல்வியைத் துரத்துவதற்கான வழி என்பதை விளங்கிக் கொள்வோம்.

மாணவர்களாகிய எம்மிடம் நம்பிக்கையும் விடாமுயற்சியும் திறமையும் இருப்பின் தோல்விகளை வெற்றிகளாக்குவது சுலபம்.


சி. சிவஜனா

தரம் 8F

# உலக தாய்மொழித் தினம்

உலகில் பல்வேறுபட்ட பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் யாவரும் ஒரே மொழியைப் பேசுவதுமில்லை. ஒரே மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்களாகவும் இல்லை. மாறாக வெவ்வேறுபட்ட மொழிகளைப் பேசுபவர்களாகவும், வெவ்வேறுபட்ட தாய்மொழிகளை உடையவர்களாகவும் உள்ளனர்.

உலக மக்களால் பயன்படுத்தப்படும் அனைத்து மொழிகளுக்கும் பாதுகாப்பும், உரிய மரியாதையும் அளிக்க வேண்டும். எந்த மொழியையும் அழிக்கக்கூடாது. ஒருவர் பல மொழிகளைத் தெரிந்து கொள்ளவும், வெளிநாட்டு மொழிகளைக் கற்றுக்கொள்ளவும், மொழிபெயர்ப்பு மூலம் அமைதியை உருவாக்கவும் மொழித்தினம் பெப்ரவரி மாதம் இருபத்தாறாம் திகதி கொண்டாடப்படுகிறது.

மனிதனின் அடையாளம் அவனது தாய்மொழி தான். உலக மக்கள் அனைவரும் அவர்களது தாய்மொழியில் தான் பேசுகின்றனர். மொழி அழிந்தால் அந்த இனமே அழிந்து விடும். நாம் மேன்மையான உறவுகளைச் சொல்லவும், தகுதியான சொல்லை வெளியிடவும் உதவுவது நமது தாய்மொழியே ஆகும். மூத்தோரிடமிருந்து உடம்புக்குள், உயிருக்குள் ஊறிவரும் விஷயம் தாய்மொழியேயாகும். இனங்களைப் பிரதிபலித்துக்காட்டவும், அந்த இனமக்களின் அமைதியான வாழ்விற்கும் மொழிகள் அடிப்படையாகத் திகழ்கின்றன.

சமுதாய ஒருமைப்பாட்டிற்கும், நிலையான வளர்ச்சிக்கும் துணை நிற்பது மொழிகள் தான். மொழியினூடாக ஒரு சமுதாயத்தின் பண்பாட்டின் கூறுகளையும், பாரம்பரியத்தையும் அறிந்துகொள்ளலாம்.

ஆகவேதான் உலகளாவிய ரீதியில் மொழிகளை மதிக்கவும், மொழிகளை அழியவிடாது பாதுகாக்கவும் உலக தாய்மொழித் தினம் கொண்டாடப்படுகிறது.

எனவே ஒவ்வொரு மனிதனும் பல்வேறு மொழிகளைக் கற்க வேண்டும். மொழிகளுக்கு மதிப்பளித்து மொழிகளை அழியவிடாது பாதுகாத்தல் வேண்டும்.

ம.அகல்யா.
தரம் 6C

# வாசிப்புத் திறனை மேம்படுத்துவோம்

இன்று மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கமானது அருகி வருகின்றது. தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகும் நாடகங்கள், கிரிக்கற் நிகழ்ச்சிகள், திரைப் படங்களைப் பார்ப்பதில் அதிக நேரத்தை வீணாக்குகின்றனர். இதனால் அவர்களது கல்வி பெரிதும் பாதிக்கப்படுகின்றது. கற்கவேண்டிய நேரமும் பெரிதும் வீணாகின்றன. அதே வேளை நல்ல நண்பர்கள் எனக்கருதும் நூல்களை வாசிக்கத்தவறுகின்றனர்.

''நூல் பல கல்'' என்றார் ஔவையார். எவ்வளவு நூல்களை வாசிக்கின்றோமோ அவ்வளவிற்கு நமது அறிவு பெருகும். "கண்டதும் கற்க பண்டிதன் ஆவான்" என்பது நமது ஆன்றோர் வாக்கு. புத்தகங்களைப் போன்ற "சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது" என்று சிறப்பு மிக்க ஆங்கில கவிஞர் கூறுகின்றார். எனவே புத்தகங்களை வாசிப்பதனால் அறிவு பெருகுவதுடன், புதிய விடயங்களைக் கற்க வேண்டும் என்ற ஆர்வமும் தூண்டப்படுகிறது.

வாசிப்பதன் ஊடாக புதிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன்கிரகித்துக் கொள்கின்ற திறன்களை வளர்த்துக் கொள்ளவும் முடிகின் றது. மேலும் எமது வாழ்வு வளம்பெறவும் அறிவானது மிகப்பிரதானமான ஒன்றாகக் காணப்படுகிறது. இவ் அறிவினைப் பெற வாசிப்பது மிக அத்தியாவசியமாகின்றது. நூல்களை வாசிக்கும் பழக்கமுடையவர்கள் தனிமை உணர்வை ஒருபோதும் பெறுவ தில்லை.

ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நூல்களை மாணவர்கள் நாடிச்சென்று அந்நூல்களைக் கற்கவேண்டும். வாழ்வில் துன்பம், சோர்வு ஏற்படுகின்றபோது விரும்பிய நூல்களை வாசிப்பதனூடாக அத்துன்பத்தை நீக்கிக் கொள்ளமுடியும். இதனாலேயே புத்தகங்களை, இலக்கிய நூல்களை நாம் தொடர்ந்து வாசித்து அறிந்து கொள்ள முடியும்.

''வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின் றான்'' என்று அறிஞர் பேக்கன் அவர்கள் கூறியுள்ளார். அவரது கூற்றிற்கு அமைய நாம் நமது ஓய்வு நேரத்தில் புத்தகங்களைவாசிப்பதில் செலவிட்டுக் கொள்ள வேண்டும். மாணவர்கள் இளமை முதல் நூல்களை வாசிப்பதைப் பழக்கமாகக் கொண்டால் நாளடைவில் அறிவும், ஆற்றலும் மிக்கவர்களாக வாழ்வதற்கு அது வழிகாட்டும்.

இன்றைய காலத்தில் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் குறைவதன் ஊடாக பாடசாலையில் சில செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் பொருத்தமானது ஆகும். மாணவர்களிடம் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் முகமாக வாசிப்பு வாரத்தினை அறிமுகப்படுத்தல், மாணவர்களிடம் வாசிப்புப் போட்டிகள் நடாத்துதல். மாணவர்களை வாசிப்பு ஆர்வத்தை ஏற்படுத்தும் முகமாக நூலகத்திற்கு அழைத்துச் செல்லல் என்பன பொருத்தமானதாகக் காணப்படுகிறது.

மாணவர்கள் நூல்களை வாசிக்கின்ற போது பெரும்பாலும் அந்த நூல்கள் அறிவியல், சமயம், வரலாறு, புவியியல் சார்பான நூல்கள் பொருத்தமானதாகக் காணப்படுகிறது. இவ்வாறான நூல்கள் அறிவுப் பசியை போக்குகின்ற நல்ல கருத்துக்கள் உள்ளடக்கியிருக்கும். எனவே மாணவர்கள் தமது பொன்னான நேரத்தை வாசிப்புப் பழக்கத்தில் ஈடுபடுத்தல் மிகவும் பொருத்தமுடையதாகும்.

**ம. தட்சாஜினி**
**தரம் 8F**

# எனது ஆசானே

ஆசானே ஆசானே - எம்
அன்பான ஆசானே!

கணினி ஒரு விளையாட்டு - எமக்கு
கற்றுத் தந்த ஆசானே!

போட்டிகள் பல கற்பித்து - அதில்
உவகையுடன் வென்றிட அறிவு தந்த ஆசானே!

கணமும் அவரை மறவோம் - இரு
கண்களைப் போல மதிப்போம்.

உணவைப் போல பாடம் - தினம்
ஊட்டும் நல்ல ஆசானே!

வகுப்பறைக்குள் வருவார் - நாம்
எழுந்து நின்று வணக்கம் சொல்ல வேண்டும்

இதமாய் பாடம் சொல்லித் தருவார் - அவர்
இங்கிதமாய் விளக்கம் அளிப்பார்

வீட்டு ஒளித்தீபம் போல - பூரணமாய்
அவர் வீற்றிருப்பார் வகுப்பறையில்.

வாழிய வாழிய ஆசானே!
என்றென்றும் வாழிய ஆசானே! ஆசானே!
வாழ்க என்றும் பெருமையுடன் ஆசானே! ஆசானே!

றா. ஜனனிகா
6E

# தங்கத் தமிழ்

தரணியிலே நல்லதோர்
தன் மொழியாய்
தன்னுள் கொள்வார்
தண்ணீர் போல் பரந்த
தர்மம் கூறும்
தன்மையான இதழ்

தனிச்சிறப்பு கொண்ட
தகதகக்கும்
தங்கமொழி - எங்கள்
தாய்மொழி
தமிழ்மொழியாம்
தோழர்களே கேளுங்கள்
தன்னையறிந்து கொள்ள
தாய்மொழியறியுங்கள்
தமிழ் பேசுங்கள்!
தமிழ் வாழ்ந்து வாழவைக்கும்
தமிழ் மொழி வாழ்க! வளர்க! - என்றும்

ம. தர்சிகா
தரம் 9 F

# விஞ்ஞானமும் இலக்கியமும்

மனிதன் கல்வியைப் பெறும் பிரதான இரு துறைகள் விஞ்ஞானமும் இலக்கியமும் ஆகும். தனிமனிதன் பெறும் பயிற்சி விஞ்ஞானத்துறை, இலக்கியத்துறை எனும் இரு வழிகளிலும் அமையலாம். இவற்றுள் விஞ்ஞானம் என்பது பல நூற்றாண்டுகளாக மக்கள் பல்வேறு துறைகளில் ஈட்டிய அறிவை, மனிதனை மையமாகக் கொண்டு ஒன்றிணைத்து, ஒழுங்குபடுத்தி உள்ளதை உள்ளபடியே எடுத்துக்கூறுவதாகும். இலக்கியமும் மனிதனை மையமாகக் கொண்டே வளர்ச்சியடைந்த போதிலும் விஞ்ஞானத்தைப் போன்று காரண, காரியத் தொடர்பைக் காட்டுவதாக, ஒழுங்கு படுத்தப்பட்டதாக அமையாமல் புலவர் தனது அனுபவங்களை உணர்ச்சியுடனும், உவமை, உருவகம், உயர்வு நவிற்சி போன்ற அணிகளுடனும் கற்பனை வளம் கொண்டு வெளிப்படுத்தப்படும் துறையாகும். சுருங்கக் கூறின் விஞ்ஞானம் மனிதனையும் அவன் வாழும் பௌதீகச் சூழலையும் புறநோக்காக ஆராய்ந்து உண்மை காண முயல்கிறது. ஆனால் இலக்கியமோ இவற்றையே அகநோக்காக ஆராய்ந்து உண்மை காண முயல்கிறது.

விஞ்ஞானமும் இலக்கியமும் ஒன்றிற் கொன்று முரண்பட்டவைகளா என்பதை நோக்குவதும் இங்கு அவசியமாகின்றது. ஒரு காலத்தில் இவை இரண்டும் இருதுருவங்களாக, ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகளாகக் கருதப்பட்டு வந்தன. ஆயினும் இரண்டும் மனிதனை மையமாகக் கொண்டு, மனித வாழ்வின் பின்னணியில் உள்ள உண்மைகளைக் காண்பதற்கு முயல்வதனால் இரண்டும் மாறுபட்டவையல்ல. விஞ்ஞானமும் இலக்கியமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல மனிதவாழ்விற்குத் தேவையான இரு துறைகளாகும். இவற்றை ஒன்றை ஒன்று குறைநிரப்புவனவாகக் கொள்ளலாம். விஞ்ஞானம் மனிதனது மூளை வளர்ச்சிக்கும் சிந்தனைத் திட்பத்திற்கும் பயிற்சியளிக்க உதவுகின்றதென்றால் இலக்கியம் அவனது உளவளர்ச்சிக்கும் உணர்ச்சி நுட்பத்திற்கும் பயிற்சியளிக்கிறது எனலாம்.

நாம் வாழும் பூமியின் மீது காற்றும், முகிலும், மழையும், பனியும், ஒலியும் ஒளியும், வெப்பமும் மின்னலும், பிறகோள்களும் எத்தகைய தாக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றன? இவற்றின் தோற்றங்களையும் விளைவுகளையும் மனிதன் வியக்கத்தக்க முறையில் அறிவாராய்ச்சிக்கு உள்ளாக்கி அவற்றுக்கிடையிலான காரண, காரியத் தொடர்புகளைக் கண்டுபிடித்து, இத் தொடர்புகளை விளக்கும் விஞ்ஞான விதிகள் பலவற்றையும் கண்டறிந்துள்ளான். ஏன், எதற்காக, எப்படி போன்ற விஞ்ஞான நியதிகள், பலதுறைப்பட்ட அறிவுக்கூறுகளையெல்லாம் ஒன்றிணைத்து, ஒருமைப்படுத்தித் தந்துள்ளன. இதனாலேயே விஞ்ஞானக் கல்வி ஒரு விதிமுறைப் பயிற்சியாக விளங்குகின்றது. ஆனால் இலக்கியக் கல்வியோ இத்தகைய ஒருமைப்பாடோ, ஒழுங்கமைப்போ உடையதன்று. உள்ளத்தில் உணர்ந்த உயர்ந்த கருத்துக்களை அனுபவரீதியாக எடுத்துரைக்கின்றது.

இன்று நாம் வாழும் சமகால சமுதாயத்தில் விஞ்ஞானத்திற்கும் இலக்கியத்திற்கும் இடையே உள்ள தொடர்பை நோக்கும் போது அவற்றிடையே பலவழிகளிலும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதை அவதானிக்கலாம். இன்றைய விஞ்ஞான சாதனைகளின் காரணமாகவும் வாழ்க்கையின் பல்வேறு துறைகளும் நவீன மயமாக்கப் பட்டி ருப்பதனாலும் வாழ்க்கையைச் சித்திரித்துக்

காட்டும் இலக்கியங்களிலும் விஞ்ஞானத்தின் தாக்கங்கள் அதிகம் ஏற்படத்தான் செய்கின்றன. விஞ்ஞானத்தின் செல்வாக்கு ஏனைய துறைகளில் இருப்பது போலவே இலக்கியத் துறையிலும் விஞ்சி நிற்கின்றதென்றே கூற வேண்டும். இதனால் விஞ்ஞானக் கல்வி காரணமாக இலக்கியக் கல்வியின் முதன்மை குன்றிவிடுமோ என்ற அச்சம் கூட ஏற்பட்டுள்ளது. மேலும் விஞ்ஞானக்கல்வியில் பகுத்தாராயும் முறை, தொகுத்தாராயும் முறை போன்ற பயிற்சி முறைகள் இடம்பெற்றிருப்பது போலவே இலக்கியக்கல்வி உட்பட பல்வேறு கலைத்துறைகளிலும் பகுத்தறி முறையும் தொகுத்தறி முறையும் இடம்பெற்றுள்ளன. இத்தாக்கத்தின் காரணமாக இலக்கியத் திறனாய்வும் இலக்கிய வரலாறும் விஞ்ஞான முறையில் இன்று வளர்ச்சியடைந்த நிலையில் காணப்படுகின்றது. இக்காலச் செய்யுள் இலக்கியங்களிலும் சிறுகதை இலக்கியங்களிலும், நாவல் இலக்கியங்களிலும், விஞ்ஞான ஆராய்ச்சிகளால் கண்ட முடிவுகள், உண்மைகள் என்பன இழையோடியிருப்பதைக் காணலாம்.

இலக்கியத்தில் விஞ்ஞானத்தின் ஊடுருவல் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை நோக்கும் போது நல்ல விளைவுகள் மட்டுமன்றித் தீயவிளைவுகளும் ஏற்பட்டிருத்தலை அவதானிக்க முடிகிறது. அச்சு வாகன வசதி, வெளியீட்டு நிறுவனங்கள் முதலிய விஞ்ஞான சாதனங்களின் துணை காரணமாக இலக்கியங்கள் தோன்றவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. உலகில் ஏராளமான பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வெளிவருகின்றபடியால் எழுத்தாளர்களுக்கும், ஆக்க இலக்கிய முயற்சிகளுக்கும், இலக்கிய விமர்சன முயற்சிகளுக்கும் ஊக்கம் அளிக்கப்படுவதோடு புதிய புதிய இலக்கியங்கள் பலவும் தோன்றுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவை போன்ற நல் விளைவுகள் காணப்படுகின்ற அதேசமயம் நவீன இயந்திரமயமான வாழ்க்கைக்கு விஞ்ஞானம் வழிவகுத்தமையாலும் ஓய்வு நேரம் மிகக்குறைவாக இருப்பதனாலும் மனிதனது தேவைகளும் ஆசைகளும் பல்கிப் பெருகியதனாலும் உயர்ந்த நீண்ட இலக்கியங்கள் பலவற்றை இக்காலத்தில் மனிதன் வாசிக்கவோ அனுபவிக்கவோ முடியாதுள்ளது.

பழைய இலக்கியங்களிலே புலவர்கள் தமது கற்பனையால் உருவாக்கி விட்ட பாத்திரங்கள் சாகாவரம் பெற்றுள்ளன. இப்பாத்திரங்கள் பெரும்பாலும் காதல், வீரம், அன்பு, பெருமை, பொறாமை, வஞ்சனை போன்ற அடிப்படையான மனித உணர்ச்சிகளை அழகாகச் சித்திரித்துக் காட்டுவனவாகும். ஆதலால், அவை காலத்தை வென்று என்றும் எமது நினைவில் நிலைபெற்றிருக்கின்றன. கும்பகர்ணனது சகோதர பாசமும், சீதையின் பெண்ணலமும், கர்ணனின் கொடைச்சிறப்பும், கண்ணகியின் கற்புச்சீற்றமும், சகுனியின் வஞ்சனையும், தர்மனின் பொறுமையும், துரியோதனனின் பொறாமையும் எம் உள்ளத்தில் ஆழப்பதிந்திருக்கின்றன. இத்தகைய இலக்கியங்களை எத்தனை முறை படித்தாலும் அலுப்புத் தட்டுவதில்லை. அதனால் தான் இவை 'பயில் தொறும் பயில் தொறும் நூல் நயம் பயப்பன' என்று கூறப்பட்டன. இதற்கு மாறாக இக்கால இலக்கியங்களில் உருவாக்கி விடப்படும் பாத்திரங்கள் உளவியலுக்கும் நடைமுறைக்கும் எவ்வளவுதான் பொருத்தமாக இருப்பினும் வாசகர்களின் நினைவில் நிலைத்து நிற்பவையல்ல. ஒரு நாவலையோ சிறுகதையையோ வாசித்து முடிந்ததும் அவற்றில் வரும் பாத்திரங்களும் எம் நினைவை விட்டு நீங்கி விடுகின்றன. பரபரப்பான இக்கால வாழ்க்கைச் சூழலில் தோன்றிய இலக்கியங்களுக்கு இத்தன்மை இருப்பது விஞ்ஞானத்தின் தாக்கத்தினாலேயே எனலாம்.

முடிவாகக் கூறுமிடத்து மனிதன் ஒரு பூரணத்துவ வாழ்க்கை வாழ வேண்டுமாயின்,

சம நிலையிலான கல்வியைப் பெற வேண்டுமாயின் அவனுக்கு விஞ்ஞான அறிவும் வேண்டும், இலக்கிய அறிவும் வேண்டும். மூளை வளர்ச்சியடைய விஞ்ஞான அறிவு வேண்டும். உள்ளத்து உணர்வுகள் பண்படைய இலக்கியம் வேண்டும். மனிதன் மூளை மட்டும் உடையவனல்லன். உள்ளமும் உடையவன். எனவே மனிதனது சிந்தனை ஆற்றலை வளர்த்து மூளையால் அறியும் அறிவை விஞ்ஞானம் வளர்க்கின்றதென்றால் அவனைப் பரந்த உள்ளம் கொண்டவனாகவும் உயர்ந்த உணர்ச்சிகள் உடையவனாகவும் அழகியல் நயப்பு உடையவனாகவும் எல்லாவற்றிற்கும் மேலாக மனிதப் பண்புகள் நிறைந்தவனாகவும் ஆக்குவதற்குப் பயன்டுவது இலக்கியக் கல்வியே ஆகும். மனிதனுக்கு மூளை அறிவு மட்டும் இருக்குமாயின் அவன் ஒரு கணினியைப் போல் இயந்திரமாக இருப்பான். அது போலவே உள்ளம் மட்டும் உயர்ந்த நிலையில் உள்ளவன் இவ்வுலகில் வாழமுடியாதவன், வாழத்தெரியாதவன் ஆவான். எனவே மூளையும் உள்ளமும் ஒரு சேர வளர்ச்சியடையும் போதே மனிதன் பூரணத்துவம் பெறுகின்றான். இதனால் விஞ்ஞானக் கல்வியும் தம்முள் பிணங்காமல் இணங்கி நிற்றல் மனிதகுல முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவும்.

**செ. வானதி**
தரம் 10A

## அறிந்து கொள்ளுங்கள்!

### சிறுபொழுது

| | | | | |
|---|---|---|---|---|
| காலை | - | 6.00 மணி - | 10.00 | |
| நண்பகல் | - | 10.00மணி - | 14.00 | , |
| எற்பாடு | - | 14.00மணி - | 18.00 | |
| மாலை | - | 18.00மணி - | 22.00 | |
| யாமம் | - | 22.00மணி - | 02.00 | |
| வைகறை | - | 02.00 மணி - | 06.00 | |

# இன்றைய வாழ்வில் இசைத் துறையின் பங்களிப்பு

"இசையால் வசமாகா இதயம் எது" என்பார்கள். உலக உயிர்கள் அனைத்தும் இசைக்கு கட்டுப்பட்டவை. பாம்புகூட மகுடி இசைகேட்டு ஆடுகிறது. இசைகேட்டு பயிர்கள் வளர்வதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. அமிர்தவர்ஷினி இராகத்தைப் பாடி மழையை பொழிய வைக்கலாம் என அறிஞர்கள் கூறுகின்றனர். "ஏழிசையாய் இசைப்பயனாய்" என்றும் "தமிழோடு இசைப்பாடல் மறந் தறியேன்" என்று நாயன்மார்கள்பாடியுள்ளனர். அலைபாயும் மனதை அமைதிகொள்ளச் செய்வது. இசை துன்பத்தில் துவழும்போது மனிதனுக்கு தோணியாய் உதவி செய்வது. இசை இன்பத்திலும், துன்பத்திலும் இறை வனை துதிப்பதற்கும், குறையை எடுத்துச் சொல்வதற்கும் வழி சமைக்கின்றன. இதனால் மனித வாழ்வுடன் பின்னிப் பிணைந்து, இரண்டறக் கலக்கப் பங்களிப்புச் செய்வது இசை என்பதை நாம் உணருகின்றோம்.

ஒரு மனிதனின் முழுமையான வாழ்வின் சகல கட்டங்களிலும் இசையானது ஆதிக்கம் செலுத்துகின்றது. பிறப்பிலிருந்து இறப்பு வரை வாழ்க்கையானது இசையுடன் சங்கமித்து விடுகிறது. குழந்தை பிறந்ததும் தாலாட்டு இசைக்கப்படுகின்றது. "ஆராரோ ஆரிவரோ" என்றவாறு இசையும் உணர்ச்சியும் கலந்ததாக தாலாட்டுப் பாடல்கள் அமைகின்றன. மனித இனத்தில் அனைத்து சாதியினரிடையேயும் இனம், மதம், மொழி, பண்பாடு ஆகிய எல்லைகளுக்கு அப்பால் தாலாட்டுப்பாடல் முக்கியத்துவம் பெறுகிறது. தாயின் தாலாட் டிலே குழந்தை கண்ணுறங்குகின்றது. உலகின் எந்த மொழியிலும் நாட்டுப் புறப் பாடல்களே முதலில் தோன்றின. அவற்றின் அடிப்படை இசையும் உணர்ச்சியுமாகும். பல்வேறு தொழிலைச் செய்யும்போது களைப்பு நீங்கி உற்சாகம் பெற இவை பாடப்படுகின்றன. அருவி வெட்டுப் பாடல், குளிர்த்திப் பாடல், ஏர் முனைப்புப் பாடல், தாலாட்டுப் பாடல், காதல் பாடல், விளையாட்டுப் பாடல், ஒப்பாரிப்பாடல் என பல வகையான நாட்டுப்புறப் பாடல்கள் காணப்படுகின்றன. இவை இலக்கண ரீதியாக அமையவில்லை. மனதிலுள்ள எண்ணங்களையும் இனிய இசையையும் இவை வெளிப்படுத்துகின்றன. காலப்போக்கில் நாட்டார் பாடல் ஒழுங்கு படுத்தப்பட்ட பண்கள்/இராகங்கள் வகுக்கப் பட்டு தாளவரிசைகளுடன் இலக்கண ரீதியாக செம்மைப் பாடல்களாக மாறின. இன்று கிராமியப் பாடல்கள் கர்நாடக சங்கீதப் பாடல்கள், மெல்லிசைப் பாடல்கள் எனப் பல விதமாக இசைக்கப்படுகின்றன.

மேல்நாட்டு இசை மரபுகளை பின்பற்றி தமிழர்கள் மத்தியிலும் மேல்நாட்டு இசைப் பழக்கம் உருவாக்கப்படுகின்றன. மெலோடி இசை, பொப் இசை, ஜக் இசை என்றவாறும் பாடல்கள் இனங் காணப்படுகின்றன. இரசிகர்களும் எல்லா வகை பாடல்களையும் அனுபவித்து மகிழ்கின்றனர். தமிழர் வாழ் வியலைத் தாலாட்டை அடுத்து பிள்ளைப் பாடல்கள், காதல் பாடல்கள், நலங்குப் பாடல்கள், தோழமைப் பாடல்கள் என்ற வாறு ஒப்பாரிப் பாடலுடன் வாழ்க்கை முடி வுறுவதனை காண்கிறோம்.

இன்றைய உலகில் தகவல் தொழினுட்ப சாதனங்களின் விரிவாக்கத்தால் தொடர் பாடலில்மிகவும்சுருக்கம்ஏற்பட்டுள்ளது. இசை என்பது எல்லோரையும் ஈர்க்கும் கருவியாக விளங்குகிறது. நாட்டுப்புறக் கலைகளுடன் மேடை நாடகங்கள், இசை நாடகங்கள், திரைப்படங்கள், தொலைக்காட்சிகள், இணையத்தளங்கள் என்றவாறு வெகுசனத்

தொடர்பு சாதனம் பலவும் பல தரப்பட்ட இசையை, இசை நிகழ்ச்சிகளை மக்களுக்கு வழங்குகின்றன. இவற்றை ரசிப்பதற்கு மக்கள் முழுமணி நேரத்தை செலவிடுகின்றார்கள். இவை தவிர தனிப்பட்ட கச்சேரிகள் பலவும் நிகழ்கின்றன. ஆனால் தற்காலிக இசையானது மக்கள் மனங்களில் குறிப்பாக இளைஞர்களிடத்தில் பலவீனங்களை ஏற்படுத்தி விடுகின்றது. கால்களையும் கைகளையும் ஆட்டக்கூடிய வெற்று ஆரவாரம் மிக்க துள்ளல் இசைக்கு இளம்பராயத்தினர் அடிமையாகிவிடுவதை காணமுடிகின்றது. மனதைத் தாலாட்டக்கூடிய, உள்ளத்தில் நல்ல எண்ணங்களை விதைக்கக்கூடிய, பொருள் நிறைந்த பாடல்களின் இசையை தவிர்த்து வன்முறை, பாலுணர்ச்சி, பிறமொழி பெயர்ப்பு / கலப்பு, வெற்றுச் சொற்கள் இடம்பெறல் முதலானவற்றை உள்ளடக்கிய பாடல்களின் இசை காதுகளை ஆக்கிரமித்து கொண்டுள்ளது.

எமது வாழ்வில் இசையானது பூமாலையாக அமைவது மங்களகரமானது, மனதை செம்மைப்படுத்துவது. வாய்ப் பாட்டினாலும் இசைக்கருவியினாலும் இசையானது எழுப்பப்படுகின்றது. "சரிகமபதநி" எனும் சப்த இராகங்களை ஆதாரமாகக் கொண்டது. இனிய இசை மூலம் உள்ளத்தையும் உலகையும் ஆட்சி செய்ய முடியும். பெருங்கடலின் முழக்கம், பறவைகளின் ஒலிகள், தென்றலின் மூலம் மலர்கள் அசைந்தாடுதல், இடி முழக்கம், விலங்குகளின் வேறுபட்ட தொனிகள், மானிட குரல்கள் எழுப்பும் யாலங்கள் என உலகின் பல்வேறு ஒலிகளையும், ஓசைகளையும் இசையினுள் அடக்கிவிட முடியும் என்பதையும் இசை அறிஞர்கள் கூறியுள்ளனர். இதனைப் பரீட்சித்தும் காட்டியுள்ளனர்.

தமிழர்கள் முத்தமிழின் ஒரு பகுதியாக இசைத் தமிழைக் கருதினர். அழகியற் கலையில் முதலாவதாக அதனைப் போற்றி வருகின்றனர். சமய, சமூக சடங்குகள் அனைத்திலும் இசையை முக்கியமாகக் கொண்டுள்ளனர். மங்களகரமான எந்த நிகழ்ச்சியும் நாதஸ்வரம், தவில் ஆகியவற்றோடு தொடங்குகின்றது. மரண வீடுகளில் பறை மேளம் அடிக்கப்படுகிறது. சம காலத்தில் சில இடங்களில் "பாண்ட்" இசையும் இசைக்கப்படுகின்றது. ஆலயங்களில் பல்வேறு இனிய வாத்திய இசைகளுடன் துதிப் பாடல்களும் இடம்பெறுகின்றன. மக்கள் சார்ந்த எந்த நிகழ்ச்சிகளிலும் இசைக்கு கணிசமான பங்களிப்பு உண்டு. இதை விட திரை இசையின் கவர்ச்சியும் ஈர்ப்பும் தமிழுலகம் முழுவதையும் அடக்கி வைத்துள்ளது. எனவே நமது வாழ்வின் எல்லா கட்டங்களிலும் இசை பயன்படுத்தப்படுகிறது என்பதை மறுக்க முடியாது. "இசைத்தமிழ் நீ செய்த அருஞ்சாதனை" என்றார் கவிஞர். ஒருவர் நாட்டையும் நாதத்தால் வென்றிடுவார் என்றார் இன்னொரு கவிஞர் இசைக்கு அடிமையானவர்களும், மயங்கியவர்களும், வென்றவர்களும் ஏராளம் பேர் உள்ளனர். இசைக்கு அசையாத மனம் வெறுங்கல்லே. எனவே நாமும் எது நல்ல இசை என்பதை உணர்ந்து புரிந்து அதற்கேற்ப இசை மீது பக்தி கொண்டு வாழ்வில் பயன் பெறுவோம்.

**க. தேனுகா**
தரம் 10C

# செய்யும் தொழிலே தெய்வம்

"செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்

திறமைதான் நமது செல்வம்"

என்பது பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல் வரிகளாகும். நாம் எந்தத் தொழில் செய்கிறோம் என்பது முக்கியமல்ல, எப்படிச் செய்கிறோம் என்பது தான் முக்கியம். செய்யும் தொழிலில் உயர்வு, தாழ்வு என்ற பேதம் எதுவுமில்லை. பேதம் பேசுவதும் தவறு. செய்யும் தொழிலை தெய்வம் என நாம் கருதவேண்டும். செய்யும் தொழிலில் நமது திறமை பளிச்சிட வேண்டும். அதுவே மிக முக்கியம் என்பதை உணர்தல் வேண்டும்.

தொழில்கள் எல்லாம் சிறப்புக்குரியன. அவை நம் வாழ்வுக்கு வளம் அளிப்பன. அவற்றை நாம் போற்ற வேண்டும். அதனையே மகாகவி பாரதியாரும்,

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!<br>
இயந்திரங்கள் வகுத்திடுவீரே!<br>
கரும்பைச் சாறு பிளிந்திடுவீரே!<br>
கடலில் மூழ்கி நன் முத்தெடுப்பீரே!<br>
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்<br>
ஆயிரந் தொழில் செய்திடுவீரே!<br>
பெரும் புகழ்நுமக் கேயிசைக் கின்றேன்<br>
பிரம தேவன் கலையிங்கு நீரே!

எனத் தொழிலையும் அத் தொழிலை மேற்கொள்ளும் தொழிலாளர்களையும் மிகவும் உயர்வாகப் பாடுகின்றார். கைவருந்தி உழைப்பவர் தெய்வம் என்று வியந்து பாராட்டுகின்றார். தொழிலாளர்களை பிரம்ம தேவனாகவும் தெய்வமாகவும் உருவகித்துக் காட்டுவதன் மூலம் தொழில் செய்வோரின் சிறப்பினை இவ்வுலகிற்கு உணர்த்திக் காட்டுகின்றார் பாரதியார்.

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்

ஆயிரம் தொழில் செய்திடுவீரே"

என்று தொழில் செய்ய முன்வாரீர் எனப் பாடுகின்றார். இதன் மூலம் தொழில் செய்வோரை போற்றுகின்ற பாரதி தொழில் செய்யாது வீணில் உண்டு களித்திருப்போரைக் கண்டிக்கவும் தவறவில்லை.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்

உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்

என்று தொழிலின் பெருமையை இமயத்தின் உச்சியில் ஏற்றி வைக்கின்றார். பாரதி வழிவந்த பாவேந்தர் பாரதிதாசனாரும்,

"சித்திரச்சோலைகளே உமை அன்று

திருத்த இப்பாரினிலே அன்று

எத்தனை தோழர் தம்

இரத்தம் சிந்தினரோ உங்கள் வேரினிலே"

என்கிறார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும் பாடுபடும் பாட்டாளி மக்களைப் பாராட்டத் தவறவில்லை,

"பாடு படுபவர்க்கே இந்தப்<br>
பாரிடம் சொந்தமையா<br>
காடு திருத்தி நல்ல நாடு<br>
காண்ப தவரல்லவோ?" என்கிறார்.

தொழில் மகத்துவத்தை தொழிலாளர்களின் உழைப்பை மதித்துப் போற்றாத சமூகம் ஒருபோதுமே எழுச்சி பெற முடியாது என்பதை இன்றைய உலகில் நாம் நிதர்சனமாகக் காண முடிகிறது. இதனைத்தான் செய்யும் தொழிலை தெய்வமாகக் கருதிச் செயற்படவேண்டும் அவற்றுள் பேதம் காணுதல் கூடாது என வலியுறுத்தப்படுகின்றது.

"வையகம் காப்பவரேனும் - சிறு

வாழைப்பழக்கடை வைப்பவரேனும்
பொய்யகலத் தொழில் செய்து - பிறர்
போற்றிட வாழ்பவர் எங்ஙனும் மேலோர்"

எனும் பாரதியின் கூற்றை நாம் சிந்தையிற் கொள்ளுதல் வேண்டும்.

நியூயோர்க் மருத்துவக் கல்லூரியில் பணிபுரியும் டாக்டர் ஸாம் ஜேனஸ் என்பவர் ஏறத்தாழ இருநூறு கோடீஸ்வரர்களை நேர்கண்டு உரையாடியுள்ளார். உழைப்பால் முன்னுக்குவந்த கோடீஸ்வரர்கள்எல்லோருமே தங்கள் அந்தஸ்துக்கு குறைவு என்று எந்த வேலையையும் குறைத்து மதிப்பிடுவதில்லை. எந்த வேலையைச் செய்யவும் இவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்கிறார். இந்த மனப்பான்மை உள்ளதால்தான் அவர்கள் உலக அரங்கில் முடிசூடா மன்னர்களாகத் திகழ்கிறார்கள். செய்யும் தொழிலே தெய்வம் எனக் கருதுவதால்தான் அவர்கள் தொழிலில் உயர்ந்து கோடீஸ்வரர்களாக விளங்குகிறார்கள்.

இவர்களோடு நம்மவர்களை ஒப்பிட்டுப் பார்ப்போமாயின் நமது தாழ்வு நிலைக்கான காரணம் நன்கு விளங்கும். உழைப்பே தெய்வம் என்பதை நாம் நன்குணர்தல் வேண்டும். கைகளைக் கொண்டு உழைப்பவன் பாட்டாளி. கைகளோடு மூளையையும் பயன்படுத்தி உழைப்பவன் வினைஞன். கைகள், மூளை இவற்றுடன் இதயத்தையும் செலுத்தி உழைப்பவன்தான் கலைஞன் என்கிறார் லூயி நிசர் என்பவர். இக் கருத்தை நாம் ஈரநெஞ்சில் இறுகப் பற்றிக்கொண்டால் எத்தொழிலையும் கேவலமாக எண்ணி பழித்துரைக்கும் எண்ணமே நம் இதயத்தினுள் எழா.

உழைப்பால் உயர்ந்த இரஷ்ய மக்களின் கருத்தை நாம் மனதிற்கொள்ளவேண்டும். உத்தரவால் வாழ்கிறான் பணக்காரன் உழைப்பால் வாழ்கிறான் ஏழை என்பது அவர்கள் தம் உள்ளத்து ஏந்தும் உயரிய கருத்தாகும். உழைப்பின் மகிமையை உணர்த்த இதைவிட வேறு வாசகமும் வேண்டுமோ?

"ஒரு கவிதை எழுதுவதில் உள்ள பெருமை ஒரு நிலத்தை உழுவதில் இருக்கிறது" என்கிறார் ஜோர்ஜ் வாஷிங்டன். உழவுத்தொழில் மட்டுமல்ல அனைத்துத் தொழிலுமே வந்தனைக்குரியன. "தாழாதே" "எவரையும் தாழ்த்தாதே" என்கிறார் எமிலி ஜோலா. அதனையே நம் இலட்சியமாகக் கொள்ள வேண்டும். கைத்தொழில் செய்பவராகினும் என்ன? எல்லோரும் மனிதர்களே .... அந்த எண்ணம் இருந்தால் நாம் வாழ்வோம். எந்நாளும் புகழ் சேரும்.

"என்ன வளம் இல்லையிந்தத் திருநாட்டில்?
ஏன் கையை ஏந்தவேண்டும் வெளிநாட்டில்
ஒழுங்காய்ப் பாடுபடு வயற்காட்டில்
உயரும் உன் மதிப்பு அயல்நாட்டில்"

என்ற திரைப்படப் பாடலை ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்போமாயின் நமது பணி என்ன என்பது புலனாகும். உழவுத் தொழில் உன்னதமான தொழில். உழவன் சேற்றிலே கால் வைப்பதால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடிகிறது என்ற உண்மையை நாம் மனதிற்கொள்ளவேண்டும்.

உழவுத்தொழில் மட்டுமல்ல ஒவ்வொரு தொழிலுமே உயர்ந்ததுதான். உன்னதமான தொழில்களை நாம் புறக்கணித்துவிட்டு ஆடை நலுங்காமல் நாற்காலிகளில் அமர்ந்திருக்கும் பதவிகளைத் தேடி காலத்தை வீணே போக்குகின்றோம். இந்நிலை மாறவேண்டும். எத் தொழிலையும் ஏற்றுச் செய்திடும் மனநிலை பெற வேண்டும். அத்தகு மனநிலை பெற்றிட்டால் செய்யும் தொழிலே தெய்வம் எனக் கருதி நாம் வாழ்ந்திட முடியும்.

**வி. பஷ்னா**
தரம் 10F

# முதுமை

வாழ்வின் வினாக்களுக்கு அர்த்தமற்ற பதில்களாய்
ஆழ்ந்த சிந்தனையில் ஆருமின்றி தனித்திருக்க
சூழ்ந்த நோய்களுடன் சொந்தமின்றி தவித்திருக்க
ஆழ்பவன் தந்த கொடுமையான சாபம் இது.

இளமைக்கு ஓய்வாக சிலசமயம் பாரமாக
பிள்ளைக்குப் பாரமாகத் தம் மனங்கள் ஈரமாக
முதியோர் இல்லங்கள் முதுமையால் நிறைந்திருக்க
அதில் அவர்கள் அழுகுரல் மட்டும் ஒலித்திருக்கும்

அனுபவங்கள், ஆற்றல்கள் உடலெங்கும் செறிந்துண்டு
அணுஅணுவாய் சாவதும் இந்த முதுமையால் தானே
அறிவற்ற பேதைகளாய் பெட்டிக்குள் பாம்புபோல
அடங்கிக்கிடப்பதும் இந்த முதுமையால் தானே.

ஆணவம், கன்மம், மாயையை துறந்த நிலை
மாண்புடன் வாழ இறைவன் வகுத்த காலநிலை
அன்புடன் சொல்லி மழலை கொஞ்ச யாருமில்லை
பண்புடன் பணிந்து வாழும் இந்த முதுமைநிலை

கண்ணுடன் கருத்தாய் கவனிக்கத் துணையின்றி
உண்ணும் உணவை தந்தருள வள்ளலின்றி
பணம் கொடுத்து வேலைக்கு ஆள்வாங்க வேண்டும் என
பரிதாப நிலை தான் இம் முதுமைக்காலத்திலே.

சாதனம் கூடியதும் சாகசங்கள் மறைந்தனவே
ஆடம்பரம் கூடியதும் அன்புபாசம் குறைந்ததுவே
நாகரிகம் வளர்ந்ததும் நன்றிக்கடன் மறந்ததுவே
ஈன்றவர் முதுமையில் பிள்ளைமனங்கள் தளர்ந்தனவே.

அன்பு வேண்டப்படும் முதுமைக் காலமிது
ஆபரணம் தேவையில்லை அரவணைப்பு வேண்டுமே
அழகு தான் தேவையில்லை அன்பான மனம் வேண்டும்
அவையிரண்டும் கிடைத்துவிட்டால் முதுமையும் சொர்க்கமாகும்.



**க. சங்கவிகா**
தரம் 10C

# முதியோர் உலகை ஒளிரச் செய்வோம்

ஐக்கியநாடுகள் தாபனம் முதியோர்களுக்கென்று முதியோர் தினத்தைப் பிரகடனப் படுத்தியுள்ளது. முதியோருக்கு என்று ஓர் தினம் வேண்டுமா? என்று சிலர் சிந்திக்கலாம். முதியோர் சென்ற காலத்தின் சிறுவர்கள், மனிதர்கள், நாட்டுக்காக உழைத்தவர்கள் ஆகையால் சமூகம் முதியோரை அறியவும், முதியோர் தம்மை உணரவும், முதியோர் தினம் வாய்ப்பளித்திருக்கின்றது. இவர்கள் வயதால் மட்டும் முதியோரெனக் கொள்ளக்கூடாது. அனுபவத்தாலும் அறிவாற்றலாலும் முதிர்ந்த முதியோர்களும் இருக்கின்றார்கள். கல்லாத முதியோர்களும் இருக்கின்றார்கள். இவர்களும் உலகில் ஒவ்வொரு நாடுகளிலும் உள்ளனர். ஆகையால் தான் முதியோர் உலகு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விருத்தியடைந்த நாடுகளில் முதியோர் உலகு ஒளிபெற அந்நாட்டு அரசும், தனியாரும் பெருமளவு பங்களிப்புச் செய்கின்றனர்.

வறிய நாடுகளில் தான் முதியோர் வாழ்வு ஏழ்மையில் கிடக்கின்றது. இங்கும் அரச சேவையில் இருந்தோர்கள், உபகாரச் சம்பளம் பெற்றுத் திருப்தியாக வாழ்கின்றனர். கோடீஸ்வரர்களாகஇருந்தவர்கள்இப்பொழுது முதியோர் இல்லத்தில் ஒரு ஏழ்மையாளர்களாக வாழ்கின்றனர். இத்தகைய ஆதாரம் எதுவும் அற்றோர்கள் தான் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். இவர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டியது அரசும், செல்வந்தர்களுமல்லவா? என்ற கேள்விக்கு பதில்யாரிடம் உள்ளது? இச்சந்தர்ப்பத்தில் நாம் அன்னை திரேசாவை நினைவு கூரவேண்டும். அன்னையார் சில இடங்களில் முதியோர் இல்லங்களை அமைத் திருக்கிறார்.

முதியோர் உலகம் ஒளிபெறவேண்டுமாயின் ஆயிரமாயிரம் அன்னை திரேசா தோன்ற வேண்டும். உலக வளங்கள் பகிர்ந் தளிக்கப் படவேண்டும். பாரதி கூறியதுபோல் ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழிக்கவேண்டும். இத்தகைய முதியோரைப் பேணவேண்டிய பொறுப்பு சமூகத்தில் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் உண்டு. முதியவர்கள் அரசினாலும் சமூகத்தினாலும் பேணப்படவேண்டும். அவர்கள் வாழ்வு ஒளி பெற்றால்தான் அவருக்குப் பின் நாட்டிற்குச் சேவை செய்பவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும். நாட்டில் நல்ல நல்ல மனிதர்கள் தோன்றுவதற்கு முதியோர் சென்ற பாதையே வழிகாட்டுவதாக அமைந்துள்ளது. இன்று 60 வயதிற்கு மேற்பட்டோர் முதியோர் எனக்கருதப்படுகின்றனர். காரணம் நரை, திரை, மூப்பு என்பன அவர்களைச் சார்ந்து விட்டன. ஆகையால் தான் காவோலை விழக்குருத்தோலை சிரிக்கும் நிலை அறவே நீங்க வேண்டும், நீங்கினால் முதியோர் உலகு ஒளிபெறும். ஆம், முதியோர் உலகை ஒளிமயமாக்குவோம் என்ற தொனிப் பொருளில் இம்முறை முதியோர் தலைசிறந்து விளங்கவேண்டும். மெழுகுவர்த்திபோல் தம் வாழ்வை உருக்கி எம் வாழ்வை ஒளி மயமாக்கியவர் முதியோர் என்ற கடவுள் பிள்ளையின் கவலை அறிந்து சிரிக்கச் செய்த பெற்றோரை ஒரு மனிதராகக் கூடக் கருதாமல் வயதாகும் போதும் நோய் ஏற்படும் போதும் முதியோர் இல்லத்துக்குக் கொண்டு செல்கின்ற பிள்ளைகள் எமது நாட்டில் வளர்கின்றார்கள்.

நாட்டில் உள்ள அனைவரும் தமது பெற்றோரைக் கடவுளாக வழிபட்டால் எமது நாட்டுக்கு ஏன் முதியோர் இல்லம்? பெற்றோரின் பணத்தினை அனுபவித்துவிட்டு வயதாகும் போது முதியோர் இல்லத்தில் விட்டுச் செல்லும் பிள்ளைகள் ஏன் இவ்வுலகில் பிறக்கின்றார்களோ தெரியவில்லை. ஒரு

உயிரின் மதிப்புத் தெரியாத ஒவ்வொருவரும் அறிவு இல்லாதவர்களாக வாழ்கின்றார்கள். என்றோ ஒருநாள் நாமும் முதுமையை அனுபவிக்கத் தான் போகின்றோம். எமது இந்த இளமை என்றும் நிரந்தரமில்லை என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

இறைவனின் சிம்மாசனத்தில் பெற்றோரை வைத்திருப்பது ஒவ்வொரு பிள்ளைகளினதும் கடமையாகும். அதில் சந்தோசப்படுகின்ற ஒவ்வொரு பிள்ளையும் தான் உலகில் வாழ்வு எனும் இலட்சியத்தை அடையப் பிறந்தவர்கள் ஆவார். பெற்றோரின் சந்தோசத்தைப் பறிக்கின்ற எந்தவொரு பிள்ளையின் வாழ்க்கையிலும் சந்தோசம் நிலைத்ததில்லை.

"ஒரு வாழ்க்கையை மாற்றுவது ஒவ்வொரு
மனிதரது
கரங்களிலே உள்ளது"

ஜெ. பிரித்தா
தரம் 10E

## அறிந்து கொள்ளுங்கள்!

| பத்துப்பாட்டு நூல்கள் | புலவர் |
|---|---|
| 1. திருமுருகாற்றுப்படை | நக்கீரர் |
| 2. பொருநராற்றுப்படை | முடத்தாமக் கண்ணியார் |
| 3. பெரும்பாணாற்றுப்படை | உருத்திரங்கண்ணனார் |
| 4. சிறுபாணாற்றுப்படை | நல்லூர் நந்தத்தனார் |
| 5. மலைபடுகடாம் | பெருங்கௌசிகனார் |
| 6. குறிஞ்சிப்பாட்டு | கபிலர் |
| 7. முல்லைப்பாட்டு | நப்பூதனார் |
| 8. பட்டினப்பாலை | உருத்திரங்கண்ணனார் |
| 9. நெடுநல் வாடை | நக்கீரர் |
| 10. மதுரைக்காஞ்சி | மாங்குடி மருதனார் |

# தமிழ்மொழியின் பெருமையை உலகறியச் செய்த தனிநாயகம் அடிகளார்

எமது ஈழத்து அன்னை பெற்றெடுத்த மறைந்தும் மறையாத மாணிக்கம் தனிநாயகம் அடிகளார். இவர் பிறந்த மண் பெருமை கொள்ள உலகமே போற்ற வாழ்ந்த பெருந்தகை இத்தகைய சிறப்புக்களுக்கும் பெருமைகளுக்கும் உரிய பெருமகனாராக விளங்குபவர் தனிநாயகம் அடிகளாரே ஆவார்.

தனிநாயகம் அடிகளார் யாழ்ப்பாணத் தீவகத்தின் கரம்பொன் கிராமத்தில் 1913ஆம் ஆண்டு இப் பூமியில் உதித்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைத் தனது கிராமப் பள்ளியிலே கற்றார். இவர் ஆங்கிலம், தமிழ், இலத்தீன், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை இடைநிலைக் கல்வியில் பயின்றார். பின்னர் இறைபணியினைச் சிறப்பான முறையில் மேற்கொண்டு இறையியல் கல்வியைக் கற்கத் தொடங்கினார்.

அடிகளார் உரோமிற்குச் சென்று இறையியல் கலாநிதிப் பட்டம் பெற்றுக்கொண்டார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து தமிழில் எம். லிட் பட்டத்தைப் பெற்றார். இப் பட்டத்தை இவர் பெறுவதற்கு ''பழந் தமிழ்க் கவிதையில் இயற்கை'' எனும் பொருளில் ஆய்வினை நடாத்தினார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கில இலக்கியம் வளர்ச்சியுற்று இருந்தது. அக் காலத்தில் இந்தியாவிலும் இலங்கையிலும் தேசியவாதம் மற்றும் இனங்களுக்கிடையிலான எழுச்சி என்பவற்றுக்காக தமிழினை வலுவூட்டுவது முக்கியம் என்பதை அறிந்து கொண்டு தமிழிற்காக முன்னின்று உழைத்தார்.

1964ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற மாநாட்டில் கலந்த பேராசிரியர்களை ஒன்று கூட்டி தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தை உருவாக்கி தமிழியற் செயற்பாடுகளை விரிவாக்கினார்.

இவர் மெய்யியல், கல்வியியல், மொழியியல், சமூகவியல், நாட்டுப்புறவியல், அழகியல், இறையியல் போன்ற துறைகளில் தமிழ் இயல் ஆய்வை முன்னெடுத்தார். பின் நவீன ஆய்வின் பங்காளியாகவும் முன்னின்று உழைத்தார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்து, இலண்டன் பல்கலைக்கழகத்தில் ''தமிழ் இலக்கியம் வழியாகக் கல்வியியல்'' எனும் ஆய்வினை மேற்கொண்டு கலாநிதிப் பட்டம் வென்றார். அது மட்டுமன்றி இவர் ஜப்பான், தாய்லாந்து போன்ற நாடுகளிலே தமிழ்ப் பண்பாட்டின் எச்சங்கள் காணப்படுவதை அவதானித்து வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார்.

தனிநாயகம் அடிகள் தமிழ்ப் பண்பாட்டின் எச்சங்களைக் கண்டு பிடித்தது மட்டுமன்றி சுவடிகளிலும் ஏடுகளிலும் காணப்பட்ட தமிழியல் ஆவணங்களைத் தேடி அறிந்து கண்டு பிடித்தார். அது மட்டுமன்றி தமிழில் வெளிவந்த தொன்மையான நூல்களை இலண்டன் அருங்காட்சியகத்தில் பெற்று தனது ஆய்வுக்கு அவற்றை உட்படுத்தினார்.

அடிகளாரின் முயற்சி காரணமாக 1966ஆம் ஆண்டு முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது. இம் மாநாடானது மலேசியாவில் நடைபெற்றது. அம் மாநாட்டிலே பல ஆங்கில நூல்களையும் அடிகளார் வெளியிட்டார்.

இவர் தமிழின் அங்கீகாரத்தை அடையாளப்படுத்தும் நோக்கில் தமிழ்ப் பண்பாடு,

தமிழ்க் கற்கைக்கான ஆய்வு இதழ் ஆகியவற்றைத் தாமும் எழுதி தமிழியல் ஆய்வாளர்களைக் கொண்டு எழுதுவித்தும் பிரசுரித்தார்.

புலமை நிலையில் தமிழ்மொழிக்கும் அங்கீகாரத்தைப் பெறுவதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளையும் அடிகளார் மேற்கொண்டு வந்தார். கத்தோலிக்க மதத் துறவியான இவர் இந்து சமயப் பனுவல்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு அவற்றைக் கற்றமையும் அவற்றிலே பொதிந்திருந்த ஒப்புயர்வு அற்ற பக்தி நெறிகளின் ஆழங்களை வெளிப்படுத்தியமையும் முக்கிய அம்சமாகும்.

*1913ஆம் ஆண்டில் பிறந்து 1980 இல் இயற்கை எய்தும் வரை தமிழ் மொழியின் சிறப்பை நோக்கிய செயற்பாடுகளுக்காக உடல், பொருள், ஆவி அத்தனையையும் தியாக மனப்பான்மையுடன் நல்கினார் தனிநாயகம் அடிகளார்.*



கா. சித்தாரா
தரம் 10F

# அனைவருக்கும் கல்வி

''கல்வியும் சமூகவாழ்வும்'' என்ற கோஷம் இன்று உலக நாடுகள் எங்கும் ஓங்கி ஒலிக்கப்படு கிறது. அரசுகளின் இன்றியமையாக் கடமைகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது. ஒவ்வொரு நாடும் தனது வருமானத்தில் பெரும் பகுதியைக் கல்விக்காகச் செலவிடுகிறது. ஆனால் இதன் பயன்பாடு பூரணத்துவமுள்ளதாக அமைகிறதா? என்பது சிந்தனைக்குரியதாகவே விளங்குகின்றது.

கல்வியின் மூலமே ஒரு சமுதாயத்தின் பண்பாடும் விழுமியங்களும் அழிந்தொழியாது பாதுகாக்கப்பட முடியும். இந்நிலையில் மனித சமுதாயத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைப் போக்கி எல்லோரும் ஓர் இனம் என்ற உயர்ந்த குறிக்கோளுடன், சமத்துவமாகச் சகலரும் வாழ்வதற்குரிய வழியினைக் காட்டவல்லது கல்வி ஒன்றேயாகும். எல்லோரும் சமத்துவமாக, எல்லாம் பெற்று வாழ வேண்டுமாயின் அனைவருக்கும் உகந்த கல்வி அளிக்கப்படுதல் அவசியமாகும்.

நாம் வாழும் சமுதாயத்தின் ஒரு உடலாக உருவகிப்போமாயின் அந்த உடலில் உள்ள எந்த உறுப்பையும் நாம் ஏற்றது அல்ல என ஒதுக்கி விடமுடியாது. ஓர் உறுப்புக்கு ஊறு நேர்ந்தால் அது உயிரின் இயக்கத்திற்கே பாதிப்பை ஏற்படுத்திவிடும். இதேபோன்று தான் கல்வி என்பது ஒரு சமுதாயத்தின் உயிர் மூச்சாயமைந்துள்ளது. சமுதாய உறுப்புக்கள் யாவிலும் கல்வி தனது ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. அதற்குப் பங்கம் விளைந்தால் சமுதாயமே பெரிதும் பாதிப்புறும்.

கல்வி என்பது நமது கண் போன்றது. கல்விக்கண் இன்றேல் நாம் கண்ணிருந்தும் குருடராகவே கருதப்படுவோம். எனவே அனைவருக்கும் கல்வி அளிப்பதன் மூலமே சமுதாயம் ஒளிபடைத்த சமுதாயமாகத் திகழமுடியும்.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனையவர்"

என்பது வள்ளுவர் வாக்கு. மனிதன் விலங்காக வாழக்கூடாது அவன் மனிதனாக, மனிதப் பண்புள்ளவனாக வாழ வேண்டும். அதற்குக் கல்வியே அச்சாணி. ஒரு சமுதாயத்தில் ஒரு பகுதியினர் கல்வியறிவு படைத்த மனிதராகவும் மற்றப் பகுதியினர் கல்வியறிவில்லாத மாக்களாகவும் வாழ நேர்ந்தால் அந்தச் சமுதாயம் சீர்பெறமுடியாது. முழுச்சமுதாயத்திற்குமே அது பெரும் இழுக்காகும்.

'ஏழ்மையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்

இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்'

என்றார் பாவேந்தர். இங்குள்ள எல்லோருக்கும் கல்வி புகட்ட ஏற்றன யாவும் செய்யப் பட வேண்டும்.

'அனைவருக்கும் கல்வி' என்றால் குடிமக்கள் அனைவருக்கும் எழுத வாசிக்கத் தெரிந்தாற் போதும் என நாம் கருதிவிடக் கூடாது. ஒருவன் தான் பெற்றுக் கொண்ட கல்வியால் தனக்கும் தான் வாழும் சமுதாயத்திற்கும் பயன்படும் அளவிற்கு அவனது கல்வி அமைதல் வேண்டும். எல்லோரும் பொறியியலாளர்களாகவோ, பேராசிரியர்களாகவோ, மருத்துவர்களாகவோ ஆகிவிட வேண்டும் என எதிர்பார்ப்பதும் தவறு அவரவர் தம் ஆற்றலுக் கேற்ப தொழிற்றுறைக் கல்வியையோ, தொழில்நுட்பக் கல்வியையோ, நுண்கலைக்கல்வியையோ பெறும் வாய்ப்பினை நல்கிட வேண்டும். அத்தகைய வாய்ப்பும் வசதியும் கிட்டும் போதுதான் 'அனைவருக்கும் கல்வி' என்ற சொற்றொடர் அர்த்தமுள்ளதாக அமையும் என்பது உறுதி.

சு. தீபனா
தரம் 10F

# நினைவுகள்

வீடு பூராகவும் அமைதி நிலவியது. சந்தோசம் விடுமுறை தேடியது. நான் உட்பட அப்பா, அம்மா, அக்கா என அனைவரும் பரீட்சை மண்டபத்தில் அமர்ந்திருப்பது போல் அவரவர் ஸ்தானத்தில் ஏதோ ஒன்றை இழந்தது போல அமர்ந்திருந்தோம் அவ்வேளை என் அப்பா என்னருகில் வந்து ஏன் இப்படிப் பண்ணினாய். உன்னால் மறுபடியும் முயற்சி செய்தால் ஜெயிக்க முடியும். தோல்வியைக் கண்டு துவண்டு போய் அவசரத்தில் எந்த முடிவையும் எடுக்கக் கூடாது என்று 12 வருடங்களுக்கு முன் ஒரு தருணத்தில் எனக்குக் கூறிய அந்த அறிவுரையை நான் அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு. அன்றும் அவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கையில் என் நண்பன் என்னை உரத்த குரலில் அழைத்தான். அப்போது நான் சுயநினைவிற்கு வந்து மணி 8 ஆகிவிட்டதைப் பார்த்தேன் பின் நானும் அவனும் வீட்டிற்குப் புறப்பட்டுவிட்டோம். வீட்டிற்கு வந்த நான் கதிரையில் அமர்ந்தவாறு வானொலியில் பாடல் கேட்டுக் கொண்டிருந்தேன். அப்போது சுவரில் தொங்க விடப்பட்டிருந்த என் தந்தையின் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்க 12 வருடங்கள் பழமையான என் ஞாபக வலைக்குள் சிக்கிக் கொண்டு விட்டேன்.

அப்போது நான் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றிற்காகக் காத்திருந்தேன். பெறுபேறுகளும் சில மாதங்களில் வெளியாகின. நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். எனக்கு சிறந்த பெறுபேறு கிடைத்தது. அடுத்தது உயர்தரம் கற்க வேண்டி இருந்தது. சிறுவயதிலிருந்தே எனக்கும் சரி என் பெற்றோருக்கும் சரி என்னை வைத்தியராக்கிப் பார்க்க வேண்டும் என்னும் ஆசை இருந்தது. அதனால் என்னை என் அப்பா ஓர் விவசாயியாய் இருந்தாலும், என் ஊரில் விஞ்ஞானத்துறையில் கற்பதற்கான வசதிகள் இல்லாததாலும் என்னை வெளியூரில் கல்வி கற்க அனுப்பி வைத்தார். நான் அங்கு சென்று படிக்கத் தொடங்கினேன். இடையிடையே என் குடும்பத்தினரை எண்ணி அழுவதும் உண்டு. எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு நான் கல்வி கற்றேன். விஞ்ஞானப் பிரிவு என்பதால் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. ஆனாலும் என்னால் முடிந்தவரை கற்றேன். நான் சிலவேளைகளில் ஏதாவது சில்லறை வேலைகளிற்கும் செல்வேன். ஆனால் அது என்வீட்டிற்குத் தெரியாது. ஏனெனில் நான் என் அப்பாவின் கஷ்டநிலையை அறியாதவன் அல்ல.

நாட்கள் நகர்ந்து கொண்டு போனது. உயர்தரமும் இறுதி ஆண்டைக் கண்மூடித் திறப்பதற்கிடையில் எட்டிப்பிடித்து விட்டது. பரீட்சை ஆரம்பமானது நானும் என்னால் முடிந்தவரை முயன்று படித்து பரீட்சை எழுதினேன். ஆனாலும் என் மனதிற்குள் ஓர் இனம் புரியாத பயம் இருந்தது. அது எல்லோரிற்கும் வருவது தானே. நான் பரீட்சை எழுதி முடித்ததால் என் சொந்த ஊரிற்குச் சென்றேன். அங்கே என் அப்பா விவசாயம் செய்யும் போது நானும் அவருடன் சேர்ந்து வேலைகளைச் செய்வேன். அப்போது தான் எனக்கு என் அப்பா படும் கஷ்டம் அனுபவ ரீதியாய் உணர்த்தப்பட்டது. இவ்வாறு நாட்கள் உருண்டோடின. நான் என் நண்பர்களோடு ஊர் சுற்றிக் கொண்டிருந்தேன். பெறுபேறு வெளியாகிவிட்டது. என் பெறுபேறு என்னை அதிர்ச்சி அடைய வைத்தது. நான் வீட்டில் யாருக்கும் முதலில் பெறுபேற்றைக் கூறவில்லை.

மறுநாள் அதிகாலை 4 மணிக்கே எழுந்து வீட்டில் கடிதம் எழுதிவிட்டு உலக மகா முட்டாள் தனத்தைச் செய்ய வீட்டை விட்டு வெளியேறினேன். அது தான் தற்கொலை முதல் நாள் என் மனநிலை சரியாக இல்லை. என் பெற்றோர் என்னைக் கஷ்டப்பட்டு படிப்பித்ததற்குத் தான் இப்படி ஒரு ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டேனே. இவ்வளவு காலம் என்னைக் கஷ்டப்பட்டுப் படிக்க வைத்ததற்கு நான் கொடுத்த கைமாறு இதுதானா என என் மனச்சாட்சியை நான் கேட்டுக் கொண்டேன். எனக்குள் ஏதோவொரு குற்றவுணர்ச்சி போல் உறுத்திக் கொண்டிருந்தது. என் கண்கள் குளமாகின. என் அப்பா படும் கஷ்டங்கள் என் நினைவிற்கு வந்து என்னை மேலும் வாட்டியது. இதனாலே தான் நான் இம் முடிவை எடுத்தேன். நானும் காலை 4.30 இலிருந்து புகையிரதம் வரும் தண்டவாளத்திற்கருகில் நிற்கின்றேன். நேரம் மளமளவென போய்க்கொண்டிருந்தது. ஆனால் புகையிரதம் வந்தபாடில்லை. அப்பொழுது தான் வழியில் சென்ற இருவர் தங்களிடையே ''இன்று ஏன் ரெயின் ஓடேலயோ தெரியா'' என்று கதைத்துக் கொண்டு போனார்கள். என்னடா சோதனை நான் வீட்டில் கடிதமும் எழுதி வைத்துவிட்டு வந்து விட்டேன் புகையிரதம் வேறு இன்று ஓடவில்லை. என்ன செய்வது என யோசித்தேன். அப்போது நேரம் 5.40 வழமையாக வீட்டில் எல்லோரும் 6 மணிக்குத்தான் நித்திரை விட்டு எழும்புவார்கள். எனவே இப்போது அந்தக் கடிதத்தை யாரும் வாசித்திருக்க முடியாது என்ற நம்பிக்கையில் வீடு நோக்கி வேகமாகப் போனேன். நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் என்பது சரிதான்.

நான் வீட்டிற்குள் செல்கிறேன், ஒட்டு மொத்தக் குடும்பமும் அந்தக் கடிதத்தை வாசிக்க தொடங்கி ஒரு சில நிமிடங்கள் ஆகியிருக்கும் அப்பா என்னைப் பார்த்தார் நான் அவரைப் பார்த்தேன் விடயம் விபரீதம் ஆவதற்கிடையில் நான் அவரின் கால்களில் விழுந்து அழுதுவிட்டேன். அப்பாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கெஞ்சினேன். அப்பாவின் கண்களிலிருந்தும் ஏனையோர் கண்களில் இருந்தும் கண்ணீர் எட்டிப்பார்த்தது. எல்லோரும் மௌனம் சாதித்தனர். வீடு பூராகவும் பல மணிநேரம் மௌனம் நிலைகொண்டது. சில நாட்கள் இவ்வாறு நகர்ந்தன. வீட்டிலுள்ளோரினதும் நண்பர்களினதும் ஆசைப்படி மீண்டும் முயற்சி செய்து பார்ப்போம் என மீண்டும் படித்து பரீட்சைக்கு ஆயத்தமானேன். பரீட்சையும் எழுதினேன். பெறுபேறு வருவதற்கு ஒரு கிழமைக்கு முன் வீட்டிலிருந்து அக்கா (P) போன் செய்தார். "அப்பாவிற்கு சரியா உடம்பு முடியாம இருக்குது நீ சீக்கிரம் அங்க இருந்து ஊரிற்கு புறப்பட்டு வா'' என்றார். நான் பதற்றத்துடன் ஊரிற்குச் சென்றேன். அங்கே அப்பா மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு மரணப் படுக்கையில் இருந்தார். உறவினர்கள் வந்து வந்து சென்றனர். நான் அப்பாவின் அருகில் போய் அமர்ந்து கொண்டேன். அவரின் கைகளைப் பிடித்தேன். அப்போது அவர் ஏதோ கூற முற்பட்டார். ஆனால் அவர் குரல் தழுதழுத்தது. எனக்குப் பயமாக இருந்தது அப்பா என்னைப் பார்த்தவாறே வேற்றுலகம் சென்றார். என்னால் கவலையை போக்க முடியவில்லை. அம்மா, அக்கா உறவுகள் என எல்லாரும் கதறி அழுதனர். நான் ஒருவாறாகக் கவலையை அடக்கிக் கொண்டு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து முடித்தேன். பெறுபேறு வரும் நாளும் நெருங்கியது. பெறுபேறும் வந்தது. எனக்கு முன்பை விட மிகச் சிறந்த பெறுபேறு கிடைத்தது. ஆனால் என்னால் முழுமையாகச் சந்தோசப்பட முடியவில்லை. ஏனெனில் எனக்கு அறிவுரை கூறி இந்நிலைக்கு ஆளாக்கிய என் தந்தை தான் என்னருகில் இல்லையே. நான் அம்மாவுடன் சில காலம் தங்கியிருந்தேன். பின் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தில் கல்விகற்க வேண்டியதால் நான் வெளியூர் வந்துவிட்டேன். ஆரம்பத்தில் பகிடிவதைகள்

என கொஞ்சம் வெறுப்பு ஏற்பட்டது. எனினும் பொறுமையுடன் படித்தேன். சாதித்தேன் பின் என் அண்ணா என்னை (கூடப் பிறந்த அண்ணா அல்ல) மேற்படிப்பு படிக்க லண்டன் வரச் சொல்லி வற்புறுத்தினார். அதனால் தான் நான் லண்டன் வந்தேன். சொந்த ஊரை விட்டு இங்கே வந்து சூரியனைக் காணாமல் குளிரில் நடுங்கிக் கொண்டு ஒருவாறாகப் படித்தேன்.

என்ன தான் வெளிநாடு சொர்க்கம் போல் என்றாலும் சொந்த ஊரைப் போல்வராது தானே. ஊர் மண்வாசனை, பனைமரக்காடுகள், வயல் வரம்புகள், குடிசை வீடுகள், இவையெல்லாம் இங்கே கிடைக்காது. ஊரில் வரம்புகளில் நடந்த அனுபவம் குளத்தில் விளையாடிய ஞாபகம். ச்ச இப்ப... அக்காவிற்கும் நல்ல இடத்தில் திருமணம் செய்து வைத்தேன். அம்மா அக்காவுடன் இருக்கப் போவதாகக் கூறியதால் நான் அவரை இங்கு வரச் சொல்லி வற்புறுத்த வில்லை. லண்டனில் சொந்த வீடும் வாங்கினேன் ஆனாலும் என்னதான் நான் பெரிய பங்களா, கார் வாங்கினாலும் .எனக்கு கவலை தீரவில்லை. என் தந்தை ஆசைப்பட்டது போல் நான் வைத்தியர் ஆகிவிட்டேன். ஆனால் அதைக் காண என் தந்தை கொடுத்து வைக்கவில்லை. இவ்வாறு பழைய ஞாபகத்தில் இருந்த நான் என் தொலைபேசி அலறல் சத்தம் கேட்டு சுயநினைவிற்கு வந்தேன். என்னை அறியாமலே என் கண்களில் கண்ணீர் வடிந்தது. அன்று அந்த புகையிரதம் வந்திருந்தால் இன்றைய Dr. அமல்ராஜ் MBBS என்ற நபர்... எல்லாம் இறைவன் கருணையே. என் இன்றைய நிலைக்கு என் அப்பா கூறிய அந்த அறிவுரை தான் காரணம். நான் தூங்க எழுந்து செல்லும் போது வானொலியில் "தோல்வி நிலையென நினைத்தால்...." எனும் பாடல் ஒலித்தது. அது எனக்குப் பொருத்தமாய் இருந்தது.

ம. சரண்யா
தரம் 10 B

**அறிந்து கொள்ளுங்கள்!**

**பெரும்பொழுது**

| | | |
|---|---|---|
| இளவேனில் | - | சித்திரை,வைகாசி |
| முதுவேனில் | - | ஆனி, ஆடி |
| கார் | - | ஆவணி, புரட்டாதி |
| குளிர் | - | ஐப்பசி, கார்த்திகை |
| முன்பனி | - | மார்கழி, தை |
| பின்பனி | - | மாசி, பங்குனி |

# ஊனம்


உடலில் ஊனத்தோடு -ஜகத்தினிலே
உமைப் படைத்தாளே தாய்
உடலில் குறையிருந்தாலும்-தம்
உள்ளம் பால் வெள்ளை மனம்

கையிழந்து காலிழந்து வையத்திலே தாம் பிறந்து
சிந்தையால் செயற்பட்டவர்கள் -தாம்
மெய்தன்னில் குறைகண்ட போதும் -தம்
பொய்யில்லா உள்ளத்தால் பார்தன்னில் புகழ் படைத்திடுவீர்

உள்ளத்திலே ஊனம் கொண்டவர் -தம்
உடல் ஊனம் பற்றி எள்ளி நகையாடுவர்
சிந்தையிலே எதையும் கொள்ளாது-நாம்
சிரத்தையுடன் செயற்பட்டு வெல்வோம் இவ்வுலகை

சிந்தனைத் தெளிவுடன் -நம்
உடல் கொண்ட ஊனம் தனை வென்றெழுவோம்
காலத்தின் கட்டளை தனையுணர்ந்து
சிரத்தையுடன் நாம் வெல்வோம்.

சு. கஜனிகா
தரம் 10D



# நீதி நூல்களும் மனித விழுமியங்களும்

மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற் கான ஒழுக்கநெறிகளை எடுத்துக் கூறுவன நீதி நூல்களாகும். மனிதர்கள் செல்லவேண்டிய வழிகளையும் செல்லக்கூடாத வழிகளையும் அவற்றினால் ஏற்படும் விளைவுகளையும் சுவை மிக்கதாக காலந்தோறும் தோன்றிய இந்நூல்கள் வெளிப்படுத்தி மானுட குலத்தினை ஆற்றுப்படுத்துகின்றன. அவர்களுக்கு வேண்டிய நல்ல மனித விழுமியப் பண்புகளை இவை கூறுகின்றன. தமிழ் மொழியாலே பலநூறு நூல்கள் நீதி புகட்டி மனித விழுமியங்களைக் கூறும் நூல்களாக விளங்குகின்றன.

இந்நூல்கள் வரிசையில் திருக்குறள், மூதுரை, நாலடியார், கொன்றைவேந்தன், ஆசாரக் கோவை, விவேகசிந்தாமணி, வாக்குண்டாம், நல்வழி, திரிகடுகம், முதுமொழி வெண்பா, இன்னாநாற்பது, இனியவை நாற்பது போன்ற நூல்கள் குறிப்பிட்டு கூறக்கூடியனவாக காணப் படுகின்றன.

இவற்றுள் திருக்குறள், அறநூல் வரிசையில் முதல் நிலையில் நின்று ஒரு மரத்தின் இரு கிளைகள் போன்று மனிதன் செல்ல வேண்டிய நன்மையான வழியையும் செல்லக்கூடாத தீமையான வழியையும் எடுத்துக்கூறி மனி தனது வாழ்க்கைக்குத் தேவையான பண்பு நலன்களையும் விளக்கி நிற்கின்றது.

அடுத்து ஔவையாரால் இயற்றப்பெற்ற மூதுரை, நல்வழி, வாக்குண்டாம் போன்ற நூல்களும் மனிதனுக்கு வேண்டிய பண்பு நலன்களைக் கூறுவனவாகவே அமைந்து காணப்படுகின்றன. இதில் வாக்குண்டாம் பாடலில் போலி உறவு, உண்மை உறவு எவ்வாறு அமைய வேண்டும் என்றும் அடக்கமுடையவர்கள், அறிவில்லாதவர்கள் என்று கருதக்கூடாது என்றும் உருவத்தில் சிறியவர்கள், ஆற்றல் இல்லாதவர்கள் என்று நினைக்கக்கூடாது என்றும் மனித வாழ்க்கைக்கு தேவையான பண்பு நலன்களைக்கூறி நிற்கிறது.

மேலும் நல்வழியில் நாம் வன்சொற்களை விடுத்து இன்சொற்களையே பேச வேண்டும் என்று கூறுவதனூடாக மனிதனுக்குத் தேவையான உயர்ந்த விழுமியப் பண்பைக் கூறுகின்றார் ஔவையார். இவற்றோடு மட்டும் நின்றுவிடாமல் பசி வந்துவிட்டால் பறந்து போகும் பத்துவிடயங்களையும் கூறி மனித இயல்பினை விளக்குகின்றார்.

அடுத்து நாலடியார் என்ற நீதி நூலும் ஒவ்வொரு நான்கடிப் பாடல்களிலும் மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கான ஒழுக்கக் கருத்துக்களான சிறுதொழிலையும் முயற்சியோடு திருத்தமாகச் செய்ய வேண்டும் என்றும் மக்கள் பெரியாரோடு சேர்ந்திருந்து தம்குறை நீங்கப் பெருமையடைதல் வேண்டும் என்றும் கூறுவதனூடாக மனிதனுக்குத் தேவையான உயர்ந்த விழுமியப் பண்புகளைப் பறைசாற்றுகின்றன.

மேலும் ஆசாரக்கோவை என்ற நீதிநூலும் நூலின் பெயருக்கேற்றாற் போல ஒழுக்கக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கி மனிதனது வாழ்க்கைக்கு ஒளியூட்டுகின்றன.

அடுத்து இன்னா நாற்பது, இனியவை நாற்பது போன்ற நீதி நூல்களும் மனிதன் கடைப்பிடிக்க வேண்டியவைகளை, விலக்கி நடக்க வேண்டியவைகளைத் தனித்தனியே பட்டியல்படுத்திக் கூறுகின்றன.

இவற்றைவிட பழமொழிப் போதனை என்ற நீதி நூலும் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் பழமொழிகள் அமைந்து வாழ்க்கைக்குத் தேவையான அரிய பல கருத்துக்களை சமூ கத்துக்கு கூறிநிற்கின்றன.

எனவே சமூகத்தில் வாழும் தகைமை பெற்ற ஒவ்வொரு மனிதனும் தனக்குரிய உயர்ந்த ஒழுக்கநெறிகளைக் கொண்டு வாழும்போதே அவன் முழு மனிதனாகின்றான். இத்தகைய ஒழுக்க விழுமியப் பண்புகள் இல்லாத மனிதன் விலங்குகளாக நோக்கப்படுகின்றான் என அறிஞர் ஒருவர் கூறுகின்றார்.

தான் எப்படியும் வாழலாம் என்ற எண்ணம் கொண்டு கால்போனபோக்கில் வாழ்ந்து தனக்கும் சமூகத்துக்கும் கேடு விளைவிப்பவனாக இருந்தால் அவன் ஒரு நடைப்பிணமாகவே நோக்கப்படுகின்றான் என்பது பெரியவர்கள் அபிப்பிராயமாகும்.

இந்நிலையில் மனிதனே உயர்ந்த படைப்பாக விளக்கவும் தனது வீட்டையும் சமூகத்தையும் ஏன் தான் வாழும் நாட்டையுமே ஒழுங்குபடுத்துவதற்கு ஏற்ற கருவியாகவும் விளங்குவதற்கு நீதி நூல்களும் அவற்றில் கூறப்பட்ட மனித விழுமியங்களும் உதவுகின்றன.

ஆகவே மனிதனை ஆற்றுப்படுத்தி புடமிட்டு நல்வழிப்படுத்துகின்ற இந்நூல்களின் வழி மனிதன் தன் வாழ்க்கையை கொண்டு செல்லும்போது தன் நிலையில் வெற்றி பெறுவது மட்டுமல்லாமல் நாடே போற்றும் தலைவனாகப் போற்றப்படுவான் என்பதில் ஐயமில்லை.

**வே. சாருமதி**
தரம் 10D

**வட்டுக் கோட்டையிற் பணியாற்றிய தமிழ்ப் புலமைமிக்க அமெரிக்கர்**



கலாநிதி டானியல் புவர்
அதிபர்,
வட்டுக்கோட்டைச் செமினரி
1823 — 1836



கலாநிதி எச். ஆர். ஹொய்சிங்டன்
அதிபர்,
வட்டுக்கோட்டைச் செமினரி
1836 — 1848



கலாநிதி எஸ். டபிள்யூ. ஹவுலன்ட்
அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி
1889 — 1898

# நான் விரும்பும் தமிழறிஞர்

நமது ஈழ நாடு தமிழறிஞர் பலரைத் தந்த பெருமைக்குரியது. அத்தகையவர்களில் ஒருவர்தான் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர். அவர் உலகம் போற்றும் தமிழ்ப் பேரறிஞர்.

மொழி நூல் வல்லுநராகவும் பன்மொழிப் புலவராகவும் திகழ்ந்த பெருமைக்குரியவர். அவரே நான் விரும்பும் நல்ல தமிழ் அறிஞராவார்.

சுவாமி ஞானப்பிரகாசர் மானிப்பாயைச் சேர்ந்த சுவாமிநாதப்பிள்ளை தங்கமுத்து தம்பதிகளின் மகனாக 30.08.1875 இல் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் வைத்திலிங்கம் என்பதாகும். வைத்திலிங்கம் தமது தந்தையாரை ஐந்தாவது வயதில் இழந்தார். தாயாரான தங்கமுத்து அச்சுவேலியைச் சேர்ந்த தமிழறிஞரான தம்பிமுத்து என்னும் கத்தோலிக்க மதத்தவரை மறுமணம் செய்துகொண்டார். தம்பிமுத்து என்பவர் அச்சகம் ஒன்றின் உரிமையாளராகவும் "சன்மார்க்க போதினி" என்னும் பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தார். தாயார் கத்தோலிக்க மதத்தைத் தழுவியபோது வைத்திலிங்கம் அம் மதத்தில் சேர்ந்துகொண்டார். இதன் காரணமாக இவருக்கு ஞானப்பிரகாசம் என்னும் பெயர் சூட்டப்பட்டது.

ஞானப்பிரகாசம் இளமை முதல் தமிழில் மிக்க ஆர்வமுடையவராக விளங்கினார். வளர்ப்புத் தந்தையார் இவருக்கு அச்சுக் கலையில் பயிற்சி அளித்ததோடு தமிழிலக்கியங்களில் ஆழ்ந்த அறிவையும் புகட்டியிருந்தார்.

ஞானப்பிரகாசம் யாழ் - சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயின்ற பின் புகையிரத சேவை எழுதுவினைஞர் தேர்வில் சித்தி பெற்று கல்கமுவை புகையிரத நிலையத்தில் எழுதுவினைஞராகப் பணிபுரிந்தார். அரச சேவையில் அவரது நாட்டம் செல்லவில்லை. தமிழுக்கும் தான் சார்ந்த கத்தோலிக்க மதத்திற்கும் தொண்டாற்ற வேண்டும் என்னும் ஆவல் கொண்டார். தனது பதவியைத் துறந்துவிட்டு குருவானார். ஆகும்பொருட்டு யாழ்ப்பாண குருமடத்தில் சேர்ந்துகொண்டார். 1901ம் ஆண்டு டிசம்பர் மாதம்1ம் திகதி இவர் குருவானவராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அன்றுமுதல் அவர் இறக்கும்வரை (1947.01.22) தமிழுக்கும் கத்தோலிக்க மதத்திற்கும் ஆற்றிய சேவைகள் அளப்பெரியன.

### பன்மொழிப் புலவர்

சுவாமி ஞானப்பிரகாசர் பன்மொழிப் புலவர். அவர் எழுபத்திரண்டு மொழிகளை அறிந்திருந்தார். பன்னிரண்டு மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். அவரது மதிநுட்பமும் ஆராய்வுத் திறனும் உலகம் அறிந்ததாகும். தமிழ் மொழியின் தொன்மையை மேன்மையை உலகம் அறிந்திடும் வண்ணம் ஒப்புயர்வற்ற சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியை உருவாக்கினார். தன்னந்தனியாக தானே தொடங்கிப் பன்னிரண்டு ஆண்டுகளில் தான் திட்டமிட்டிருந்த இருபது பாகங்களில் ஆறு பாகங்களை வெளியிட்டிருந்தார். எஞ்சிய பாகங்களுக்கானவற்றையும் தயார் செய்திருந்தார். அவற்றை அவர் வெளியிட முன் காலன் அவர் உயிரைக் கவர்ந்து கொண்டான். சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ்த்தொண்டுடன் மட்டும் நின்றுவிடவில்லை. சமயத் தொண்டிலும் தீவிரமாக ஈடுபட்டார்.

### கல்விப் பணி

சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த ஏழை மக்களைத் தமது மதத்திற்கு சேர்த்து அவர்களுக்கு கல்வியறிவூட்டினார்.

தமது வாழ்நாளில் முப்பத்தேழு தேவாலயங்களை உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு. யாழ்ப்பாண சரித்திரத்தை அறிவியலடிப்படையில் முதன்முதலாக எழுதியவரும் இவரே. சைவ சமயத்தைப் பற்றி சைவ சித்தாந்தம் என்னும் நூலை எழுதியதோடு செகராசசேகரன் என்ற ஒரு நூலையும் எழுதியுள்ளார்.

## முத்திரை வெளியீடு


சுவாமி ஞானப்பிரகாசரின் தமிழ்ப்பணிகளையும் ஆராய்ச்சித் திறனையும் நன்குணர்ந்த ஜேர்மனிய அரசு 1939 ஆம் ஆண்டில் அவர் வாழும்போதே அவருடைய உருவத்துடன் கூடிய ஒரு முத்திரையை வெளியிட்டுக் கௌரவித்தது. இலங்கை அரசாங்கம் 1981 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி அவருடைய நினைவாக ஒரு முத்திரை வெளியிட்டது. பல இடங்களிலும் அவருக்கு சிலை நிறுவி மக்கள் தம் மரியாதையைச் செலுத்தியுள்ளனர்.

தமிழ்நாட்டிலுள்ள திருப்பனந்தாள் ஆதீனம் இவரது தமிழ்ப் பணியைப் பாராட்டி கௌரவித்து சன்மானமும் வழங்கி இருந்தது. தமிழுக்கும் கத்தோலிக்க மதத்துக்கும் அளப்பெரிய பணியாற்றிய சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ் மொழி மீது தீவிர பற்றுக் கொண்டவர்.

தமிழ் மொழி தொன்மையானது. தனித்துவமானது. பல மொழிகளுக்குத் தாயானது என்பது அவரது அசைக்க முடியாத கொள்கையாகும். அதனை எவ்விடத்தும் தயங்காது எடுத்துரைத்தவர். இன்றைய தமிழ் இளைஞர்கள் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி தமிழ்ப் பணியாற்ற முன்வரவேண்டும். பல மொழிகளிலும் பலதுறைகளிலும் வல்லவர்களாக வரவேண்டும். அதுவே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும்.

இ. சௌமியா
தரம் 10E

## தமிழில் விஞ்ஞானக் கல்வி



வைத்திய கலாநிதி
சாமுவேல் பிஸ்க் கிறீன்

# பெண்ணியம்

சங்க காலத்தும், சங்கமருவிய காலத்தும் எழுந்த இலக்கியங்களில் பெண்ணடிமை நிலையும், சில சூழல்களில் பெண்ணுரிமை நிலையும் காண முடிகிறது. பெண்விடுதலை அமைப்புக்களை முதலில் அமைத்தவர் பாரதியாரே ஆவார். தொல்காப்பியர் தொடங்கி இலக்கியவாதிகள் பலர் ஆணாதிக்கவாதிகளாக செயற்பட்டு வந்துள்ளனர். தமிழிலக்கியம் முழுவதும் ஆணாதிக்கப் பார்வைதான் அழுத்தமாகப் பதிந்துள்ளது. ஆங்கிலத்தில் பெமினிசம் (Feminism) என்ற சொல்லுக்கு தமிழில் பெண்ணியவாதம், பெண்ணிலை ஏற்பு, மகளிரியல், பெண்ணியக் கொள்கை என பல சொற்கள் வழங்கப்படுகின்றன.

பெண்ணுரிமை, ஆணாதிக்கம் என்றெல்லாம் பேசுகிறோம். ஒரு காலகட்டத்தில் நம் சமூகம் "பெண் வழிச்சமூகம்தான்" மூன்றாம் விழி சிவனுக்குரியது என்றாலும் அவ்விழியை சிவனுக்கு அளித்ததே பார்வதிதான் என்கிறது புராணக்கதை. ஆகவே நம் சமூகம் பெண்வழிச்சமூகமாக இருந்துள்ளது. மேலும் ஆணின் துணை இல்லாதுகூட பெண் படைக்கும் தன்மையுடையவள் என்கிறது மற்றொரு புராணம் அது 'பகிரதன்' தொடர்பான சாபம் ஒன்றினால் 'சாகரர்' வம்சம் அழிந்து போயிற்று. வாரிசு இல்லாதிருந்த மன்னனும் இறந்து போகவே அவனது மனைவியர் இருவரும் வேதனை கொள்கின்றனர். வம்சத்தை விருத்தி பண்ணுவது எப்படி என்று தம் குலகுருவிடம் யோசனை கேட்டு பகீரதனைப் பெறுகின்றனர். இன்னொன்று கர்த்தரால் முதலில் ஆதாம் படைக்கப்பட்டு ஆதாமின் விலா எலும்புகளிலிருந்து உருவானவள்தான் ஏவாள் என்று கிறிஸ்து மரபு கூறுகிறது.

பெண்மகள் அச்சம், மடம், நாணம் என்ற இயல்புகளைக் கொண்டு அழகுடையவளாக, இரக்கமுடையவளாக, அடக்கம், அமைதியின் உருவாகவும், ஆற்றல் இல்லாதவளாக செயல்திறனற்றவளாக உருவாக்கப்படுகிறாள். மேற்கூறிய மனோபாவத்தில் ஆண், பெண் என இருபாலாருக்கும் தனித்தனி வரையறைகள் வகுக்கப்பட்டுள்ளன. பெண்தான் மெல்லியவள் இப்படித்தான் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். வீட்டைவிட்டு வெளியே செல்லக்கூடாது என்றெல்லாம் கூறி வளர்க்கப் படும்போது அக்கருத்துக்கு மாறாக பெண் தன்னை மாற்றிக்கொள்ளாது தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறாள்.

"பொம்பளை சிரிச்சாப் போச்சு
புகையிலை விரிச்சாப் போச்சு" என்றும்,
"கல்லானாலும் கணவன்
புல்லானாலும் புருஷன்" என்றும்

பழமொழிகளும், புதுமொழிகளும் தோன்றிப் பாலியல் சார்ந்த கருத்துக்களைப் பரப்பின.

இவ்வாறாக ஆண்கள் ஆள்பவனாகவும், அதிகாரம் செய்பவனாகவும் உருவாகி பெண்களை அடக்கி ஒடுக்கி முடக்குகிறான். சங்ககாலப் பெண்கள் ஆணாதிக்க சமுதாயத்தில் இரண்டாந்தரக் குடிகளாக கணவனே தெய்வம் என்று கொண்டாடுபவர்களாக ஆணின் தேவையை மட்டும் நிறைவேற்றும் பணிப்பெண்களாக வாழ்ந்தார்கள்.

பெண்ணடிமைப் போக்கு வளர்ந்த வரலாற்றை பால் வகை அடிப்படையில் விரிவாக விளக்கியுள்ளார் ஒரு அறிஞர். உலகம் முழுவதும் பால்வகை என்பது ஆண் பெண்ணை அதிகாரம் செய்யும் வகையில் அமைந்துள்ளது. ஏனெனில் ஆணாதிக்க சமூகம் வகுத்ததுதான் பால்வகை. ஆண் தனக்குரிய சமூகக் கனவாக இராணுவம், தொழிற்சாலை, அரசியல், நீதி தொழில்நுட்பம், கல்வி

போன்றவற்றைத் தெரிந்துகொண்டான். பெண்ணுக்கு இல்லம் என்பதை உரிமையாக்கி அதற்குள் அவளை ஆட்படுத்துகிறான். ஆதலால் சமூகத்தில் பெண்ணின் இயக்கம் குறைந்தது. குடும்ப அமைப்பில் அடங்கிக் கிடக்கும் பெண் சமூகத்தை அணுக அவளுக்கு கணவன் என்ற துணை தேவைப்பட்டது. ஆதலால் அவள் சுய சிந்தனை இல்லாதவளாக ஆடவன் கைப்பாவையாக உருவாவதற்கு துணை போயிற்று.

இரட்டைக் காப்பியத்தில் ஒன்றான மணிமேகலையின் நாயகி மணிமேகலை தனது தாய் மாதவியின் குலத்தொழிலான ஆடல் தொழில் செய்யாது குடும்ப வாழ்க்கையைத் துறந்து நாட்டு மக்களின் பசி தீர்த்தும், மக்களுக்கு அறமொழிகளை எடுத்துரைக்கும் பல நல்லறங்களையும் செய்து பௌத்த நெறியின்படி முத்தி பெற்று அறச்செல்வியாகக் காணப்பட்டாள். பெண்கள் முன்பே கல்வியறிவில் சிறந்து விளங்கினார்கள் என்பதற்கு சங்ககாலப் பெண்கள் உதாரணமாகத் திகழ்கின்றனர். அதாவது ஔவையார், ஆதிமந்திரையார், நச்சௌளையார் போன்றோர் பெண்ணுரிமை, கையறுநிலை போன்ற பல்வேறுபாடு கொண்ட பொருளில் பாடியுள்ளனர். இருப்பினும் அவர்கள் ஆணாதிக்க சமூகத்தில்தான் வாழ்ந்துள்ளனர்.

பெண்ணுரிமை இயக்கங்கள் மேலை நாடுகளில் செல்வாக்குப்பெற்று விளங்குவதோடு பிறநாடுகளிலும், இலங்கையிலும் கால்கொண்டுவரத் தொடங்கியது. மேலைநாடுகளில் தோன்றிய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன இலங்கையில் ஆங்கிலக் கல்வியின் வரவால் அறிமுகம் செய்யப்பட்டன. இவற்றை இலக்கியங்கள் எடுத்துக்காட்ட முனைந்தபோதுதான் பெண் முன்னேற்றமும் முளைவிடத் தொடங்கியது. பெண்ணியம் பெண்ணுரிமை பற்றி இன்று நிலவிவரும் சிந்தனைகள் அறுபதுகளின் தொடக்கத்தில் வடிவு கொண்டு மலர்ந்துள்ளதெனப் பெண்ணியம் குறித்த அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ப. லாஞ்சனா
தரம் 11A

**மானிப்பாயில் வைத்திய கலாநிதி கிறீன் அவர்கள் அமைத்த வைத்தியசாலை**



# என் அழிந்திடாத உறவு அம்மா

கருவறை கடந்து நான் வர முன்னர்
அம்மா நீ மட்டும் தான்
என் உறவு என உணர்ந்திருந்தேன் - இருந்தும்
நான் கருவறை தாண்டி வரும்போது
உன்னைக் கதற வைத்தேன்.

என் அம்மா நீ கதறியது
எனை ஈன்ற வலி என்று உலகம் சொன்னாலும்
எனக்கு மட்டும்தான் தெரியும் உன் கருவறையிலிருந்து பிரிந்து
வேஷமான உறவுகள் மத்தியில் நான் வாழப்போவதை
எண்ணிக் கதறினாய் என்று.

போலியான உறவுகள் எல்லாம் அன்பான உறவுகள் என்று
அறிமுகம் செய்தாய் இருந்தும்
நான் சிரித்து வாழ வேண்டும் என்று
உன் சிரிப்பைச் சிதைத்தாய்
எனக்காய் உழைக்க சிறகும் வளர்த்தாய்.

என் சந்தோசமே உன் சரித்திரம் என்றெண்ணி வாழ்ந்தாய்
புரியவில்லை எனக்கு அந்தப் பிரமனின் கணக்கு
இன்பமான உன் உறவொன்றே போதுமம்மா! நீ கேட்டால்
என் உயிரையும் உனக்கு
உயில் எழுதித் தருவேனம்மா.



சி. நிருபா
தரம் 11C

# பாரதி கண்ட கல்விப் புரட்சி

"தோன்றிற்புகழோடு தோன்றுக....." என்ற வாக்கிற்கு அமைவாக தோன்றியவர் மகாகவி பாரதி ஆவார். இவர் தனது கவித்திறமையால் பாரத தேசத்தையே தேச விடுதலைக்காக புரட்டிப்போட்ட மகான்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்

இனிதாவ தெங்கும் காணோம்"

என்று முழங்கியவர் பாரதியார். தமிழ்ப்பற்று, தேசப்பற்றுக்கொண்ட பாரதி இலக்கியம், அறிவியல், நாட்டுப்புறவியல், பெண்ணியம், வசனநடைக்கவிதை போன்றவற்றை தனது கவிதை மூலம் கவி வடித்து பாரததேசத்தை விழிப்படையச் செய்தவர். அந்தவகையிலே அவர் கண்ட கல்விப் புரட்சி பற்றிய கருத்துக்களை காண்பதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கம்.

இன்றைய உலகம் அறிவியலிலே புரட்சி ஏற்படுத்த முனைந்து செயற்பட்டுக் கொண்டிருக் -கின்றது. ஆனால் இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன் பாரதி கல்வியின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என உணர்ந்தவர் அதனால் அவர் தான் வடித்த கவிகளிலே கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார் எனலாம்.

இவ்வுலகிலே பணம் கொடுத்து புகழைப் பெறுவதை விட கல்வியால் முன்னேற்றம் அடைந்து புகழ்பெற வேண்டும் என்கிறார். இந்த பாரினிலே புகழுக்காக அன்னதானம் இடல், ஆலயங்கள் அமைத்தல் என்பவற்றை விட மேலானது ஏழை ஒருவனுக்கு எழுத்து அறிவித்தல் ஆகும் என்கிறார். இதனை

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்

ஆலயம் பதினாயிரம் நாட்டல்

பின்னருள்ள தருமங்கள் யாவும்

பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்

அன்ன யாவினும் புண்ணியம் கோடி

ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்.

ஏழைக்கு கல்வியினை கொடுத்தலே கண்போன்றதாகும். மேலும் ஏழை, அடிமை என்று எவருமிலர். நகரங்களிலே பெரிய கல்விச் சாலைகள் இயங்குவது போல் ஒவ்வொரு கிராமமும் பெரிய கல்விச்சாலைகள் இயங்க வேண்டும் என்பதை

வீடு தோறும் கலையின் விளக்கம்

வீதி தோறும் இரண்டொரு பள்ளி

நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்

நகர்கள் எங்கும் பலபல பள்ளி

தேடு கல்வி யிலாத தொரூரைத்

தீக்கிரையாக மூடுதல்

என்னும் பாடலில் குறிப்பிடுகின்றார். பல பள்ளிகளை உருவாக்கியும் அதன் பின் கல்வியை தேடாதவர்கள் இருக்கும் ஊர்களையும், ஊரவரையும் தீக்கிரையாக்க வேண்டும் என முழக்கமிடுகிறார் பாரதியார்.

அடுத்து இவர் கல்விப் புரட்சியிலே முக்கியமாக ஏற்படுத்திய புரட்சி பெண் கல்விப் புரட்சி ஆகும். பாரதி வாழ்ந்த காலத்திலே பெண்களை வீட்டிலே பூட்டி வைத்து வதைத்தார்கள். பெண்களுக்கும் கல்வி வேண்டும் அவர்கள் கற்றால் தான் குடும்பம், சமுதாயம், நாடு தேசம் நலம்பெறும் இதையே பாரதி

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்

றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்

வீட்டிற்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போ மென்ற

விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

என்று பெண் கல்வியை வலியுறுத்தினார். அது மட்டுமா?

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிலே பெண்கள் நடத்த வந்தும்
எட்டு மறிவினில் ஆணுங்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி

என்கிறார் பாரதி. அதாவது இவ்வுலகிலே பெண்கள் பட்டங்களைப் பெற்று நாட்டிலே அரசியல் ஆட்சியும் நடாத்திக்காட்டி ஆணுக்கு இங்கே பெண் சளைத்தவள் இல்லை என நிரூபித்துக் காட்டுவோம் எனக்கூறி கும்மியடி பெண்ணே என கும்மிப் பாட்டில் தத்துரூபமாக கூறுகின்றார் பாரதி.

கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை
புகினும் கற்கை நன்றே

என்கின்றது நறுந்தொகை. பிச்சை எடுத்தாவது நாம் கற்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது இவ்வடி. இதைவிட மேலும் பாரதி தனது கல்விப்புரட்சிக்கவியிலே நாம் தாய்மொழியை மட்டும் கற்கக்கூடாது உலகில் உள்ள ஏனைய மொழிகளை கற்க வேண்டும் எனவும் உலக நாடுகளோடு போட்டி போட்டு நிற்க உதவும் தொழிற் கல்வியையும் மற்றும் ஆன்மீகக்கல்வி போன்ற அனைத்து விதமான கல்வியையும் அனைத்து மனிதர்களும் பெற வேண்டும் என்பது எட்டயபுரத்து கவி மன்னனின் அவா ஆகும்.

ஆகவே பாரதி கண்ட கல்விப்புரட்சியினை நனவாக்கி மேன்மேலும் கற்கவும் கற்றதன்படி ஒழுகவும் முனைவோம். உயர்வடைவோம் பாரதியின் பாதமலருக்குக் காணிக்கை ஆக்கு வோம்.

**ச. ரோகினி**
A/L 2018 கலைப்பிரிவு

# புது வசந்தம்



தொலைந்து போகும் புது வசந்தம்
எப்போது எம்முடன்
நடை பழகும்

சோகங்கள் எல்லாம் மறைந்து
நம்பிக்கையின் பூக்கள்
எப்போது மலரும்

உரிமைகள் எல்லாம் உத்தரவாகி
எம் மனதுக்கு எக்காலம்
நிம்மதி கிடைக்கும்

அன்பும் அரவணைப்பும் அநாதையாகும்
மனிதருக்கு விடிவு
எந்நேரம் மேடையேறும்

எம் கண்ணீருக்கு ஓய்வு கிடைக்கும்
என்ற எதிர்பார்ப்பில்
வாழ்ந்து கொண்டிருக்கிறோம்

பிறந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம்
என்று இல்லாது
நம் புதுவசந்தத்தை தேடி
வெற்றி நடைபோடுவோம்.

**ஆ. அனோயா**
A/L 2018 கலைப்பிரிவு

# போதைப்பொருள் பாவனை

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்ற கவிஞரின் கூற்றிற்கிணங்க இன்று நாம் 21 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இயந்திர யுகமும் அவசரகதியும் மனிதனின் வாழ்வாகிப்போய்விட்டது. மனித வாழ்வில் மனித நேயம் மரணித்த ஒன்றாக மாறிவிட்டது. வளர்ச்சி என்பது விஞ்ஞானத்தில் மட்டுமே அன்றி மனிதனிடம் அல்ல என்னும் அளவிற்கு மனித செயற்பாடுகள் காணப்படுகிறது. அந்த வகையில் உலகமானது எந்த அளவிற்கு வளர்ச்சி கண்டாலும் அதில் பல பிரச்சினைகளும் காணப்படுகின்றன. அதாவது இன்று போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. போதைப்பொருள் பாவிப்பது பிரஜைகளின் சுகாதாரத்தை பாழ் செய்கின்றது. நீண்டகாலமாக பேணிப்பாதுகாத்த இந்தச் சிறப்பான மனிதக் கட்டமைப்பை சீரழிக்கும் வகையில் போதை என்ற பேரரக்கன் சவாலாகத் தோன்றுகின்றான். இப் போதைப்பொருள் பாவனைக்கு சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அடிமையாக உள்ளனர். இது எமது தேசத்தின் எதிர்காலத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது.

இன்று சாராயம், அபின், விஸ்கி, புகையிலை, கஞ்சா, ஹெரோயின், தூக்க மாத்திரை, பியர், சிகரெட் போன்ற போதைப் பொருட்கள் காணப்படுகின்றன. இவை உடலை மட்டும் தாக்குவதல்ல, மனதையும் தாக்குகின்றது. சில போதைப் பொருட்கள் மருந்திற்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை மதுபானத்திற்கு தடை இல்லை. ஏனெனில் மதுவால்தான் அதிக வரியை வசூலிக்கின்றனர். பண்டைய காலத்தில் கள்ளை மட்டும்தான் பயன்படுத்தினர். அது போதைப் பொருளாக இருந்தாலும் பெரிதாக தீமை விளைவிப்பதில்லை. அத்துடன் பெண்களும், ஆண்களும் அருந்திக்கொண்டனர். இதனால் அவர்கள் நோய்நொடியின்றி வாழ்ந்ததோடு தமது களைப்பைப் போக்கவும் கள்ளை அருந்தினர். ஆனால் இன்று பெண்களும் ஆண்களைப்போல் போதைப் பொருளுக்கு அடிமையாகி உள்ளனர். போதைப்பொருள் சம்பந்தமான குற்றங்களில் ஈடுபடுபவர்கள் 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் என தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு நிறுவனம் புள்ளிவிபரங்கள் மூலம் காட்டுகின்றது.

இன்று போதைப்பொருளானது பல வடிவங்களில் பரிமாற்றம் செய்யப்படுகின்றது. அதாவது ரொபி, குளிர்பானங்கள், உணவு போன்றவற்றுள் பரிமாறப்படுகின்றது. மற்றும் ஊசி மூலமும் உட்செலுத்தப்படுகின்றது. வருமானம் குறைவாகப் பெறுபவர்கள் மத்தியிலும், சில மாணவர்கள் மத்தியிலும் போதைப்பழக்கம் உள்ளது.

இன்று போதைப்பொருளானது வீதியிலும் வீட்டிலும் மட்டுமல்லாது சில மாணவர்கள் பாடசாலைக்கும் கொண்டு செல்கின்றனர். நாட்டின் வருங்கால தூண்களாக இருந்து பல பொறுப்புக்களை ஏற்க வேண்டியவர்களது மதிப்பும் இதனால் குறைகின்றது. சில போதைப்பொருட்கள் அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டுள்ளன. அப்படியிருந்த போதிலும் சட்டமற்ற முறையில் நாட்டுக்குள் கடத்தப்படுகின்றன. இவை எவ்வாறு எமது நாட்டிற்குள் கடத்தப் படுகின்றன? என்பது புரியாத புதிராகும்.

போதைப்பழக்கத்தால் களவு, கற்பழிப்பு, சிறுவர் துஸ்பிரயோகம், கடத்தல், பாலியல் வல்லுறவு போன்ற குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன. தீவிரவாதம் வளர்வதற்கு போதை

துணைபுரிகின்றது என கருத்துக்கணிப்பு தெரிவிக்கின்றது. ஒருதாய் தன் மகன் போதைப் பொருளிற்கு அடிமையாகி குற்றச் செயலில் ஈடுபட்டு ஒரு வழக்கில் சிக்கிய பொழுது நீதிமன்றத்தில் அந்த தாய் தனது மகனுக்கு மரண தண்டனை வழங்கும்படி கூறியதாக ஒரு பத்திரிகையில் வந்த செய்தி பலரையும் திகைக்க வைத்தது. கடந்த காலத்தில் போதைப்பழக்கம் விளையாட்டு வீரர்களையும் விட்டு வைக்கவில்லை. விளையாட்டில் பங்குபற்றி தங்கப்பதக்கங்களைப் பெற்றவர்கள் பதக்கங்களை இழந்துள்ளார்கள்.

பிரச்சினைகள் தாமாக வருவதிலும் பார்க்க நாமாக உருவாக்கும் பிரச்சினைகள் அதிகம் எனவும் கருதப்படுகின்றது. பிரச்சினைகளை ஆய்வு செய்து அறிந்து முளையிலேயே கிள்ள வேண்டும். திருமண முறிவு, குடும்பக்கவலை போன்ற செயல்கள் போன்றன போதைப் பழக்கமும் மற்றும் போதைப்பொருள் பயன்படுத்துவதால் உடற்சோர்வும் தளர்வும் ஏற்படுவதோடு இதயத்துடிப்பு, குருதி அமுக்கம், நுரையீரல் புற்றுநோய், மாரடைப்பு போன்ற நோய்களும் போதைப் பொருள் ஊசி மூலம் உட்செலுத்தப்படுவதால் தொற்றுதல் மூலம் புண்கள் உண்டாகலாம், குருதி நஞ்சாதல், செங்கண்மாரியும் எயிட்ஸ் தொற்றுதலும் ஏற்படலாம். உண்மையான வாழ்வு இன்பம் என்பதை அறிய விரும்பாதவர் விரைவில் மரணமடைகின்றனர். பிள்ளைகளை வளர்த்தல் என்பது எவ்வளவு கடினமானது என்பதை உணர மறுக்கின்றார்கள். இப் போதைப் பொருள் சம்பந்தமான கட்டுரைகள், கருத்துரைகள், துண்டுப்பிரசுரங்கள் உரிமைக் குரல்களாக, இதயக் குரல்களாக தேசியக் குரல்களாக ஒலிக்க வேண்டும். மக்கள் யாவரும் இவ்விடயத்தில் பார்வையாளர்களாக இருக்காது பங்காளர்களாக மாறி அனைவரும் போதைப் பொருள் பாவனையை முற்றாக ஒழிக்க நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும். பாடசாலைகள், சுயவிருப்புச் சங்கங்கள், ஆலயங்கள் , சமய நிறுவனங்கள் போன்றவை ஊடாக போதைப் பொருட்களின் தீமைகள் அதனால் ஏற்படும் தாக்கங்கள் நன்கு உதாரணங்கள் மூலம் விளக்கவேண்டும்.

சர்வதேச போதைமருந்து எதிர்ப்பு தினம் ஜூன் 26ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. போதை என்ற அரக்கனை பூண்டோடு ஒழிக்க வேண்டும். ஊடகங்கள் நல்ல பயனுள்ள சேவையைப் புரிய வேண்டும். கடுமையான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்கள் மனதில் போதை பற்றிய சிந்தனையை அடியோடு ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் மக்கள் மனங்களில் போதையை இல்லாதொழித்து போதையற்ற உலகை உருவாக்கி நல்லதொரு வாழ்க்கையை வாழ் வோமாக.

குடி குடியைக் கெடுக்கும்.

**க. ஜீவனா**
A/L 2017 கலைப்பிரிவு

# தமிழ்மொழியின் சிறப்புக்கள்

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்கிறார் பாரதியார். இவ்வடியே தமிழின் சிறப்புக்கு போதுமானது என்று கூறுவதென்றால் அது மிகையாகாது. தமிழ் அளப் பெருங்கடல். அள்ள அள்ள வற்றாத சமுத்திர நீர் போல பரந்த விசாலமானது. தமிழ் என்றால் அழகு, இனிமை, இளமை, தேன்தமிழ், தீந்தமிழ் முதலான சொற்களின் பொருளில் கொள்ளலாம்.

தமிழ் மொழி மிகவும் பழமையானது. இற்றைக்கு கி.மு 5,000 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய மொழியாகும். தமிழ் வழங்கிய தேசம் தமிழகம், தமிழ்நாடு, திராவிடம் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. தமிழ் தந்த பாரதத்தை நாம் போற்ற வேண்டும். தமிழ்மொழி தமிழர்களினதும் தமிழ் பேசும் பலரதும் தாய்மொழியாகும். தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தின் முதன்மையான மொழிகளுள் ஒன்றாகும். உலகில் செம்மொழி அந்தஸ்து உள்ள மொழிகளுள் நம் தமிழ் மொழியும் ஒன்றாகும்.

தமிழ்மொழியானது ஊற்றெடுத்த தமிழகம் மட்டுமன்றி உலகெங்கும் வியாபித்துள்ளது. இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அதிகளவிலும், ஐக்கிய அரபு அமீரகம், தென்னாபிரிக்கா, மொரிசியசு, பிஜி, ரீயூனியன், டிரினிடாட் போன்ற நாடுகளில் சிறிய அளவிலும் பேசப்படுகிறது. 1997 ஆம் ஆண்டு புள்ளிவிபரப்படி உலகம் முழுவதிலும் எட்டுக்கோடி மக்களால் பேசப்படும் மொழியாகக் காணப்படுகின்றது. மேலும் தமிழானது ஒரு மொழியை தாய்மொழியாகக் கொண்டு பேசும் மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் 18ஆவது இடத்தில் உள்ளது.

சமஸ்கிருதம், இலத்தீன் போன்ற மொழிகள் இன்று பேச்சுவழக்கில் இல்லை. ஆனால் தமிழ்மொழி பேச்சு வழக்கில் உண்டு. தமிழ்நாட்டை சேர, சோழ, பாண்டியர்கள் என்னும் மூவேந்தர்கள் ஆட்சி புரிந்தனர். இவர்கள் தமிழ் வளர்த்த மன்னர்களாகக் காணப்படுகிறார்கள்.

அதாவது புலவர்களை ஆதரித்ததோடு அவர்கள் மூலம் தமிழை வளர்த்தார்கள். அவையில் பாடும் புலவர்களுக்கு பொன்னும் பொருளும் கொடுத்தனர். மேலும் பண்டைத் தமிழ் மன்னர்கள் முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என சங்கம் அமைத்து தமிழ் வளர்த்தனர். இலங்கை நாட்டவரான ஈழத்து பூதந்தேவனார் கடைச்சங்கப் புலவருள் ஒருவராவார். நந்திவர்மன் தமிழுக்காக உயிர்கொடுத்த மன்னனாகப் போற்றப்படுகிறான்.

தமிழ்மொழியின் தனிச்சிறப்புக்கள் ஐந்தினை பேராசிரியர் கி. ஆ. பே. விஸ்வநாதம் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்.

i. இனியமொழி, எளிய மொழி, சிறந்த மொழி, பழையமொழி, தனித்தமொழி என்ற ஐந்து அடைமொழிகளுக்கும் தமிழ்மொழி உரித்தானது.

ii. 500 ஆண்டுகளுக்கு முன்பே இலக்கணம் பெற்றது இம்மொழி.

iii. கண்ணுள் காணப்படாத மனத்தால் நினைக்கப்படுகின்ற பொருள்களுக்கும் இலக்கணம் கூறுகின்ற அகப்பொருள் இலக்கணத்தைக் கொண்டது.

iv. பிறமொழிகளில் காணப்படாத "ழ" என்று ஒலிக்கும் எழுத்தைக் கொண்டது.

V. ஒழுக்கத்தை மட்டும் வற்புறுத்தி கூறும் தனிநூல்கள் பலவற்றைக் கொண்டது.

vi. இவ்வாறு தமிழ்மொழியின் சிறப்பை விளக்கியுள்ளார்.

தமிழ்நூல்கள்மிகவும்பரந்துபட்டன. அவை தமிழ்தந்த கொடைகளாக போற்றப்படுகின்றன. அந்தவகையில் திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரிய புராணம், மகாபாரதம்... என சொல்லிக் கொண்டே போகலாம். இந்நூல்கள் எல்லாம் எம் தமிழ் மொழியின் அடையாள, அழியாத பொக்கிஷங்கள். இவை மனித வாழ்வுக்கு வேண்டிய நல்லொழுக்கங்களையும் விதி முறைகளையும் கூற விளைகின்றன என்றால் அது மிகையாகாது. மேலும் கம்பர், வள்ளுவர், இளங்கோ, ஆறுமுகநாவலர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை... என எத்தனையோ தமிழ் உள்ளங்களால் தமிழ் வளர்க்கப்பட்டது. அந்தவகையில் தமிழ்மொழி ஒரு ஆய்வுமொழியாகவும் கருதப்படுகிறது.


தமிழின் சுவை கருதி செந்தமிழ் எனப் போற்றுகிறார்கள். செந்தமிழ் என்பதற்கு கலப்பற்ற தூயதமிழ் என தமிழ் பேரகராதி பொருள் தருகிறது. செந்தமிழ் என்னும் சொல்லை அகநானூறின் 349ஆம் பாடல் "நடுநிலை தவறாத மொழி" எனும் பொருளில் ஆண்டுள்ளது.

இவ்வாறாக தமிழ்மொழியானது பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு தனக்கென தனித்துவமான இடத்தினைப் பெற்றுக் காணப்படுகிறது. இதனால் நாம் தமிழைப் போற்ற வேண்டும். தமிழை வளர்க்க வேண்டும்.

"தமிழே நீ வாழ்க!
தமிழனே அதை நீ வளர்த்திடு".

**ப. நவஞ்ஜா**
A/L 2017 கலைப்பிரிவு

## அகராதி தொகுத்த மேதைகள்



வண. லீவை ஸ்போல்டிங் அவர்களும் பாரியாரும்

# கனவு

காற்றடித்துக் கலைந்துவிடும்
கடலலைகள்
மீன்பிடித்து அதிலேறும்
ஒற்றைப் படகில் அவன்
நேற்றுக்கேட்ட பாடல் ஒன்றை
முணுமுணுத்தபடி



நீரில் விழாதோ விண்மீன்கள்
அவன் வலையிழுக்கும் போது
வானம் அள்ளி வீசாதோ?
ஊரில் அவன் வீட்டில்
தூங்கும் அவள் நினைவில்
ஆழக் கடல் ஓசை அவன் ஆசை
சொல்லாதோ !

கூட்டிக் கழித்து எப்படியெல்லாம்
பார்த்தாலும்
கையில் காசு மிஞ்சுவது கஷ்டம் தான்
முதலாளியின் போட் காசு
சின்னவளின் ஸ்கூல் பாக்
றோசாவின் சீட்டுக் காசு
நினைக்கும் போதே வலை வழுக்குகிறது
வலித்து வலித்து
இழுக்கிறான்
அவன் மீன்களையும் வாழ்க்கையையும்.
இரவினிலே தொழில் என்பதால்
கனவுகள் வருவதில்லை
விடிந்த பின்னர் தூக்கம் வரும்
பகல் கனவு பலிப்பதில்லை

காற்றடித்துக் கலைந்து விட்ட
கவலைகள்
மீன்பிடித்து அதோ போகும்
ஒற்றைப் படகில் அவன்
என்றோ வந்த கனவு ஒன்றில்
மிதந்தபடி.........

**சி. சுகிர்தா**
A/L 2017 கலைப்பிரிவு

# "வலது குறைந்தோரும் சமுதாயத்தின் அங்கத்தினரே"

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிது அரிது மானிடராதல் அரிது
மானிட ராயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது"

இது ஔவையார் பாடிய பாடலின் ஒரு பகுதி . மானிடத்தின் அருமையை ஊனமற்ற பிறப்பின் சிறப்பை எடுத்தியம்பும் பகுதி எனினும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறவாதோரும் உளர் என்பதைக் குறிப்பாகக் காட்டும் பகுதி சில இயற்கைக் காரணிகளாலும் சில வகை நோய்களாலும் பலவகை விபத்துக் களாலும் கூனராய், குருடராய், செவிடராய், ஊமையராய், முடவராய், மன நோயாளராய் மக்கள் பல்லாயிரவர் உலகெங்கும் அல்லலுற்று வாழ்கின்றனர். அவர்கள் சாதாரண மனிதர் களிலும் பார்க்க ஏதோ ஒரு வகையில் வல்லமை குறைந்தவர்கள் வலது குறைந்தோர் ஆனால் மற்றைய மனிதர்களைப் போலவே பசியும் தாகமும் உடையவர்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழவேண்டும் என்னும் வேட்கை உடையவர்கள் எல்லாவற்றிலும் மேலாக மனமும் மனத்தின் கண்ணே தோன்றும் ஆயிரம் ஆயிரம் உணர்வுகளும் உடையவர்கள் அவர்கள் சமுதாயத்தின் அங்கமாகப் பலவகை இன்னல்களுக்கு ஆட்பட்டு வாழ்கின்றனர்.

இறைவன் படைப்பு விசித்திரமானது ஒரு உறுப்பு அல்லது ஒரு வல்லபம் ஊனமுற்ற வர்களுக்கு இறைவன் வேறுசில ஆற்றல்களைக் கூர்மையாக்கியுள்ளான். குருடர்களுக்கு கேள்விப்புலனும் ஞாபகசக்தியும் கூர்மை பெற்று விளங்குகின்றனர். கண்கூடு, குருடரும் முடவருமான இரட்டைப்புலவர்கள் தமிழ கத்திலே கவிமழை பொழிந்த கவிதைகள் வெகு பிரசித்தி பெற்றவையாகும். வலது குறைந்தோரிற் சிலர் சட்டத்தரணிகளாகவும், பட்டதாரிகளாகவும், இசை மேதைகளாகவும், கவிஞர்களாகவும் விளங்குகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரிடமும் கூர்மை பெற்ற ஒவ்வோர் ஆற்றல் "மண்ணுள் மறைந்துள்ள மணிபோல" ஒளிந்திருக்கின்றது. அந்த ஆற்றல்களை மணியை வெளிக்கொணர்ந்து தூய்மை செய்து பட்டை திட்டிவிட்டால் அது கூர்மை பெற்றுப் பிரகாசிக்கும். அவ்வாறு செய்வதே சமுதாயத்தின் தலையாய பணியாகும். இப்பணியிற் பொதுமக்களும் தொண்டர் ஸ்தாபனங்களும் அரசும் ஆர்வம் காட்டுதல் அவசியமாகும். அந்த ஆர்வமும் அதன்வழியான செயற்பாடுமே வலதுகுறைந்தோருக்கு ஒளிமயமான எதிர்காலத்தைக் காட்ட வல்லன. பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழி பெறுவதற்குப் பொதுமக்கள் பெரிதும் உதவமுடியும். மருத்துவத்துறையின் வளர்ச்சி யால் குருடர்கள் விழிபெற்றுப் பார்க்கும் சக்தியைப் பெறும் நிலை உருவாகியுள்ளது. வலது குறைந்தோரிற் பலர் சுயமாகப் பல வகைக் கைத்தொழில்களையும் செய்யும் ஆற்றல் பெற்றுள்ளனர். அவர்களின் உற்பத்திப் பொருள்களை வாங்கி அவர்கள் வாழ்வு வளம் பெற உதவி செய்யுங்கள்.

இன்று சில தொண்டர் ஸ்தாபனங்களாலும் பொதுஸ்தாபனங்களாலும் நடாத்தப்படும் அறநிலையங்கள் வலது குறைந்தோரைப் பேணிக்காத்து அவரவர் இயல்புக்கேற்ற தொழிற் பயிற்சியளித்து வருகின்றன. இத்தகைய அறநிலையங்களின் எண்ணிக்கை மிகக் குறைவே இத்தொகை பலவாகப் பெருகுதல் வேண்டும். நாட்டில் வலது குறைந்தோர் அனைவரும் வீதியில் பிச்சை எடுக்காது அறநிலையத்தின் அரவணைப்பில் ஆறுதல் காண வேண்டும். அறிநிலையங்கள்

பல இயங்கவேண்டுமானால் நிதிமிகுந்தவர் பொற்குவையளித்தால் வலது குறைந்தோரது வாழ்விற்கு ஓர் பயனாக இவை அமையும்.

வலது குறைந்தோர் விவேகமும் விடா முயற்சியும் கொண்டவர்களாக வாழ அவர்களது கல்வித் தகுதிக்கேற்ப அரசு தக்க கௌரவமளித்து உயர்பதவிகளை வழங்க வேண்டும். அவர்களது இயல்புக்கேற்ற தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் அரசின் தார்மீகக் கடமையாகும். துர்ப்பாக்கியசாலிகள் எனக் கருதப்படும் வலது குறைந்தோர்க்குப் பொதுமக்களும் அறநிலையங்களும் அரசும் ஆதரவு காட்டுமானால், அவர்கள் சாதாரண மக்களைப் போன்று தன்மானத்தோடு தலைநிமிர்ந்து நிற்பர். சமுதாயத்திலே வேண்டப்படாத உறுப்பினராகக் கருதப்படார். விரும்பத்தக்க உறுப்பினராக இச்சமுதாயத்தின் ஓர் அங்கத்தினராகவே காணப்படுவார்கள்.

எனவே, வலது குறைந்தோரைக் கீழ் மட்டப்படுத்தாமல் நாம் ஒவ்வொருவரும் அவர்களும் இச் சமுதாயத்தில் வாழக்கூடிய ஒரு அங்கத்தினராகவே நாம் கருதி அவர்களை வாழ வைப்பது எமது கடமை எனக் கொண்டு செயற்படுவோம்.

**ஞா. வினிதா**

A/L 2017 கலைப்பிரிவு



# பெண்களை மதிப்போம்

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்" என கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை கவி பாடியுள்ளார்.

பெண் என்பவள் சமூக வாழ்வில் பிரிக்க முடியாத அங்கமாவாள். வீட்டிற்கும் நாட்டிற்கும் முக்கியமானவள் பெண். ஒவ்வொரு வீட்டிலும் பெண் முக்கிய பங்கு வகிக்கின்றாள். பெண் இல்லாத வீடு வீடல்ல என்று கூறலாம். ஒரு வீட்டின் இயங்குதளமாகப் பெண்ணே விளங்குகிறாள்.

அந்த வகையில் பெண்ணாகப் பிறப்பதற்கு பெரும் தவம் செய்ய வேண்டுமென்றால் மிகையாகாது. பெண்களின் மனமே இரக்க குணமுடையது. பெண்ணே மென்மை யானவள். பெண் என்றால் மென்மை. மென் மையென்றால் பெண் எனலாம். இவளின் மென்மைக் குணத்தால்தான் அவள் அமைதி யாகவும், பண்பாடு உடையவளாகவும், பதுமையாகவும் காணப்படுகின்றாள். பெண்கள் உடலளவில் ஆண்களைவிட பலவீனமானவர்கள் தான். ஆனால் மனத்தினால் மிகப்பலம் உடையவர்கள். அதனால்தான் என்னவோ பெண்கள் எத்தனை துன்பங்கள் ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு இப்பூமியில் வாழ்கின்றனர்.

எமது புராணங்களில் பெண்களுக்கு முக்கிய பகுதியை வழங்கியுள்ளனர். "சக்தி" மகத்தான ஆற்றல் படைத்த பெண் தெய்வம் என்று இந்துமத வழிபாடு தெரிவிக்கின்றது. புராணங்களில் பெண்கள் மிகவும் சிறப்பித்தே போற்றப்படுகின்றனர். இராமாயண புராணத்தில் சீதாதேவி பெண்களின் அனைத்து சக்திகளின் வடிவமாய் சித்திரிக்கப்பட்டார். மகாபாரதத்தில் திரௌபதியும் பெண்களின் சிறப்பை மேன் நிலைப்படுத்தியவர். இவ்வாறு பெண்களின் சிறப்புக்களைக் கூறலாம்.

சங்ககாலம் தழுவிய காப்பியங்களில் சிலப் பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி போன்ற ஐம்பெருங்காப்பியங்களில் உள்ள பெண் பாத்திரங்களின் வரலாறுகள் பெண்ணி யத்திற்குப் பெருமை தேடித் தந்துள்ளன.

சங்ககாலத்தில் பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கினர். தலைமைப் பண்புள்ளவர்களாக சரித்திர சாதனை புரிந்துள்ளனர். அந்த வகையில் ஔவையார், காவற்பெண்டு, பாரிமகளிர், வெண்ணிக் குயத்தியார், வெண்பூதியார், நன்முல்லையார், காக் கைப்பாடினியார் போன்ற இலக்கியப் பெண்புலவர்கள் சங்ககாலத்தில் கல்வியில் சிறந்து விளங்கியுள்ளனர்.

பெண்களின் மூளையின் எடை ஆண்களின் மூளையின் எடையைவிட அதிகமாகும். அத்துடன் ஆணின் இதயத்தைவிட பெண்ணின் இதயம் வேகமாகத் துடிக்கிறது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். உடலுறுதிகொண்ட ஆணைவிட மனவுறுதி கொண்ட பெண் சிறப்பு மிக்கவள். பொறு மைக்கு இருப்பிடமும் பெண்தான்.

பூமியைப் பாதுகாக்கும் ஓசோன் படையைப் போல் உலகைக் காப்பவள் பெண்தான். பெண்ணாய்ப் பிறந்து கள்ளிப்பாலுக்கு இரையாகிய காலம் கரைந்தோடி அவள் சொல்லுக்காய் நாடு விழித்திருக்கும் காலம் காட்சிக்கு வந்துவிட்டது. இதுவரைக்கும் ஒன்பது பெண்கள் நோபல் பரிசு பெற்றுள்ளனர். விண்வெளிக்கு முதன்முதல் கால்பதித்த பெண்ணான வலண்டினா தெரஸ்கோவா 45 முறை பூமியை வெற்றிகரமாக வலம் வந்தார். இச் செயல் பெண்களின் மனவுறுதிக்கு எடுத்துக்காட்டாகும்.

மருத்துவத்துறையில் உயிரைக் காப்பாற்றும் பணியில் கூட பெண்கள் மிளிர்கின்றனர். பல துறைகளிலும் பெண்கள் நட்சத்திரமாய் ஒளிர்ந்தாலும் அவள் இன்றும் கூட பல்வேறு கொடுமைகளுக்கும் இன்னல்களுக்கும் முகம்

கொடுக்கின்றாள். பல்வேறு அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் பெண் அடிமைத் தனம் குறித்துப் பேசினாலும் இன்றும் கூட பெண்கள் அடிமைகளாகத்தான் விளங்கு கின்றனர்.

திருமணத்திற்கு முன்பு தந்தையின் தயவுடனும், திருமணத்தின் பின் கணவனின் தயவுடனும் பின்பு மகனுடன் வாழ்வதும் ஒரு பெண் தனக்குத்தான் போட்டுக்கொண்ட கட்டுப்பாடாகும். அவ்வாறு ஆண்தயவில் வாழ்வதால் அவளை அடிமையாக வழிநடத்தக் கூடாது. இன்றுவரை பெண்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என்றே கூறவேண்டும்.

"எப்போது எமது நாட்டில் பெண்கள் நள்ளிரவில் கூட நடமாடக் கூடிய சூழ்நிலை உருவாகின்றதோ அப்போதே உண்மையான சுதந்திரம்" என்று மகாத்மா காந்தி குறிப்பிட் டுள்ளார்.

ஒரு ஆணுக்குதுணையாகப்படைக்கப்பட்ட பெண் ஒரு ஆண் தவறிழைக்கும்போது அவற்றிலிருந்து அவனை மீட்டெடுத்து நல்வழிப்படுத்துகின்றாள். தன் குடும்பத்திற்காக தனது இலட்சியம், கனவுகளைத் தியாகம் செய்கின்றாள்.

எத்தனை சாதனையை இப் பூமியில் பெண்கள் புரிந்தாலும் அவள் இன்றும் கூட அடிமை யாகவே நடத்தப்படுகின்றாள்.

அறிவு, அழகு, தலைமைத்துவப் பண்பு, அடுத்தவர் மனதைப் புரிந்துகொள்ளும் மனப்பக்குவம், கனிவு, துணிவு, பணிவு போன்ற சிறப்புப் பண்புகளைக் கொண்ட பெண் பூமியில் சாதனைகளை இன்றுவரை புரிந்துள்ளாள். இவளின் சாதனைகளைக் கூறி நாம் பெருமையடைகின்றோம். ஆனால் பெண்களை அடிமைத்தனத்திலிருந்து மட்டும் ஏன் விடுவிக்க முடியவில்லை.

பண்பாடு, கலாசாரம் போன்றவற்றைக் கூறி பெண்களை ஒடுக்குகிறது ஒரு சமூகம். இவ்வாறான ஒடுக்குமுறைக்கு முடிவே இல்லையா?

ஒரு திறமைசாலியான பெண் ஆலமரமாய் வளர்ந்து இவ் உலகிற்கே நிழல் கொடுப்பவள். எனவே பெண்மையைப் போற்றி பெண்களின் சக்தியை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு பெண்களை மதிப்போம்.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான், புவி
பேணி வளர்த்திடும் ஈசன்"

அ. டிலக்ஷிகா
A/L 2017 கலைப்பிரிவு

**மடக்கு**

எழுத்தின் கூட்டமிடைபிறி தின்றியும்
பெயர்த்தும் வேறு பொருடரின் மடக்கெனும் பெயர்த்தே.

எழுத்துக்களின் கூட்டம் இடைவிட்டும், இடைவிடாதும் பின்னும் வந்து வேறு பொருட ருமாயின், அது மடக்கென்னும் பெயருடையதாகும் என்றவாறு.

# குவலயம் சிறக்க வேண்டும்

கண் தந்தான் கடவுள் காண்க நீ எல்லாம் என்று
மண் மீதில் மனிதராகப் பிறந்திட வரமளித்தான்.
விண் தொடும் புகழை ஈட்டும் அறிவினைத் தந்தான் மேலும்
எண்ணரும் விந்தை செய்யும் ஆற்றல்கள் பல கொடுத்தான்.
எண்ணமாய்ச் சிந்தனைக்குள்ளே எண்ணதும் திறன்கள் தந்து
என்றுமே உயர்ந்திலந்தும் ஏற்றமார் வழிகள் தந்தான்
கொண்டு நாம் குவலயத்தின் அற்புதம் படைத்து நின்றோம்.

ஆற்றல்கள் கொண்டு நாமே ஆற்றிடும் வியப்புக் கோடி
போற்றிடும் வகையில் நாளும் குவித்திடும் புகழும் கோடி
ஏற்றியே எவரும் சொல்லும் சிறப்புக்கள் குவித்த நாமே
சேற்றிடையுற்ற தைப்போல் சிறுமைகள் ஏன் சுமந்தோம்.

தாயினைத் தெய்வமாக வணங்கிடும் சிறப்புக் கண்டோம்
தாயவள் சேயைக் கொல்லும் கொடுமைகள் நிகழ்வதேனோ
தந்தையும் தரமிறங்கித் தாழ்ந்திடும் செயல்கள் ஏனோ?
அண்ணனும் அக்கா தங்கை எனவரும் சொந்தமெல்லாம்
மண்ணுளே மறைந்த கீழ்மை நிகழ்வதேன் சொல்லும் ஐயா.

மறைந்திடும் பெருந்துறைகள் மீண்டும் நாம் அடைய வேண்டும்.
சிறந்திடும் விழுமியங்கள் வாழ்வில் ஒளிர வேண்டும்.
முறையுள்ள மனிதன் மீண்டும் மாண்பிலே ஒளிரவேண்டும்.
குறையெல்லாம் அகன்று இந்தக் குவலயம் சிறக்க வேண்டும்.
குன்றினில் இட்ட தீபம் போலவே மனித மாண்பு
குறையின்றி மீண்டும் தோன்ற வழி செய்ய வேண்டும் தெய்வமே.

சீ. நிருஷா
A/L 2017 கலைப்பிரிவு

# இன்றைய உலகில் இளைஞர்களும் தொடர்பாடல் சாதனங்களும்

இப்பரந்து விரிந்து கிடக்கும் நவீன உலகிலே அனைத்தும் முன்னேற்றம் அடைந்து வருகின்றது. அவற்றுள் ஒன்றாகவே தொடர்பாடல் சாதனங்களும் காணப்படுகின்றன. விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக மனித மூளை விருத்தியடைந்தது. அதன் பயனாகவே தொடர்பாடல் சாதனங் களும் கண்டுபிடிப்புக்களிற்கு உள்ளாகின ஆரம்ப காலங்களில் செவிவழியாகக் கேட்கப்பட்டு வந்த விடயங்கள் பிற்காலத்தில் எளிய முறையில் வளர்ச்சி கண்டது. அவ்வாறான தொடர்பாடல் சாதனங்களாக தொலைபேசி, தொலைக்காட்சி, வானொலி, இணையம், கணினி, மடிக்கணினி போன்றன காணப்படுகின்றன. இவற்றினால் பல்வேறு நன்மைகள் ஆரம்பத்தில் ஏற்பட்டன. தற்காலத் தில் இவையே பல்வேறு துன்பங்களையும், பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்துவனவாகக் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் இளைஞர்களையே சூழ்ந்து காணப்படுகின்றன. இளைஞர்கள் என்று எண்ணுகையில் அவர்களுள் கல்வி கற்பவர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர்.

ஒரு சமுதாயத்தில் முக்கிய உறுப்பினர்களாகக் காணப்படுபவர்கள் இளைஞர்கள். ஏனெனில் இவர்களது கைகளில் தான் நாளைய சமுதாயம் அடங்கியுள்ளது. அவ்வாறு நோக்கும் போது தொடர்பாடல் சாதனங்களுள் ஒன்றான தொலைபேசி இவர்களுக்குப் பெரிதும் உதவி புரிவதாகக் காணப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் தொலைதூரத்தில் உள்ளவர்கள் தமது உறவினர்களுடனோ அல்லது நண்பர்களுடனோ பேச வேண்டுமானால் கடிதம், தந்தி, அல்லது நேரில் வரவேண்டியிருந்தது. பிற்காலத்தில் அலெக்சாண்டர் கிரகம்பெல்லினால் கண்டுபிடிக்கப்பட்ட தொலைபேசியின் மூலம் பல்வேறு நன்மைகள் ஏற்பட்டன. தற்போது நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய தொடர்பாடலினால் இன்று இளைஞர்கள் பல்வேறு கருமங்களை ஆற்றக் கூடியதாகவுள்ளது. நவீன தொலைபேசிகளின் மூலம் உடனுக்குடன் தகவல்கள் பாரி மாற்றப்படல், வீடியோக் காட்சிகள் பதிவு செய்யப்படுகின்றது. எமக்குத் தேவையானவற்றைப் பதிவு செய்யக் கூடியதாகவுள்ளது. புகைப்படங்கள் எடுத்துக் கொள்ள முடிகின்றது. இது இன்றைய இளைஞர்களிடம் பரவலாக மேற்கொள்ளப்படுகிறது. தொலைபேசியினால் தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் வழங்கக் கூடியதாகவும் இருப்பது இன்றைய கல்வி கற்கும் இளைஞர்களுக்கு உதவியாகவுள்ளது. அசாதாரண சூழ்நிலை காரணமாக பாடசாலைக்கு செல்லவில்லை என்றால் நண்பர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இவ்வாறு தொலைபேசியானது பல்வேறு வகையில் இளைஞர்களுக்கு உதவிபுரிவதாகவுள்ளது.

மேலும் தொலைக்காட்சி இன்றைய இளைஞர்களிடையே நெருங்கிய தொடர்பினைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. தொலைக்காட்சிகளில் இன்று இளைஞர்களுக்கென்றே அதிகளவிலான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. உதாரணமாக: பொது அறிவுகள், விந்தையான விளையாட்டுக்கள், செய்திகள் போன்றவற்றின் மூலம் மூளையை விருத்தி செய்யக்கூடியதாக இருப்பதுடன் கற்றலை இலகுபடுத்தக் கூடியதாகவும் உள்ளது.

இவற்றை விட வானொலி இளைஞர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒன்றாகக் காணப்படுகின்றது. அதிகளவிலான உலக மற்றும் உள்நாட்டு செய்திகளை வழங்குவதுடன் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக நிலமைகளையும் இளைஞர்களுக்கு விளக்குவதாகவுள்ளது. மேலும் வானொலிகளினால் காலநிலை மாற்றங்களை அறியக்கூடியதாகவும் அதனை இளைஞர்கள் ஏனையோருக்கு வழங்குபவர்களாகவும் காணப்படுகின்றனர். மேலும் ஆரம்பத்தில் ஒருவருக்குப் பிறந்த தினம், திருமணம் மற்றும் மரணச்சடங்கு என்றால் அவற்றை கூறுவது கடினமாகும். ஆனால் இன்று இளைஞர்கள் வானொலிகளிலும் மற்றும் தொலைக்காட்சிகளிலும் உடனுக்குடனே தெரிவிக்கின்றனர்.

சமுதாயத்தை நிலைநிறுத்துபவர்களாகக் காணப்படும் இளைஞர்களிடையே கணினியின் பயன்பாடும் அதன் மூலம் இணையத்தினைப் பயன்படுத்தும் பொழுது போக்காக மாறியுள்ளது. இளைஞர் கணினியின் மூலம் தமது கற்றலுக்குத் தேவையான விடயங்களைப் பதிவுசெய்வதுடன் பெற்றுக் கொள்கின்றனர். இணையத்தின் மூலம் நாட்டில் எங்கு என்ன நடந்தாலும் உடனடியாகப் பார்க்கக் கூடியதாகவுள்ளது. மேலும் இணை யத்தில் கூகுல், முகப்புத்தம் போன்ற பொழுது போக்குகளும் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் தமக்குப் புதிதான நண்பர்களை இணைத்துக் கொள்வதுடன் பல்வேறு தகவல்களைப் பரிமாற்றம் செய்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு இன்றைய இளைஞர்களிடையே பரவலாகக் காணப்படும் தொடர்பாடல் சாதனங்களில் பல்வேறு நன்மைகள் காணப்பட்டன. ஆனால் தற்போது இவர்களுக்கு பாதகத்தை ஏற்படுத்துவதில் பெரும் சவாலாக அமைகின்றது. இதனால் இளைஞர்கள் தினசரி ஒழுக்கவீனர்களாக மாறிவருவதுடன் தவறான பேச்சுவார்த்தை, தவறான நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். தொடர்பாடல் சாதனங்கள் இளைஞர்களைத் தவறு செய்யத் தூண்டுவனவாகக் காணப்படுகின்றன. தொலைபேசியின் மூலம் பல்வேறு நன்மையைப் பெற்ற இளைஞர்கள் இன்று அதனைத் தவறான செயற்பாடுகளில் ஈடுபடுத்துகின்றனர். பெண்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் தவறான அழைப்புக்களை மேற்கொள்ளல், தவறான புகைப்படங்கள், வீடியோக்கள் எடுத்தல், தவறான குறுந்தகவல் அனுப்பல் எனத் தான் பாதிப்படைவதுடன் இன்னொருவரையும் பாதிப்படையச் செய்கின்றனர்.

மேலும் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் தொடர் நாடகங்களைப் பார்த்தல், படங்கள் பார்த்தல் என்பவற்றைத் தமது பொழுது போக்காகக் கொண்டுள்ளனர். இதனால் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைவதுடன் மாணவர்களின் சிந்தனை, நினைவாற்றல் குறைவடைகின்றது. நேரம் வீணடிக்கப்படுவதுடன் வேலைப்பளுவும் அதிகமாகின்றது. மேலும் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

இவை மட்டுமன்றி இளைஞர்கள் இணையத்தை அதிகளவில் பயன்படுத்துவதால் அவர்கள் தமது மூளையைப் பாதிப்படையச் செய்வதுடன் தவறான செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். இணையத்தில் தவறான புகைப்படங்கள், வீடியோக்கள் பார்த்தல், இதனால் தவறான பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றனர். மேலும் முகப்புத்தகம் என்பவற்றின் மூலம் அறிமுகமில்லாதவரிடம் அன்பு வைத்தல், போதைப் பொருட்களான மது, புகைப்பழக்கத்திற்கு அடிமையாதல் இவ்வாறான பல்வேறு செயற்பாடுகளினால் கற்றல் வீணடிக்கப்படல் பெற்றோர், நண்பர், உறவினரால் வெறுக்கப்படல், அன்பு, பாசம் அற்றுப்போதல், துரோகச் செயல்

காணப்படல், எதிர்காலம் கேள்விக்குறியாதல், சமுதாயத்தால் ஒதுக்கப்படல், ஏனையோரின் இழிவுக்குள்ளாதல், சட்டத்தின் முன் குற்றவாளி எனக் கருதப்படல் இவ்வாறு பல்வேறு பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடும்.

இன்றைய இளைஞர்கள் நாளைய சமுதாயத்தின் தலைவர்களாவர். தொடர்பாடல் சாதனங்களினால் நன்மைகள் பல ஏற்படும். ஆனால் நாம் பயன்படுத்தும் முறையினாலே ஏற்படுகின்றது. பயன்தருவதாகவும் பல்வேறு வகையில் உதவி புரியக்கூடியதாகவும் இருக்கும், தொடர்பாடல் சாதனங்களை சரியான முறையில் உபயோகித்தல் பாடசாலை மாணவர்கள் என்ற ரீதியிலும் இளைஞர்கள் என்ற ரீதியிலும் எமது கடமையாகும். ஏனெனில் இவை நமது நிகழ்காலத்துடன் மட்டுமல்ல எதிர்காலத்தையும் தீர்மானிப்பவையாகும். இளைஞர்களாகிய நாம் சரியாக பயன்படுத்துவதோடு அடுத்த சந்ததியினரின் வளர்ச்சிக்கும் உதவி புரிவோம்.

**வி. யர்மிலா**
A/L 2017 கலைப்பிரிவு



# தமிழர் பண்பாடு

தமிழர் என்பவர் திராவிடக் குழுவைச் சேர்ந்த தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்டவராவர். மிகப் பழைய தமிழ்ச் சமுதாயமாக தென்னிந்தியா, இலங்கையைச் சேர்ந்தவர்கள் விளங்குகின்றனர். உலகம் முழுவதிலும் இன்று தமிழர் வாழ்ந்தாலும் அவர்களது தாயகம் தமிழ்நாடும், தமிழீழமுமே ஆகும். தமிழ் மக்கள் பிரித்தானியா, பிரான்சு, ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து போன்றபல நாடுகளில் பரந்து உள்ளனர். உலகில் 70 மில்லியன் மக்கள் தமிழைத் தாய் மொழியாகவும் மேலும் 9 மில்லியன் மக்கள் தமிழை இரண்டாம் மொழியாகவும் பயன்படுத்துவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறான பெருமைகள் நிறைந்த தமிழ் மொழியினைப் பேசுகின்ற தமிழ்மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழர்களது பண்பாட்டை நோக்குவோம்.

தமிழ் கலாசாரம், தமிழ் மக்களின் பண்பாடு ஆகும். தமிழ் கலாசாரம் கலை மற்றும் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகம் முழுவதும் தமிழர்கள் வாழ்க்கை வழிகளில் வேரூன்றி உள்ளது. தமிழ் கலாசாரம், மொழி, இலக்கியம், இசை, நடனம், ஓவியம், சிற்பம், கட்டடக்கலை, விளையாட்டு, ஆடைகள், கொண்டாட்டங்கள் போன்ற பல்வேறு விடயங்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. தமிழர்கள் மிக நீண்ட காலமாகவே தமக்கென தனித்துவமான பண்பாட்டினைக் கொண்டிருப்பவர்கள். மொழி, இலக்கியம், கலை போன்ற துறைகளில் கிறித்துவுக்கு முந்திய நூற்றாண்டுகளிலேயே உயர் நிலை எட்டியிருந்தவர்கள். இத்தகைய பின்னணியிலே மக்கள் வாழ்வதற்கான இல்லங்களும், அரசர்களுக்கான மாளிகைகளும், வணக்கத்தலங்களும், பொதுக் கட்டடங்கள் பலவும் உருவாக்கப்பட்டிருக்கும் என்பதால் ஐயமில்லை இவையெல்லாம் அழிந்து போகக்கூடிய பொருட்களால் கட்டப்பட்டதால் எதுவும் எஞ்சவில்லை. சிற்பக்கலை பண்டைய காலம் முதற்கொண்டே தமிழரால் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் மண், மரம், தந்தம், கல் ஆகியவற்றினால் சிற்பங்கள் செதுக்கப்பட்டன. மண்ணில் சிற்பங்கள் உருவாக்கியவர்கள் ''மண்ணீட்டாளர்கள்'' எனப்பட்டனர். அக்காலத்தில் இறந்த போர் வீரர்களுக்கு கற்களால் சிலை அமைக்கும் வழக்கம் இருந்தது.

தமிழர்களின் ஓவியங்களைப் பார்க்கும் பொழுது சங்ககாலத்தில் இருந்தே தமிழரிடையே ஓவியக்கலை வளர்ச்சி அடைந்தது. நாயக்கர் கால சுவர் ஓவியங்கள், தஞ்சைக்கோயில் ஓவியங்கள் போன்றன தமிழர்களின் ஓவியக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. இயல், இசை, நாடகம் என்று முத்தமிழ்களில் ஒன்றான நாடகத்தை முன்னிறுத்தித் தொன்றுதொட்டு தமிழர், நாடகக்கலையில் ஈடுபட்டு வருகின்றனர். தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் நாடகம் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. காத்தவராயன் கூத்து, அரிச்சந்திரன், வள்ளி, சத்தியவான் சாவித்திரி போன்ற சிறந்த நாடகங்களை நடித்து வந்தனர். தமிழ்ச் சூழலில் இசை நுணுக்கமாக ஆராயப்பட்டு தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டு தமிழிசையாக செம்மை பெற்றது. தொல்காப்பியம் எனும் நூலில் இசையைப் பற்றிய ஆழ்ந்த கருத்துக்களைக் காணலாம். சிலப்பதிகாரத்திலும், சாத்தனாரின் கூத்து நூலிலும் தமிழ் இசையைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

தமிழர்கள் பல்வேறு விதமான தற்காப்புக் கலையைத் தெரிந்திருந்தனர். சிலம்பம், வர்மக்கலை, குத்து வரிசை, அடிதடி, மல்லாடல் ஆகியவை இன்றும் பயிலப்படும் தமிழர்த்தற்காப்புக் கலைகள் ஆகும். யோகக்கலையும் தமிழர்கள் நீண்டகாலமாகப் பயின்றும் அதற்கு ஆதரவளித்தும் வந்துள்ளனர். யோகக்கலைபற்றியும் அதன் இதரபாகங்களைப் பற்றியும் தமிழ் நூலான திருமந்திரம் மிக அழகாக எடுத்துரைக்கின்றது. நகைச்சுவை தமிழர் வாழ்வில் இழையோடிய ஓர் அம்சம். வில்லுப்பாட்டு, பட்டிமன்றம், இலக்கியம், திரைப்படம், தொலைக்காட்சி போன்ற பல வழிகளில் நகைச்சுவை பகிரப்படுகின்றது. அது மட்டும் அல்லாது தமிழர்களின் ஆடற்கலை பற்றி நோக்குவோமாயின் ஆடலைக் கூத்து என்றும் நாடகத்தை "கதை தழுவி வரும் கூத்து" என்றும் கூறுவார். தமிழர் மத்தியில் கும்மி ஆட்டம், கோலாட்டம், கரகாட்டம், பரதநாட்டியம் எனப் பல ஆடல் வகைகள் உள்ளன. மயிலாட்டம், ஒயிலாட்டம் போன்ற நாட்டுப்புறக் கலையில் நடன வகைகளும் உள்ளன.

தமிழர்கள் இறைநம்பிக்கை உடையவர் களாகவே இருந்து வருகின்றனர். தமிழர்கள் முற்காலம் தொட்டே பல்வேறு சமய மரபுகளை அறிந்தும் பின்பற்றியும் வந்துள்ளனர். ஐந்து நிலங்களுக்கும் உரிய தெய்வங்களை வணங்கி வந்துள்ளனர். பௌத்தம், ஜைனம், இந்து, கிறிஸ்தவம் ஆகிய பெரும்சமய மரபுகளைத் தமிழர்கள் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு போக்குகளுடன் பின்பற்றி வந்துள்ளார்கள். பெரும்பாலான தமிழர் தமது கடவுளாக முருகனை வழிபடுகின்றார்கள். ஐயனார், கண்ணகி அம்மன், வைரவர் ஆகிய காவல் தெய்வங்களைத் தமிழர்கள் வழிபட்டு வந்தனர்.

தமிழர்களது வாழ்க்கை முறையினை நோக்கும் போது பல்வகை மரக்கறிகள், சுவையூட்டும் நறுமணம் தரும் பலசரக்குகள், கடலுணவுகள் தமிழர் சமையலின் இன்றி யமையாத உணவுவகைகள் ஆகும். சோறும் குழம்புக் கறியும் அவர்களது பிரதான உணவாகும். பெரும்பாலும் தமிழரது உணவுகள் காரம் மிக்கவை. தமிழர்களது உடை அணியும் பழக்கம் ஆனாது காலம், இடம், தேவை, சூழ்நிலை, சாதி, சமயம் ஆகிய காரணிகளால் வேறுபடுகின்றது. வேட்டி, சேலை, தாவணி, பாவாடை போன்றவை மரபார்ந்த உடைகளாகக் கருதப்படுகின்றது. தமிழர்களது பொங்கல், தமிழ்ப்புத்தாண்டு ஆகியன சமய சார்பற்று அனைத்துத் தமிழர்களும் கொண்டாடும் விழாக்கள் ஆகும். தைப்பூசமும் தீபாவளியும் இந்து சமயத்தவர்கள் கொண்டாடும் முக்கிய பண்டிகைகள் ஆகும். தமிழர் பண்பாடானது உலகத்தில் பல்வேறுபட்ட இனத்தவர்களின் பண்பாட்டைவிட வேறுபட்டதும் ஒரு கட்டுப்பாடான ஒழுக்க நெறி நிறைந்த பண்பாட்டு முறையாகக் கருதப்படுகின்றது. தமிழர்கள் ஆகிய நாம் எமது பண்பாட்டை அறிந்து அவற்றிற்கு ஏற்ப ஒழுகித் தமிழ் இனத்திற்கே பெருமை தேடிக்கொடுக்க வேண்டும்.

**செ. புஸ்கரணி**
A/L 2017 கலைப்பிரிவு

# பாடசாலை நினைவுகள்...

தாய் வயிற்றில் முதல்
முறை பிறந்தேன்
பாடசாலை அன்னையின் மடியில்
மறுபடியும் பிறந்தேன்!

பல தவறுகள் செய்த
எம்மைத் திருத்தி பசுமை
ஊட்டிய மழைத்துளிகள்
பாடசாலை நினைவுகள்!



சில நினைவுகள் மனதில்
நின்றும் நீங்காதவை
மறக்க மனம் நினைக்காது
நினைக்கவே மனம் துடிக்கும்!

அற்புதமான அம்சங்கள்
அதனில் முதல் நிலையானது
எம் பாடசாலைத் தருணங்களில்
இனிமையான நினைவுகள்!

இறப்பிலும் கல்வெட்டில் பொறிக்க
வேண்டிய அதிசயமான
பாடசாலை நினைவுகள் மிகப்
பெரிய பொக்கிஷங்கள்!

பள்ளிப் பருவத்தில் துள்ளித்திரிந்தோம்
நண்பர்களாய் பருவ வயதில்
பரிமாறிக் கொண்ட நினைவுகளை
என்றும் மறக்க முடியாது!

நாம் பிரியும் தருவாயில்
எப்போது நாம் எனி
சந்தித்து பாடசாலை என்ற
அன்னையின் தோளில்
சாய்வோம் என்ற ஏக்கம்!

**இ. டர்சிகா**
A/L 2017 கலைப்பிரிவு

# நாட்டார் இலக்கியங்கள்

தமிழர்களுடைய பாரம்பரிய இலக்கிய வடிவங்களுள் நாட்டார் இலக்கியங்களும் ஒன்றாக விளங்குகின்றது. கிராமப்புறம் சார் பாமர மக்களுடைய வாழ்வியலுடன் இணைந்த இவ் இலக்கியங்கள் அக்கால மக்களினது வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறுகின்ற இலக்கியங்களாக அமைந்து விடுகின்றன. இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் உருவாகிய இக் கலை வடிவம் 20ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட நவீன இலக்கிய வளர்ச்சியின் போக்காலும் மக்களுடைய வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாகவும் மறைந்து செல்லுகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆயினும் பல்கலைக்கழக மட்டத்தில் பயில்நிலையில் நாட்டார் இலக்கியங்கள் விளங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. கிராமியக் கலைஇலக்கிய வடிவமான நாட்டார் இலக்கியங்களின் தோற்றம் வளர்ச்சி என்பன பற்றி அறிந்து கொள்வது அவசியமானதாகும்.

அக்காலத்தில் கிராமப்புறங்களில் வாழ்ந்த மக்கள் ஓய்வு நேரங்களில் தமது பொழுதைக் கழிக்க ஆடல், பாடல்களைத் தம் கருவியாகக் கொண்டனர். "ஆடிப்பாடி வேலைசெய்தால் அயர்வு இராது" என்ற முதுமொழிக்கிணங்க பகல் முழுவதும் உடல் உழைப்பினை வழங்கி களைத்துச் சோர்ந்திருந்த கிராம மக்கள் மாலை வேளைகளில் ஒன்றுகூடி ஆடிப்பாடி மகிழ்வார்கள். கல்வியறிவற்ற பாமரமக்களாகிய இவர்களால் தமது அனுபவங்களின் வெளிப் பாடாக தமிழ் வாழ்வியலோடு ஒன்றித்துப் போன சொற்களைக் கோர்த்து பாடல்களைப் புனைந்தனர். இவையே நாட்டார் பாடல்கள் என அழைக்கப்பட்டது. இந் நாட்டார் இலக்கியங்கள் பாமரமக்களால் பாடப்பட்டமையால் "பாமரகானங்கள்" என்றும்ஏட்டில்எழுதப்படாது செவிவழியாகப் பேணப்பட்டுவந்ததனால் "எழுதாப்பாடல்கள்" என்றும் "வாய்மொழிப்பாடல்கள்" என்றும் அழைக்கப்பட்டன. மக்கள் வாழ்வியலோடும் அவர் சார்ந்த தொழில்களோடும் பின்னிப் பிணைந்த இந் நாட்டார் பாடல்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ் மக்களிடையே இன்றும் ஏதோ ஒரு வகையில் தமது இருப்பை நிலைநிறுத்தி உள்ளது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது.

நாட்டார் இலக்கியங்களின் தோற்றம் பற்றி நாம் கருதும் போது இலங்கையில் தமிழர்கள் பெரும்பாலும் வாழுகின்ற பிரதேசங்களான மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இது தோற்றம் பெற்றது. அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கூடுதலான நாட்டார் பாடல்கள் தோற்றம் பெற்றதாக ஆய்வுகள் கூறுகின்றன. "ஊரூராய் கூத்தாடும் ஊரம்மா" என்ற கவிவரிக்குச் சான்றாகத்தமிழர்களின்பலகலைவடிவங்களின் தோற்றுவாய்கிழக்கிலங்கையின்மட்டக்களப்பு என்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் மக்களின் கிராமியக் கலைகளின் வாழ்விடமாக இம் மண் விளங்குகின்றது.

அடுத்து நாட்டார் பாடல்களை நாம் எடுத்து நோக்குகின்ற போது குழந்தை பிறந்தது முதல் அது இறக்கும் வரையான காலத்தில் சந்திக்கின்ற ஒவ்வொரு நிகழ்வு களும் நாட்டார் பாடல்களூடாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. குழந்தை பிறந்தவுடன் பாடப்படுகின்ற,

"அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி

அரிசி மலைநாடும் கண்டீரோ தம்பி"

என்று தொடங்கும் மருத்து விச்சிப்பாடல், குழந்தையின் பிறப்பு, அதன் சிறப்பு என்பவற்றை எமக்குத் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றது. அக்காலத்து மருத்துவமுறையின் பண்புகளை மருத்துவிச்சி பாடலூடாக நாம் அறியமுடிகின்றது. இயல்பாகவே நாட்டார் பாடலுக்கு இருக்கின்ற எளிமையான மொழிநடையும் ஓசை நயத்தையும் இப் பாடல்களில் காண முடிகின்றது. இதே போல் தாலாட்டுப் பாடல்களினை நாம் எடுத்துக் கொண்டால் குழந்தைக்கு உறவு முறைகளைத் தெரியப்படுத்தி அக் குழத்தையை எவ்வாறு வளர்த்தெடுக்கிறார்கள் என்பதை அப் பாடல் கூறுகின்றது. பொன்னே, மணியே, முத்தே, பவளமே, என்றெல்லாம் குழந்தையை மேன்மைப்படுத்தி பாடுகின்ற பாடலாகத் தாலாட்டுப் பாடல் அமைந்து விடுகின்றது.

இவ்வாறாக விளையாட்டுப் பாடல், காதற்பாடல், ஒப்பாரிப்பாடல் என நாட்டார் பாடல்களின் வகைகள் நீண்டு செல்கின்றன. "ஆலயிலே சோலையிலே" என்று விளையாட்டுப் பாடல் அக்கால மக்களின் கிராமிய விளையாட்டின் மகிமையினை பறைசாற்றுகின்றது. இதேபோல்

"வரம்போ தலைகாணி - செல்லா உனக்கு
வாய்க்காலோ பஞ்சு மெத்தை"

எனத்தொடங்கும் ஏர்ப்பாடல் அக்காலத்தில் மக்களின் தொழில் பாடல்களின் சிறப்பிற்குச் சான்றாக அமைந்து விடுகின்றது. இவ்வாறாகப் பாடல்களை பாடுவதன் மூலம் அக்கால மக்கள் உற்சாகத்துடன் தொழில் புரிந்ததை நாம் அறியமுடிகின்றது. வாழ்வின் அந்த மாகிய மரணத்தின் பின்னர் பாடப்படும் பாடல்களாக ஒப்பாரிப்பாடல் அமைந்துவிடுகின்றது.

தமிழ் மக்களுடைய அதாவது கிராமப்புற தமிழ் மக்களுடைய வாழ்க்கை வரலாற்றை எடுத்தியம்பும் காலக்கண்ணாடியாகிய நாட்டார் இலக்கியங்கள் உண்மையிலே எமது பாரம்பரிய கலை கலாசார விழுமியங்களின் முகிழ்ப்பே எனலாம். கிராமிய இலக்கியங்களான நாட்டார் இலக்கியங்கள் இன்று நூல் வடிவமாக்கப்பட்டுப் பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலக்கியத்தை ஒரு பாடமாகக் கற்கின்ற உயர் கல்வி மாணவர்கள் இதனையும் கற்கின்ற வாய்ப்பினைப் பெற்றுள்ளமை அவர்களுக்குக் கிடைத்த பேறே ஆகும். ஒரு காலத்தின் கண்ணாடி அக்கால இலக்கியங்களே என்ற சான்றோர் தம் கருத்திற்கு அமைய பண்டைத்தமிழர்களின் வாழ்க்கை முறையைச் சித்தரிக்கின்ற இலக்கிய கருவூலமாக நாட்டார் பாடல்கள் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**கு. பிரசாந்தி**
A/L 2017 கலைப்பிரிவு

# எண்களின் ஓர் ஜாலம்

உங்கள் நண்பரிடம் 100/100 ற்குள் ஒரு இலக்கத்தை நினைக்கச் சொல்லுங்கள். பின் இந்த அட்டவணைகளைக் காட்டுங்கள். அதில் உள்ள ஒவ்வொரு பெட்டிக் கட்டங்களிலும் உள்ள இலக்கங்களில் அவர் நினைத்த எண் உள்ளதா எனக் கேளுங்கள் . அவர் தான் நினைத்த எண் உள்ளது எனச் சொல்லும் பெட்டிக் கட்டங்களைப் பாருங்கள். அக்கட்டங்களில் வட்டமிடப்பட்ட எண்களைக் கூட்டுங்கள். அதுவே அவர் நினைத்த எண். தைரியமாகச் சொல்லுங்கள் பாராட்டைப் பெறுங்கள். அவசரப்பட்டு தப்பாகக் கூட்டிவிடாதீர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 3 | 5 | 7 | 9 |
| 11 | 13 | 15 | 17 | 19 |
| 21 | 23 | 25 | 27 | 29 |
| 31 | 33 | 35 | 37 | 39 |
| 41 | 43 | 45 | 47 | 49 |
| 51 | 53 | 55 | 57 | 59 |
| 61 | 63 | 65 | 67 | 69 |
| 71 | 73 | 75 | 77 | 79 |
| 81 | 83 | 85 | 87 | 89 |
| 91 | 93 | 95 | 97 | 99 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 3 | 6 | 7 | 10 |
| 11 | 14 | 15 | 18 | 19 |
| 22 | 23 | 26 | 27 | 29 |
| 31 | 34 | 35 | 38 | 39 |
| 42 | 43 | 46 | 47 | 49 |
| 51 | 54 | 55 | 58 | 59 |
| 62 | 63 | 66 | 67 | 69 |
| 71 | 74 | 75 | 78 | 79 |
| 82 | 83 | 86 | 87 | 89 |
| 91 | 94 | 95 | 98 | 99 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 40 | 41 | 42 | 43 |
| 44 | 45 | 46 | 47 | 56 |
| 57 | 58 | 59 | 60 | 61 |
| 62 | 63 | 72 | 73 | 74 |
| 75 | 76 | 77 | 78 | 79 |
| 88 | 89 | 90 | 91 | 92 |
| 93 | 94 | 95 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 5 | 6 | 7 | 12 |
| 13 | 14 | 15 | 20 | 21 |
| 22 | 23 | 28 | 29 | 30 |
| 31 | 36 | 37 | 38 | 39 |
| 44 | 45 | 46 | 47 | 52 |
| 53 | 54 | 55 | 60 | 61 |
| 62 | 63 | 68 | 69 | 70 |
| 71 | 76 | 77 | 78 | 79 |
| 84 | 85 | 88 | 87 | 93 |
| 94 | 95 | 100 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (16) | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 48 | 49 | 50 | 51 |
| 52 | 53 | 54 | 55 | 56 |
| 57 | 58 | 59 | 60 | 61 |
| 62 | 63 | 80 | 81 | 82 |
| 83 | 84 | 85 | 86 | 87 |
| 88 | 89 | 90 | 91 | 92 |
| 93 | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (64) | 65 | 66 | 67 | 68 |
| 69 | 70 | 71 | 72 | 73 |
| 74 | 75 | 76 | 77 | 78 |
| 79 | 80 | 81 | 82 | 83 |
| 84 | 85 | 86 | 87 | 88 |
| 89 | 90 | 91 | 92 | 93 |
| 94 | 95 | 96 | 97 | 98 |
| 99 | 100 | | | |
| | | | | |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (32) | 33 | 39 | 35 | 36 |
| 37 | 38 | 39 | 40 | 41 |
| 42 | 43 | 44 | 45 | 46 |
| 47 | 48 | 49 | 50 | 51 |
| 52 | 53 | 54 | 55 | 56 |
| 57 | 58 | 59 | 60 | 61 |
| 62 | 63 | 96 | 97 | 98 |
| 99 | 100 | | | |
| | | | | |
| | | | | |

*உதாரணம் → நான் நினைக்கும் எண் 29 இவ் 29 எப் பெட்டிகளுள் உள்ளது என்பதை நண்பியிடம் கூறுங்கள். (1), (2), (8), (4), (16) போன்ற பெட்டிகளுள் 29 என்ற எண்களை நாம் இனங்கண்டு நண்பியிடம் இவ்வாறான பெட்டிகளுள் உள்ளது என கூறினால் உடனே, நீங்கள் $1+2+8+4+16 = 29$ எனவே கேள்விக்கு விடையைப் பயமின்றிக் கூறுங்கள். கண்டுபிடித்து விட்டோம் 29 என்ற எண்ணை நீங்கள் ஒரு எண்ணை நினைத்துவிட்டீர்களா?*

**பி. கம்சாஜினி**
A/L 2017 கலைப்பிரிவு

# தமிழ் மொழியே!

அன்னை மொழி
அழ கார்ந்த செந்தமிழ்
முன்னைக்கு முன்னை
முகிழ்ந்த நற்கனி...

நன்மை தீமை வாராத
எம் நன் மொழி
அமைதி வழி காட்டும்
அன்பு மொழி....

எல்லா உயிரினமும்
உணர்ந்திடும் செம்மொழி
அன்னை அன்பு
காதல் வலிமையை உணர்த்தும்
உன்னத மொழி...

தொல் காப்பியமும்
வள்ளுவனின் ஒப்பற்ற
திருக்குறளும்
கண்ணகியின் ஒலிக்கின்ற
சிலம்பும்
மேகலை பேசும்
சிந்தாமணியுடன்
வளையாபதி
குண்டலகேசியும்
நிறைந்தது
நம் மொழி...

பாரதியும் கம்பனும்
கவியரசி ஔவையும்
ஆயிரம் ஆயிரம்
கவிதை புனைவோர்க்கும்
வித்தாக விளங்கும்
தமிழ் மொழி...

என்றும் ஓங்கி வளரும்
உயிருக்கு நிகரான
நம் மொழி
தமிழ் மொழியே...

ஊர் புகழ
செம் மொழியாய் உயர்ந்துநின்ற
இன்ப மொழி...

ஆண்டவனின் அடிமுடி
எல்லையற்றால் - போல்
ஆதி அந்தமில்லாதது
எம் இனிய மொழி....

முக்கனிச் சாறுக்கு
நல் சுவையாய்
தித்திக்கும் எம் மொழி
எத் திசை சென்று
தேடினாலும்
தமிழ் மொழிக்கு - நிகர்
தமிழ் மொழியே..

**ச. கீர்த்திகா**
A/L 2017 கலைப்பிரிவு

**சிலேடை அணி**

ஒருவகைச் சொற்றொடர் பலபொருட் பெற்று தெரிவுதர வருவது சிலேடையாகும். உச்சரித்தற்கண் ஒரு வடிவாக நின்ற சொற்றொடர் பல பொருளுடையதாக வருவது சிலேடையாகும்.

# தாய் அன்பு

இந்தஉலகைப்படைத்தஇறைவன்அனைத்து இடங்களிலும் நிறைந்து இருக்க முடியாது என்பதால், ஒவ்வொரு மனித உயிருக்கும் தனது உருவாக தாயைக் கொடுத்தார். அன்னையும், ஆண்டவனும் தனித்தனி வடிவங்கள் இல்லை என்பதை உலகிற்கு இந்தத் தத்துவம் மூலம் இறைவன் உணர்த்தியிருக்கிறான். இறைவனின் படைப்பில் தன்னலம் கருதாத படைப்பு ஒன்று உண்டு என்றால் அது அன்னை மட்டுமே என்றால் அது மிகையாகாது. அம்மா என்ற சொல்லைத் தமிழ் மொழியைத் தவிர வேறு எந்த மொழியிலும் சிறப்பாக எடுத்து இயம்ப முடியாது என்பது உலகறிந்த தமிழ் அறிஞர்கள் கருத்தாகும்.

அம்மா எனும் வார்த்தையின் 'அ' முதல் எழுத்து உயிர் எழுத்து. கருவில் உயிருக்கு உயிர் கொடுக்கின்றாள் என்பதை இது விளக்குகிறது. கருவில் உருவான உயிர் உருவாக்கம் பெறுவதற்கு, தாய் உடல்(மெய்) கொடுக்கிறாள் என்பதைக் குறிக்கவே 'ம்' எனும் மெய் எழுத்து அமைந்தது. தான் உருவாக்கிய குழந்தையை பத்து மாதங்கள் சுமந்து பெற்று, உலகின் வெளிச்சத்தைக் காண வழிகாட்டுகிறாள் என்பதையே கடைசி உயிர்மெய் எழுத்தான 'மா' குறிக்கிறது. இந்தத் தத்துவத்தை உலகிற்கு உணர்த்தவே உயிர், மெய், உயிர்மெய் என மூன்று எழுத்துக்கள் சேர்ந்து அம்மா என்ற சொல் உருவாக்கம் பெற்றது.

தாய் என்ற சொல் வெறும் உறவை மட்டும் குறிப்பதல்ல. அது அன்பு என்னும் சொல்லுக்கு ஒரு அர்த்தத்தைத் தரக்கூடியது. தாய் அன்பு என்பது ஒரு பெண்மையின் உச்சக்கட்ட அடையாளம். தாய்மையை ஒரு பெண் உணரும் போதுதான் அந்தப் பெண் வாழ்க்கையில் பூரணத்தைப் பெறுகிறாள். இந்தத் தாய் உறவுதான் கடைசிவரை மாறாதது.

தாய் என்ற ஈரெழுத்துச் சொல் உச்சரிக்கும் போதே தமக்குள் அன்பு சுரப்பதை ஒவ்வொருவரும் உணர்வார்கள். தாய் என்பவள் தன்னலம் உணராதவள். நம்மைப் பிரசவிப்பதால் அவளும் ஒரு கடவுள் தான்.

"உலகத்தவர் வகிக்கும் அந்தஸ்துக்களுள் தாய் ஒருத்தியின் அந்தஸ்தே தலை சிறந்தது. சுயநலப்பற்றற்ற நிலையில் தாய் ஒருத்தி இருக்கின்றாள். கடவுளின் அன்புக்கு அடுத்த படியில் இருப்பது தாயின் அன்பு தான். ஆதலால் தாயின் அன்பு மூலமே கடவுள் அன்பை நாம் அறிந்து கொள்கிறோம். ஏனைய அன்புகளெல்லாம் தாயின் அன்புக்கு நிகராகாது" என சுவாமி சித்பவானந்தர் கூறுகின்றார்.

எமது தமிழ் பண்பாட்டில் தாய்க்கு உச்ச ஸ்தானம் வழங்கப்படுகிறது. அம்மாவைப் போல எதையும் திரும்ப எதிர்பாராத அன்பு செலுத்தக் கூடியவர்கள் எவரும் இல்லை. அம்மா என்பவள் இருக்கும் வரை எவரும் அநாதை இல்லை. தாய் இருக்கும் வரை கவலை என்பது எமக்கு இல்லை. தாயை விட பெரிய நிழல் ஏதுமில்லை. தாயின் அன்புக்கு இணையே இல்லை.

சோற்றோடு அன்பையும் சேர்த்தே ஊட்டு வாள். தன் பிள்ளைக்காக தனது கனவுகள் இலட்சியங்களைத் தியாகம் செய்தவள்.

"பால் குடிக்கும் தன் மகனை மறப்பாளோ?

கருத்தாங்கினவள் தன் பிள்ளை மீது இரக்கம் காட்டாதிருப்பாளோ?

இவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறக்க மாட்டேன்."

ஏசாயா 49 : 15, NW

இவ் வரிகள் புதிய வேதாகமத்தில் இருந்து பெறப்பட்டவை.

ஒரு குழந்தை நன்றாக வளர்வதற்குத் தாயின் அன்பு மிகமிக முக்கியம் என்பது உண்மையே.

அம்மா! பிறக்கும் போது கவிஞனாக பிறந்தேனா எனத் தெரியவில்லை. ஆனால் பிறக்கும் போது கவிதை கூறிக்கொண்டுதான் பிறந்தேன் "அம்மா" என்று.

எமக்கு ஆயிரம் உறவுகள் அணைக்க இருந்தாலும் தாயைப் போல் அன்பு செய்ய இவ்வுலகில் யாரும் இல்லை. பசியென்று நான் கூறுமுன்னே தன் பசியை மறந்து எனக்கு சோறூட்டியவள் என் தாயே.

தாய் தனது குழந்தைகளின் தேவைகளை அறிந்து நிறைவேற்றுகின்றாள். தாய் தன் குழந்தைகளுக்காக அளப்பெரிய தியாகம் செய்கின்றாள். தான் உணவு உண்ணாமல் குழந்தையின் பசியைப் போக்குகின்றாள். என் கால்கள் வலிக்கக்கூடாதென என்னை எந்நேரமும் மடியில் சுமந்தவள் எனது தாய் என்பதை நான் மறவேன்.

"மாதா பிதா குரு தெய்வம்" எனும் அடிப்படையில் அனைவருக்கும் மேலானவள் தாயே. கண்ணை இமை காப்பது போல் தன் பிள்ளைகளை தாயானவள் காக்கின்றாள். தன் நிலை மறந்து எமக்காக வாழும் தாயின் அன்புக்கு ஈடு இணையே கிடையாது.

"தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை"

"தாயின் அன்பை வெளியிட உலகத்தில்
எந்த
மொழியிலும் போதிய வார்த்தைகள்
இல்லை"

அ. டிலக்ஷிகா
A/L 2017 கலைப்பிரிவு

## அறிந்து கொள்ளுங்கள்!

நீண்ட வெண்தாடியோடு ஒருகையில் எழுத்தாணியும் மறுகையில் பனையோலையும் பிடித்தபடி அமர்ந்திருக்கும் திருவள்ளுவர் சிலையை வரைந்தவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓவியர் கே. ஆர். வேணுகோபாலசர்மா ஆவர். இந்த ஓவியம் தமிழக அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பிரமாண்டமான விழாவும் நடாத்தப்பட்டு 1964இல் ஜனாதிபதியாக இருந்த ஜாகிர் உசைன் அவர்களால் சட்டமன்றத்தில் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ் அன்னையின் ஓவியத்தை வரைவதற்குப் பல்வேறு குறிப்புக்களை இவர் தேடினார். இறுதியில் மீனாட்சி சுந்தரனார் மனோண்மணியத்தில் எழுதிய

"எத்திசையும் புகழ் மணக்க இருந்த
பெருந் தமிழணங்கே - உன்
சீரிளமைத் திறம் வியந்து"

என்ற வரிகளில் தமிழ்த் தாய் இளமைத்தோற்றத் தோடு இருக்கவேண்டுமென 1979ஆம் ஆண்டு வரைந்து முடிந்தார்.

ஆனந்த விகடன்

# பள்ளிக் காலம்

அன்று
சோகத்தால் சோர்ந்திருந்தேன்
என் தோளோடு இன்னொரு தோள்
என் தோழியின் தோள்
" ஏனடி கலங்குகிறாய் தோழி
நான் இங்கு இருக்கையில்"? என்றாள்
இன்றும்
சோர்ந்து தான் இருக்கிறேன்.
தோள் தட்டி ஆறுதல் கூற ஒரு
தோழி என் அருகில் இல்லை
அன்று வெறுத்த என்
பள்ளி வாழ்க்கை - இன்று
நினைக்கையில் இனிக்கிறது...
ஒன்றாக அமர்ந்து பேசிய மரநிழல்கள்
இறுதிவரை நாம் விளையாடிய மைதானம்
மனதிற்கு அமைதி தந்த ஆலயம்
குறும்புகள் பல செய்த வகுப்பறைகள்
பேசியே கடத்திய பாடவேளைகள்
அறியாமல் இடையில் வரும் சிறுதூக்கம்
எதிர்பார்த்துக் காத்திருக்கும் இடைவேளை நேரம்
திருடித் தின்ற தோழியின் உணவு
சிறிய பாத்திரத்தில் பலர்கை பதிந்து
உணவுண்ட நேரங்கள்
படிக்காமல் எழுதிய பரீட்சைகள்

பல நாட்கள் அவகாசம் தந்தாலும்
பதறியடித்து இறுதிநாளே ஆரம்பித்த ஒப்படைகள்
சத்தமிட்டு நூலகவாயிலில் மண்டியிட்ட நொடிகள்
ஒளித்து ஒதுங்கிய விளையாட்டு நிகழ்வுகள்
பங்குபற்றி வெற்றியீட்டிய போட்டிகள்
தவறுகளையெல்லாம் புரிய வைத்து
வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுத் தந்த ஆசிரியர்கள்
கோபத்தால் அடிக்கடி வரும் சண்டைகள்
அத்தனை சண்டைகள் இட்டும் - என்னை
விட்டுக் கொடுக்காத என் தோழிகள்
தோற்ற போதெல்லாம் தோள் தந்த நட்பு
கண்மூடித் திறப்பதற்குள் கானலாகிவிட்ட
இந்தப் பள்ளிக் காலம் - இனிக்
கண் மூடினால் என் கனவுகளில்
மட்டுமே....

**ந. தேவதர்சினி**
A/L 2017 கலைப்பிரிவு

**உருவக அணி**

உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றென மாட்டினம் துருவக மாகும்.

உபமானம், உபமேயம் என்னும் இரண்டினையும் வேறுபாடு நீக்கி ஒன்றென்றுணர்ந்து கொள்ளும் படி மயங்கச் செய்யின், அஃது உருவக அணியாகும்.
உபமானம், உபமேயம் என்னும இரண்டிற்கும் பேதந் தோன்றச் சொல்லப்படுவது 'உவமையணி' எனவும், பேதமின்மை தோன்றச் சொல்லப்படுவது 'உருவக அணி' எனவும் உணர்க.

# மரபுக்கவிதை பற்றிய பயில்வும் பயிற்சியும்

## கவிதை

மனித உணர்ச்சிகளுக்கு உருக்கொடுக்கும் இலக்கிய வடிவம் கவிதை. 'உணர்ச்சி' என்பது மிக நுண்மையானது. அதனைச் சாதாரணமாக நாம் பயன்படுத்தும் வார்த்தைகளால் - மொழியால் வெளிப்படுத்தி விட முடியாது. கவிதை என்னும் இலக்கிய வடிவமே இதனைச் சாத்தியமாக்க வல்லதாக அமைந்துள்ளது. இதனால் தான் இலக்கிய வடிவங்கள் யாவற்றிலும் கவிதைக்கு அதிக முக்கியத்துவமும் கவனிப்பும் தரப்பட்டு வருகின்றது.

கவிதைகளை மரபுக்கவிதை, நவீன கவிதை என இரண்டாகப் பாகுபடுத்திப் பார்ப்பது பொதுவான வழக்காறாகும். இப்பாகுபாடு கவிதையின் கட்டமைப்பு மற்றும் கவிஞர்களின் கவிதை பற்றிய கருத்து நிலையினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

கவிதைகளில் மரபு - நவீனம் என்ற பாகுபாடு இருபதாம் நூற்றாண்டிலேயே உருவாகத் தொடங்கியது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலும் தமிழக மற்றும் ஈழத்து சமூக, பொருளாதார அரசியல் தளங்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கும் வளர்ச்சிகளும் நவீனத்துவ சிந்தனைகள் தமிழ்ச் சூழலில் கால்பதிக்க வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தன. தமிழ் இலக்கியங்களிலும் இந் நவீனத்துவ சிந்தனைகளின் தாக்கம் உணரப்படலாயிற்று. இதன் பின்புலத்தில் நவீன கவிதை படிப்படியாகத் தமிழ்ச் சூழலில் செல்வாக்குப் பெறத் தொடங்கிற்று.

நவீன கவிதை அறிமுகமாவதற்கு முன்னதாக மரபுக் கவிதையே தமிழ்ச்சூழலில் செல்வாக்குப் பெற்றதாக இருந்து வந்துள்ளது. மரபுக் கவிதை நீண்ட நெடிய வரலாற்றினைக் கொண்டது. சங்காலம் முதற்கொண்டு இக் கவிதையின் வரலாற்றினை அவதானிக்க முடியும்.

## மரபுக்கவிதை

மரபுக்கவிதை என்றால் என்ன என்பதனை விளங்கிக் கொள்வதற்கு 'மரபு' என்ற சொல்லினை வரையறுத்தும் விளங்கிக் கொள்வதும் அவசியமானதாகும். 'மரபு' என்பதற்குப் 'பண்டு தொட்டுப் பயின்று வருவது', 'வழிவழியாகப் பேணப்பட்டு வருவது', 'தொன்று தொட்டு வழங்கி வருவது' என்னும் பொருள்படத்தக்க வகையில் விளக்கங்கள் தரப்பட்டு வந்துள்ளன. இதனடிப்படையில் நோக்குகின்ற போது 'வழி வழியாப் பழங்காலத் தொட்டு பேணப்பட்டும் வழங்கியும் வந்த வரையறைகள், கோட்பாடுகள், கொள்கைகளால் கட்டடைக்கப்பட்டதே 'மரபு' எனலாம். இம் மரபார்ந்த கருத்து நிலைகளையும் கொள்கைகளையும் பின்பற்றி உருவாக்கப்பட்டவைகளே மரபுக் கவிதைகள் எனப்படுகின்றன.

## மரபுகக்கவிதையின் பண்புகள்:

மரபுக் கவிதையின் பொதுவான பண்புகளாகப் பின்வருவனவற்றினைக் குறிப்பிட முடியும்.

i. மரபுக் கவிதை 'செய்யுள்' வடிவத்தினால் ஆகியது.

ii. 'யாப்பு' வரன்முறைகளுக்குக் கட்டுப்பட்டது.

iii. 'ஓசை' ஒழுங்கு பேணப்படல் வேண்டும் என்பதில் அக்கறை கொண்டது.

iv. வடிவ நேர்த்தியினைப் பற்றி அதிகம் அக்கறை கொள்வது

v. வரையறுக்கப்பட்ட பொருண் மரபினை கொண்டதாக அமைவது

vi. எழுத்து மொழிவழக்கினை ஏற்றுக் கொண்டது.

vii. சொற்செட்டுக்கு அதிக முதன்மை தருவது.

viii. மரபார்த்த அணிகள் உத்திகள் என்பவற்றுக்கு முதன்மை தருவது.

ix. கவிஞனைமையப்படுத்தியதாக அமைவது - கவிஞனின் தனித்திறன், கற்பனை, சாதுரியம் என்பவற்றுக்கு முதன்மை தருவது.

x. கவிதையில் ஒழுங்கு, தூய்மை, புனிதம் என்பன பற்றி அதிக அக்கறை செலுத்துவது.

மரபுக் கவிதை இறுக்கமான விதிகளுக்கு உட்பட்டது எனக் கூறப்பட்டாலும் அதற்கான விதிமுறைகளும் இலக்கணங்களும் காலம், சூழல், வாசகர் ஏற்புணர்வு என்பவற்றுக்கிணங்க நெகிழ்வும் வளர்ச்சியும் மாற்றமும் பெற்றே வந்துள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றினை உற்று நோக்கும் போது இதனை உய்த்துணர முடிகின்றது.

## மரபுக்கவிதை வடிவங்கள்

மரபுக் கவிதை எனப் பொதுவாகக் கூறிக்கொண்டாலும் அதற்குள் பல கவிதை வடிவங்கள் உள்ளடங்கியிருப்பதனைக் காண முடிகின்றது. யாப்பின் அடிப்படையிலான வடிவங்கள் கட்டமைப்பே மரபுக் கவிதையின் வடிவத்தினைத் தீர்மானித்துள்ளது. யாப்பு என்பதற்கு ஒழுங்கு என்பது பொருள், செய்யுளில் ஓசை ஒழுங்கினையும் தொடர்ச்சியினையும் பேணி நிற்பதாகவே யாப்பு அமைந்துள்ளது. இதனடிப்படையில்.

i. ஆசிரியப்பா

ii. வஞ்சிப்பா

iii. கலிப்பா

iv. வெண்பா

எனப் பிராதன நான்கு பாவகைகள் தமிழில் செல்வாக்குப் பெற்றன. இப் பாவகைகள் தமக்கெனத் தனித்துவமான இலக்கண அமைதியைக் கொண்டவை. இப்பாவகைகளில் கவிதை புனைவதே சங்ககால சங்கமருவிய காலத்து வழக்காறாக அமைந்துள்ளது.

பாக்களில் வாசகர்களுக்கான ஈடுபாடு குறையும் காலங்களில் பாவினங்கள் செல்வாக்குப் பெற்றன. பாவினங்கள் பாக்களில் இருந்தும் வேறுபட்ட ஓசையும் ஒழுங்கும் கொண்டவை. தாழிசை, துறை, விருத்தம் எனும் மூன்று பாவினங்களும் முன்னர் விதந்துரைத்த பாவகைகளுடன் கூடி பன்னிரு பாவினங்களாகக் கிளைத்தன.

இவையேயன்றி விருத்தப்பா, மருட்பா முதலான பாவகைகளும் கட்டளைக்கலித்துறை முதலான பாவினங்களும் சிந்து, கண்ணி, தரு, கீர்த்தனை முதலான இசைப்பாவினங்களும் தமிழில் செல்வாக்குப் பெற்றுள்ளன. கவிஞர்கள் மக்களின் ஏற்புணர்வுக்கு இணங்க மரபுக் கவிதைகளில் மேலும் புதிய வடிவங்களைத் தேடிச் செல்வதைக் காண முடிகின்றது.

## மரபுக்கவிதையினை எழுதுதல்

மரபுக்கவிதையினை எழுதுவது என்பது இடர்ப்பாடான விடயாமகக் கருதப் படுகின்றது.

- மரபுக்கவிதை பற்றியதாக இருந்து வரும் முற்கற்பிதங்கள்

i. மரபுக்கவிதையை யாப்பறிந்தவர்கள் மட்டுமே எழுதலாம் எனக் கருது கின்றமை.

ii. மரபுக்கவிதை எழுதும் ஆற்றல்

சிலருக்கு மட்டுமே சாத்தியமாகும் என எண்ணுகின்றமை.

iii. மரபுக்கவிதையை எழுதுவதற்கு தனித்திறன்களும் செப்பமான மொழியாற்றலும் வேண்டும் என்று கருதுகின்றமை.

- மரபுக்கவிதை பற்றிய போலியான சிந்தனைகள்

i. மரபுக்கவிதை எழுதுவது தற்காலத் துக்குப் பொருத்தமற்றது எனக் கருதுகின்றமை.

ii. மரபுக்கவிதை வடிவத்தில் எழுதுவது மதிப்பினையும் பெருமையினையும் பெற்றுத் தராது என எண்ணுகின்றமை.

iii. நவீனகவிதைகளை எழுதுவது மர புக்கவிதை வடிவங்களில் எழுது வதிலும் பார்க்க மிக இலகுவானது எனக் கருதுகின்றமை.

- மரபுக்கவிதைகள் பற்றிய புரிந்துணர் வின்மை
- மரபுக்கவிதைகளில் ஆழ்ந்த பயிற்சி யின்மை
- மரபுக்கவிதைகளை எழுதுவதற்குப் போதுமான பயிற்சி வழங்கப்படாமை.

ஆனால் நவீன கவிதைகளுடன் ஒப்பிட்டு நோக்குகின்ற போது மரபுக் கவிதை களை எழுதுவது மிக இலகுவானதாக கருதப் படுகின்றது. நவீன கவிதைகள் வடிவ ரீதியில் நெகிழ்வுத் தன்மை கொண்டனவாக அமைந்தாலும் அவை கூறவிழையும் விடயங்கள் கனதியும் காத்திரமும் பொருந்தியவை. சமூகப் பிரச்சினைகள், அகமன நெருக்கீடுகள் என நுட்பமான விடயங்களைப் பேசுவனவாக அவை அமைந்துள்ளன. மேற்படி விடயங்களை மரபுக் கவிதைகளில் பேச முடியும் என்றாலும் நவீனகவிதைகளில் தான் அவை அதிக அழுத்தம் பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

i. மரபுக்கவிதை வடிவம் குறித்த போதுமான அறிவும் பிரக்ஞையும் ஒருவருக்கு இருந்தால் ஒருவரால் தரமான கவிதைகளை உருவாக்க முடியும். கவிதை வடிவம் பற்றி அதிகம் சிரமப்பட் வேண்டிய தேவை மரபுக்கவிஞனுக்கு இருப்பதில்லை.

ii. மரபுக்கவிதைகளில் உள்ள ஓசைச் சிறப்பு வாசகரினை மிக வேகமாகக் கவருந்தன்மையு டையது; கவிதைக்கு மதிப்பினையும் சிறப்பினையும் பெற்றுத் தரவல்லது.

iii. ஓசைத் தொடர்ச்சியினைக் கவிதைகளில் சரிவரப் பேணத் தெரிந்தவர்கள் யாவரும் மரபுக் கவிதைகளை எழுத முடியும். யாப்பிலக்கணப் பயிற்சி அவசியமானது என்றில்லை.

iv. ஓசைச் சிறப்பு வரையறுக்கப்பட்ட விடயங்களை அழுத்தமாகவும் உணர்ச்சி பொங்கவும் பேசுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகின்றது.

v. எழுத்தாளருக்கு நன்கு பழக்க மான கவிதை உத்திகளைக் கொண்டு மரபுக்கவிதைகளைக் கட்டமைக்க முடியும். அணிகள், தொடையலங்காரங்கள் பற்றிய அடிப்படை அறிவே நயம் மிக்க கவிதைகளை உருவாக்கப் போதுமானது.

vi. கவிஞரின் கற்பனை, வர்ணனை முதலான ஆற்றல்களை மரபுக் கவிதைகளில் மிகச் சிறப்பாக வெளிப்படுத்த முடியும்.

vii. மரபுக்கவிதையே இசைப் பாடல்களை உருவாக்கிக் கொள்வதற்கு பெரிதும் உதவியாக அமைகின்றது.

viii. ஒருவர் கல்வி கற்கத் தொடங்கிய காலம் முதற்கொண்டு அதிகம் ஊடாடிய கவிதை வடிவம் மரபுக் கவிதையே.

ix. குழந்தைப்பாடல்கள், பக்திப் பாசுரங்கள், சரமகவிகள், இசைப் பாடல்களை எழுத மரபுக்கவிதை வாய்ப்பானது.

**மரபுக்கவிதையினை எழுதுவதற்கு வேண்டற்பாலன**

i. மரபுக்கவிதைகள் ஆர்வம் கொண்டிருத்தல்

ii. மரபுக்கவிதைகளை விருப்புடன் அதிகளவில் வாசித்தல்

iii. மரபுக்கவிதைகளை நயக்கப் பழகுதல்

iv. மரபுக்கவிதைகளின் சாத்தியப் பாடுகளை விளங்கிக் கொள்ளுதல்

v. யாப்பிலக்கணம் குறித்த அடிப்படைப் பயிற்சி

vi. அணிகள், தொடையலங்காரங்கள், இசைப்பாவடிவங்கள், சந்தம் என்பன பற்றிய தெளிவும் பயிற்சியும்.

vii. சரளமான மொழிப் பயிற்சி

viii. மரபுக்கவிதைகளை தொடர்ச்சியாக எழுதி வருதல்

ix. தேவைப்படின் முன்னுதாரணமாக சில மரபுக்கவிஞர்களின் பாணியினைக் கைக்கொள்ள முடியும்.

x. சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் எழுதிய மரபுக்கவிதைகளை வல்லுநர்களிடம் காட்டி அவர்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெறுதல்

மரபுக்கவிதைகளில் ஈடுபாடு கொண்டு செயற்பட்டால் சிறந்த கவிஞர்களாக உருவாக முடியும். அதற்கு அர்ப்பணிப்பும் ஆர்வமும் மிகவும் அவசியமானவையாகும்.

**ஈஸ்வரநாதபிள்ளை குமரன்,**
**(B.A Hons (Tamil). M.Phil) B.A (English literature)**
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**தற்குறிப்பேற்ற அணி**

பெயர்பொரு ளல்பொரு ளெனவிரு பொருளினும்
இயல்பின் விளைதிற னன்றி யயலொன்று
தான் குறித் தேற்றுத நற்குறிப் பேற்றம்.

இயங்கியற் பொருளிடத்தாவது நிலையியற் பொருளிடத்தாவது இயல்பாக நிகழுந் தன்மையை ஒழித்துக் கவிஞன் வேறொரு பிரகாரத்தை நன்கு சிந்தித்து அதனை ஏற்றிச் சொல்லுதல் தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும்.

# கவிஞர் வள்ளுவர்

## -அழகியல் பார்வையில் திருக்குறள்-

### முன்னுரை

தமிழின் தலைமைப் படைப்புக்களுள் மிக்க சிறப்பு வாய்ந்தது திருக்குறள் என்பதை அனைவரும் ஒப்புவர். உயர்ந்த கருத்துக்களை நல்ல முறையில் நிரற்படுத்தி வள்ளுவர் தந்துள்ள இச் சொத்து, மனுக் குலத்தின் பாரிய சாதனைகளுள் ஒன்றாகக் கருதத் தக்கது.

இல்லறத்திற்குத் தேவையான கருத்துகளாகட்டும், துறவறத்திற்கும் தேவையான கருத்துக்களாகட்டும், அரசியலிற்குத் தேவையான கருத்துகளாகட்டும் இவ்வாறு இன்ன பிற நடவடிக்கைகளுக்குத் தேவையான கருத்துகளாகட்டும் அவை திருக்குறளிலே எடுத்துக் கூறப்பெற்றுள்ளன. எடுத்துக் கூறப்பெற்றுள்ளன என்றால், இக் கருத்துக்கள் ஏதோ போகிற போக்கில் சும்மா குவியலாகச் சொல்லப் பெற்றுள்ளன என்பது கருத்தன்று. இயற்கையையும், அறத்தையும் நன்கு உணர்ந்துகொண்ட ஒருவர், மனிதர்கள்தம் உளவியலையும் அறிந்துகொண்டு, இக் கருத்துக்களை வைக்க வேண்டிய ஒழுங்கில் வைத்துத் திருக்குறளாகச் செய்துள்ளார் என்பதே உண்மையாகும்.

இவ்வாறு உயர்ந்த கருத்துகளினை நூல் முழுவதும் நூலாசிரியர் திருவள்ளுவர் பெய்து வைத்திருப்பதனால், அவரைச்சிறந்த சிந்தனைச் சிற்பியாகக் கொண்டாடுகின்றது உலகம். எனினும் இச் சிறப்பே அவருக்குக் கிடைக்க வேண்டிய பிற உயர்வுகளுக்குத் தடையாக உள்ளதோ என்று எண்ணத்தோன்றுகின்றது.

குறிப்பாக, அவரை ஒரு தலைசிறந்த கவிஞராகப் பலரும் கொள்ளத்தயங்குவதற்கான காரணம், திருக்குறள் ஒருகருத்துக்களஞ்சியமாக இருப்பதுதான் எனலாம். அற நூல் எழுதிய ஒருவர் கவிஞராக இருக்க முடியாது என்பது அளவுகோல் எதுவுமற்றதொரு வாதம். இது இன்னமும் பலராலே நம்பப்படுகின்றது. இவர்கள் சொல்வதுபோல வள்ளுவர் ஒரு கருத்து மேதை மட்டும்தானா, அல்லது கவிஞருமா என்பது காண்பட வேண்டியது அவசியமானதாகும். இதற்குத் திருக்குறள் நூலை அழகியல் நோக்கில் பார்ப்பது மிகுந்த பயன் செய்யும் எனலாம்.

### பெரிதினிது அழகியல்

வாழ்க்கையின் படப்பிடிப்பைச்சுவாரசியம் குன்றாமல் நடாத்திச் செல்லுவதை அழகியல் மிகவும் வற்புறுத்துகின்றது. இப்படி, சுவாரசியம் குன்றாத நவீன படைப்புகளை அழகியல் உலகம் உச்சிமேல் வைத்து உவக்கின்றது. மேலைத்தேய அழகியல் கோட்பாடுகள் பெரிதும் வலியுறுத்தும் இவ்விடயமானது தமிழ்ப் படைப்புலகத்தைப் பொறுத்தவரை புதிய வரவன்று இது, என்றோ வள்ளுவரால் படைப்பாக நெறியாகக் கடைப்பிடிக்கப்பட்ட ஒன்றுதான்.

ஒரு விடயத்தை வெறுமனே தட்டையாகச் சொல்லி நகருகின்றவர் அல்லர் வள்ளுவர், சொல்லுகின்ற அறப் போதனை விடயங்களும், அவற்றைச் சொல்லவென அவர் எடுத்துக் கொண்ட குறள் வெண்பா வடிவமும் கருத்துக்களை அப்படியே உள்ளவாறு வெளிப்படுத்துகின்ற வாய்ப்பைத்தான் பெரும்பாலும் அவருக்கு வழங்கியுள்ளன. எனினும் இத்தகைய இடர்ப்பாடுகளின் மத்தியிலும் அவர் கருத்துகளை அழகியல் பூர்வமாகவும் வெளிப்படுத்தியுள்ளமைதான் அவரை உன்னத படைப்பாளியாக உயர்த்தி வைத்துள்ளது.

தட்டையான கருத்துப்போதனைகளுக்கான களங்களிலும் அவர் எத்துணை இலாவகமாக,

கவித்துவச் சித்திரிப்புகளை நிகழ்த்துகின்றார் என்பதற்குப் பின்வரும் குறள் தக்க எடுத்துக் காட்டாகும்.

"பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்

பீழை தருவதொன்றில்"

அறிவில்லாதவர்களுடைய நட்பு மிகவும் இனிமையானது. ஏன் என்றால் அது விட்டுப் பிரிந்து செல்கின்ற போது எவ்விதமான துன்பத்தையும் தருவதில்லை என்று இக் குறள் கூறுகின்றது.

உண்மையில், அறிவில்லாதவரான பேதையாருடன் நட்புக் கொள்ளக் கூடாது என்பதைத்தான் இக்குறள் வெளிப்படுத்த முனைந்தது. ஓர் அற நூல் இதனை இவ்வாறே வெளிப்படுத்துவதே போதுமானதாகும். ஆனால், திருக்குறளை அறநூலாக மட்டு மல்லாமல், அழகியல் வசீகரம் நிரம்பிய நற் கவிதை நூலாகவும் படைத்தளித்த வள்ளுவர் இக் குறளின் மையச் செய்தியை அவ்வாறே தட்டையாக வழங்கிவிடவில்லை.

அறிவிலோரைச் சேராதே என்று மற்றைய அற நூல்களைப் போலச் சொல்லாமல், அவற்றுக்கு முரண்படுவது போல "பெரிதினது பேதையார் கேண்மை" என்று கூறி, முதலில் திகைப்பை ஏற்படுத்துகிறார் வள்ளுவர், இத் திகைப்புத்தான் இப் படைப்பைப் புதிரோடு திரும்பிப் பார்க்கச் செய்கின்றது. ஏன் இப்படிச் சொல்லியுள்ளார் என்ற வினா, படைப்பின் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரிக்கின்றது.

இவ்வாறு அதிகரிக்கும் வாசகரின் எதிர்பார்ப்புணர்ச்சிக்கு தொடர்ந்து வரும் மெல்லிய நகைச்சுவையானது தக்க தீனியிடு கின்றது. முரண் சுவையில் பயணிக்கத் தொடங்கிய குறள் நகைச்சுவையில் வாசகர்கள் அனைவரையும் கைப்பற்றிவிடுகின்றது. இந்த அழகியல்தான் அறப் போதனையாக அமைந்திருக்க வேண்டியதை, நல்ல கவிதையாக உருமாற்றி விடுகிறது.

**தேர்ந்தெண்ணிச் சொல்லல்**

ஒரு செய்தியைச் சொல்லுகின்ற இடமும், அச் செய்தியைச் சொல்லுகின்ற விதமும் படைப்பில் மிக முக்கியமானவை. சாதாரணமான ஓரிடத்தில் சொல்லப்படுகின்ற போது பெரிதும் வாசகர்களின் கவனத்தை ஈர்க்காத செய்தியொன்று. அவர்களுக்கு மிகுந்த ஈடுபாடுள்ள பகுதியில் வைத்துச் சொல்லப்படுகின்றபோது நன்றாக நுகரப்ப டுகின்றது. மனிதர்களுடைய மனங்களை நன்கறிந்தவரான வள்ளுவருக்கு இந்த உண்மை தெரியாததன்று.

வாசகரின் நாட்டம் இயல்பாகவே செல்லக் கூடிய பகுதி காமத்துப் பால் என லாம். இப்பாலின் இடங்கள் சிலவற்றில் வள்ளுவரால் உவமைகளாக அறங்களே அமைக்கப்பட்டமை நோக்கம் கருதியதே எனலாம். அறங்களை நேரடியாகச் சொன்ன சந்தர்ப்பங்கள் போக, இந்த இடங்களிலும் அறங்களைச் சிறிய அளவிலேனும் கூறினால் இவை இலகுவில் பதியும் எனக் கருதியே அவர் எடுத்துக்காட்டுகள் சொல்வதுபோல அறங்களைச் சொல்லிவிடுகிறார்.

அதாவது, அறஞ் சொல்வதைப் பிரதான மாகக் கொண்ட நூலில், இந்த காமத்துப்பாலில் அறம் இன்னொன்றுக்கு உவமையாக இரண்டாமிடத்தை அடைகின்றது. ஆனால், வள்ளுவருடைய நோக்கத்தைப் பொறுத்த வரையில் அதுவே முதன்மையுடையது.

அறத்தை ஒரு போதனையாக மட்டுமே சொல்லி விடுவதில் செய்திப் பரிமாற்றம் எனும் நன்மையொன்றே ஏற்படுகின்றது. அதனை உவமை முதலிய அணிகளுள் ஒன்றாக அமைக்கிற பொழுது, அந்த அறப் போதனையை அறிய முடிவதோடு நல்லதொரு கவிதையை அனுபவிக்கின்ற இன்பமும் ஏற்பட்டுவிடுகின்றது. இவ்வாறு செய்வதனால் நூலின் கருத்துப் பெறுமதி மட்டுமன்று, அழகியல்பெறுமதியும்நன்குஅதிகரிக்குமெனப் புரிந்து கொண்டுள்ளதால்தான் வள்ளுவர்

காமத்துப் பாலிலும் அடிக்கடி அறக் கருத்துகளை அணிகளாக்குகின்றார்.

காதலியோடு அனுபவிக்கின்ற இன்பத்தைக் காதலன் ஒருவன் சொல்வதுபோலச் சொல்ல வந்த வள்ளுவர், அவ்வின்பம் வார்த்தைகளால் விவரிக்கப்பட முடியாதது ஆதலால், உவமை ஒன்றன் மூலம் உணர்த்திவிட முடிவு செய்கின்றார். உவமைக்கான களங்கள் பல இருக்கும் இடத்தில் வள்ளுவர், எங்கிருந்து உவமையை எடுத்துக் கொள்கின்றார் என்பதைக் காண்பது அவரது உண்மை உள்ளத்தை அறிய உதவி செய்யும் எனலாம்.

இன்ப அனுபவத்திற்கு உவமை சொல்ல ஆயிரம் இடங்கள் இருக்கவும் வள்ளுவர், பகுத்துண் ணும் அறத்தையே தெரிவுசெய்து,

"தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால் அம்மா

அரிவை முயக்கு"

என்று சொல்லிமுடிக்கின்றார். இதன் மூலம் காதல் இன்பமானது, பகுத்துண்டு பெறும் இன்பத்தைப் போன்றது என்கிறார் வள்ளுவர்.

அதாவது தமது சொந்த வீட்டில் இருந்து கொண்டு வருவாயை அறம் சொல்லும் நெறியில் கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுப்பதற்காகப் பகுத்த பின்னர், விருந் தினர்க்குரிய பகுதியினை விருந்திட்டு, பின் தானுமுண்டு திருப்தி அடையும் பொழுது பெறுகின்ற இன்பத்தை ஒத்தது அக்காதலின்பம் என்பது வள்ளுவர் வார்த்தை.

''செல்விருந்து ஓம்பி வருவிருத்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத்தவர்க்கு"

என்றெல்லாம் பலவறாக அறத்துப்பால் விருந்தோம்பல் அதிகாரத்தில் விருந் தோம்பலின் அவசியத்தை வலியுறுத்திச் சென்றுள்ளார் வள்ளுவர். அந்த அதிகாரத்துக்கு அப்போதனைகள் மிகவும் அவசியமானவையே என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. ஆனால் பகுத்துண்ணும் இந்த அறத்தைப் பற்றி நினைக்கவே வேண்டாத இடத்தில், அதுவும் காமத்துப்பாலில் அவர், தம்மில் இருந்து தமதுபாத்து உண்பதைப் பற்றிப் பேசுவதுதான் அதிசயமானது.

அறப் போதனையாக அமையவல்ல ஒரு செய்தியை, தம்மில் இருந்து தமதுபாத்து உண்பதைப் போன்ற காதல் இன்பம் எனக் கூறுவதன் ஊடாக, தக்கதோர் உவமையாக்கி விட்டார் வள்ளுவர், இந்த அற உவமை வாசர்கள் எதிர்பாராத இடத்தில் பூத்து நின்று அழகியல் தேன் சொரிந்து கொண்டு நின்கின்றது.

அதுவும் பகுத்துண்பதைப் போன்ற காதலின்பம் என்றளவில் சொல்லி அமைந்திருந்தால், இக் கவிதை உவமை இன்பத்தை மட்டும் தந்து நிற்க, இதன் அழகியல் பெறுமதி மட்டுப்பட்டதாகவே அமைந்திருக்கும். ஆனால் இக்கருத்தை வெளிப்படுத்த அவர் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தியுள்ள வார்த்தைகளும் அவை கூறும் உண்மைகளும் குறளின் கவித்துவ வசீகரிப்பை மென்மேலும் அதிகரித்துள்ளன. இவ்வசீகரிப்பு குறளின் அழகியல் பெறுமதியை மிகவும் அதிகரிக்கச் செய்துவிடுகின்றது.

முதலில் குறளில் காணப்படும் ''தம்மில்'' எனும் வார்த்தைப் பிரயோகம் கவனிக்கத்தக்கது. விருந்தோம்பல் முதலாக, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறத்தைச் செய்யும் ஒருத்தன் அதன் மூலம் உண்மையான மகிழ்ச்சியை அடைய வேண்டுமாயின் தனது சொந்த வீட்டிலிருந்து இந்த அறத்தைச் செய்ய வேண்டும் என்பதையே இந்த ''தம்மில்'' என்னும் பிரயோகத்தின் ஊடாக வள்ளுவம் குறித்துள்ளார். இதன் மூலம் அடுத்தவர்கள் வீட்டில் நடக்கும் விருந்தோம்பலை ஏதோ தாம் நடாத்தியது போல பொய் மகிழ்ச்சி உறும் சில சமுதாய மனிதர்களை இலாவகமாக ஓரங்கட்டுகிறார் அவர்.

தம் வீட்டில் வைத்து விருந்து கொடுத்தால் மட்டும் போதுமா? போதாது. அந்தப் பகுத்துண்ணும் அறத்திற்குச் செலவு செய்யும்

பொருளும் அந்த ஒருத்தனின் சொந்த உழைப் பாக இருத்தல் வேண்டும். தமது வீட்டில் வைத்து அடுத்தவனின் உழைப்பில் விருந்திட்டு மகிழ்வது உண்மையான மகிழ்ச்சி இல்லை என்பது வள்ளுவர் கருத்து. இக்கருத்தையே இக்குறளில் அவர் பெய்துள்ள "தமது" எனும் சொல் குறிக்கின்றது.

இங்கே, "தம்மில்" என்றும் "தமது" என்றும் வள்ளுவரால் அமைக்கப்பட்டுள்ள சொற்கள் மேலே காட்டப்பெற்றுள்ளவை போல, பகுத்துண்ணும் அறத்துப்பால் அறங்களை மட்டும் சொல்லப் பெய்யப்படவில்லை. உவமானத்துக்குப் பயன்படுத்தப்பெற்றுள்ள சொற்களை உவமேயத்துக்கும் கூட்டியுரைக்க வேண்டுமென்பது வள்ளுவர் நோக்கமாக இருந்திருக்க வேண்டும். இதனால் பெண்ணின் பத்தைப் பெறும் தலைவன் ஒருவன் அந்த இன்பத்தை தனது உரித்துடையாளிடம் மட்டுமே பெறுதல் வேண்டும் எனும் காமத்துப்பால் அறமும் உணர்த்தப்படுகிறது. வள்ளுவர் சொல் வகை வேட்டுவக் கலைஞர். ஒரு வலை வீச்சில் பல பொருள்களை வீழ்த்தி விடுவது அவரியல்பு.

தொடர்ந்து அவருடைய அற உள்ளம் நன்கு வெளித் தெரியும் வார்த்தை வருகிறது. அச்சொல்தான் ''பாத்து'' என்பது. அதற்கு பகுத்து என்பது பொருள். இல்லறக் கடமைகள் பலவற்றுக்குமாக, தமது வருவாயைப் பகுத்துக் கொள்ள வேண்டும் என்பதைக் குறித்துதான் இவ்வார்த்தைப் பிரயோகம். அதாவது, தெய்வம், தென்புலத்தார், விருந்தினர், சுற்றத்தார் ஆகியோருக்கு, தனது வருவாயை ஒருவன் பகுத்து வழங்கி அறம் செய்ய வேண்டும் என்னும் அவர் கருத்தை இச்சொல் தருகின்றது.

இக் கருத்து முன்னமே அவரால் அறத்துப் பாலில் சொல்லப்பட்டதுதான். எனினும் இங்கே உவமை சொல்வதுபோல மீள மேலோட்டமாகச் சொல்வதற்கும் காரணம் உண்டு. அறத்துப் பாலில் இவ்விடயத்தைக் கற்றவன் பெண்ணின்பத்தில் மயங்கி, சிலவேளை அற நினைப்பற்றவனாகி விட்டிருப்பான். அவனுக்கு ஞாபகமூட்டவும், அறத்துப்பாலைக் கற்காமல் ஆர்வ மிகுதியில் நேரே காமத்துப் பாலைக் கற்பவனுக்கு இதை அறிவிக்கவுமே அவர் இவ்விடத்தில் பகுத்து என்பதைக் கூறுகின்றார்.

உவமானத்துக்குப் பயன்படுத்தப்பெற்றுள்ள சொற்களை உவமேயத்துக்கும் கூட்டியுரைப்பதன் மூலம் மேலதிக விடயங்களை உணர்த்துகிற வள்ளுவர், பாத்து எனும் சொல் இதனால், உரைக்கும் செய்தி நுட்மானது. பெண்ணின்பத்தைப் பெறும் தலைவன் ஒருவன் அந்த இன்பத்தை தான் மட்டுமே பெறும்படியாக அனுபவிக்காமல், தன் துணையும் பகிர்ந்து பெறும் வண்ணம் அனுபவிக்க வேண்டும் எனும் காம சாத்திரச் செய்தியும் உணர்த்தப்படுகிறது.

இப்படி ''பகுத்து'' எனச் சொல்வதனால் ஏதோ விருந்தோம்பல் முதலிய அறங்களைச் செய்து மற்றவர்களுக்கு வழங்குவதை மட்டும்தாம் வள்ளுவர் வலியுறுத்துகின்றார் என நினைத்தலாகாது. முழுப் பொருளையும் அறங்களுக்கே செலவு செய்ய வேண்டும்போலும் என்று எழுகின்ற எண்ணத்தையும் அவர் அங்கீரிக்கவில்லை. அறங்களுக்கு முழுப் பொருளையும் செலவு செய்து விட்டால் தன்னை மனைவியை குழந்தைகளைப் பேணுவது எப்படி என்னும் யதார்த்த பூர்வமாகவும் சிந்திக்கச் செய்கின்றார் வள்ளுவர்.

அதனால்தான் ''தம்மில் இருந்து தமது கொடுத்து'' மகிழ்கின்ற இன்பம் என் அவர் பேசவில்லை. "தம்மில் இருந்து தமது பாத்து உண்பது'' போன்ற மகிழ்ச்சி என்றுதான் பேசுகின்றார். ''பாத்து உண்க'' அதாவது, பகுத்துக் கொடுத்து அறம் செய்த பின்னர் உனக்கு உரிய பங்கை உண்க என்பதுதான் அவர் அறிவுரை. "தமது பகுதது கொடுத்தற்றால்'' என அறஞ் செய்தலுக்கே முழுமையும் சார்பாக அமைக்காமல், "தமது பகுத்து உண்டற்றால்" என யதார்த்தச் சார்பாக அவர் இக் குறளை அமைத்துள்ளமை இங்கே கவனிக்கத்தக்கது.

''கொடுத்துக் கொடுத்துக் கொண்டே இருப்பது மட்டும் அறமன்று. உன்னையும் உன் குடும்பத்தையும் பேணுவதும் அறந்தான். ஆகவே மற்றவர்களுக்குக் கொடுப்பதிலேயே முழுப் பணத்தையும் செலவு செய்யாமல், உனக்கான பங்கில் நீயும் நன்கு சாப்பிடு'' என வாசகர்களுக்கு வள்ளுவர் கூறிச் செல்கிறார். இச் செய்தியைத் தெரிவிக்க அவருக்கு பல வரிகள் தேவைப்படவில்லை. வெறுமனே ''உண்டு'' எனும் ஒற்றைச் சொல்லைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தியுள்ளதன் மூலம், இதனை உணர்த்தி விடுகிறார். இவ்வாறு உலகியல் சார் யதார்த்தக் கருத்தை மிகமிகச் சுருக்கமாக அவர் வெளிப்படுத்தியுள்ள விதம் அவரது கவிதா வீரியத்தையும் காட்டுகின்றது.

அறம் சொல்கிறோம் என்ற போர்வையில் ''விருந்திடுக'' என, சும்மா மேம்போக்காகச் சொல்லி விட்டு அமையாமல், தனது அறிவுரைகளைப் பின்பற்றுபவன் வாழ்க்கையிலும் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக மிகவும் யதார்த்தபூர்வமாகக் கருத்துக்களை வள்ளுவர் வெளியிட்டுள்ளார். வருவாயைப் பகுத்துக் கொள்ளாமல் முழுப் பொருளையும் செலவிடுகின்றவனுக்கு மகிழ்ச்சி தொடர்ந்தும் நிலைக்காது என்னும் செய்தி இதன் மூலம் மறைவாக உணர்த்தப்படுகின்றது. இச் செய்தியை மறைவாக உணர்த்துகின்ற தன்மையானது, அறப் பிரசார நூல் எனும் நிலையையும் மேவி, உன்னத கவிதை நூல் எனும் வார்க்கத்திலும் குறளை அமர்த்திவிடுகின்றது.

வைக்கப் பட வேண்டிய இடத்தில் ஒரு பொருள் வைக்கப்படுவது அழகை அதிகரித்துவிடும் என்பது உலகியற்கை, அப்படித்தான் இடமறிந்து வைக்கப்பட்டுள்ள வார்த்தைகள் குறளின் அழகியல் பெறுமதியைக் கூட்டி விடுகின்றன. அவர் சொல்ல நினைத்த பல விடயங்களையும் உணர்த்தக் கூடிய சின்னஞ் சிறு வார்த்தைகள் பென்னம் பெரிய உண்மைகளை மறைமுகமாகத் தருகின்றன.

இதன் மூலம் எவ்விடத்திலும் தனக்கு முதன்மையாகப் படும் விடயத்தைப் பேசிச் சென்று விடுகின்ற அவர் ஆளுமையை மட்டும் தரிசிக்கவில்லை. வாசகர்கள் விரும்பும் விடயங்களைப் பேசுவதுபோலப் பேசி, அவ்விடங்களிலும் மனுக்குலத்திற்கு அவசியமான அறங்களை இலாவகமாக, அழகியல் பூர்வமாக வெளிப்படுத்திவிடுகின்ற அவரின் கவித்துவ உளத்தையும் தரிசிக்கலாம்.

**கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்,**
விரிவுரையாளர்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.



# அடியார் வழிபாடு: தோற்றமும் வளர்ச்சியும்

அடியார் எனப்படுவோர் இறைவழி பாட்டிலும் இறை பணியிலும் தீவிரமாக ஈடுபட்டு அதனால் மதிப்புற்று ஏனையோரால் பின்பற்றப்படும் வழிபடப்படும் நிலை எய்திய பக்தர்கள், ஞானியர்கள் ஆவர்.

அடியார் என்ற சொல்லானது இறைவன் அடியைச் சார்ந்தவர்கள் என்று பொருள் கொள்ளத்தக்கதாயினும் தமிழ் மொழி வழக்கை நோக்குகின்ற நிலையில் அவ்வாறு கொள்ளுவதில் இடர்ப்பாடு உள்ளது. ஏனெனில் அடியார் என்ற சொல்லுக்கு நிகரான அடிகள் என்ற சொல்லானது தமிழில் அரசர்களைக் குறிப்பதாகவும், ஆண்டவனைக் குறிப்பதாகவும் கூடப் பயின்று வந்துள்ளது. சேரர் குலத்து இளவரசர்கள் பலர் அடிகள் என்ற சொல்லாற் சுட்டப்படுகின்றனர். அது மட்டுமல்லாது இறைவனையே அடிகள் என்பதைத் தேவாரங்கள் பலவற்றிலும் காணலாம்.

உ-ம்:

வரிய மறையார் பிறையார் மலையோர்
சிலையா வணக்கி
எரிய மதில்கள் எய்தார் எறியும் முசலம் உடையார்
கரிய மிடறும் உடையார் கடவூர் மயானம்
அமர்ந்தார்
பெரிய விடைமேல் வருவார் அவரெம்
பெருமான் அடிகளே.
(2335 : சம்பந்தர்)

குடையுடை அரக்கன் சென்று குளிர்
கயிலாய வெற்பின்
இடை மடவரலை அஞ்ச எடுத்தலும்
இறைவன் நோக்கி
விடையுடை விகிர்தன்தானும் விரலினால்
ஊன்றி மீண்டும்
படைகொடை அடிகள் போலும் பழனத்தெம்
பரமனாரே.
(4521. நாவுக்கரசர்)

பாறுதாங்கிய காடரோ படு தலையரோ
மலைப் பாவையோர்
கூறுதாங்கிய குழகரோ குழைக்காதரோ குறுங்
கோட்டிள
ஏறுதாங்கிய கொடியரோ சுடு பொடியரோ
விளங்கும் பிறை
ஆறுதாங்கிய சடையரோ நமக்கு அடிகளாகிய
அடிகளே.
(7554:சுந்தரர்)

இறைவனையும் அடிகள் என்ற சொல் குறித்து நிற்பதால் அடியார், அடிகள் என்ற சொற்கள் இறைவனது அடியைச்சார்ந்தவர்கள், ஒன்றியவர்கள் என்ற பொருளில்லாது, வணங்குதற்குரிய திருவடியை உடையவர்கள் என்று பொருளிலேயே வழங்கி வந்தது என்று கொள்வதே பொருத்தமாகப் படுகின்றது. அடியார்களைச் சுவாமி, சுவாமிகள் என்று சுட்டும் வழக்கம் (உம்: மாணிக்கவாசக சுவாமிகள்) அதனை அரண் செய்வதே.

அடியார் என்ற சொல்லாற் கட்டுதற்குரி யவர்களை நாயனார் (நாயனார்) என்று சுட்டுவது சைவமரபு. நாயன் என்பது நாயகன் சொல்லின் சிதைந்த வடிவாகும். நாயனார் என்ற சொல்லும் அடியார்களை மட்டுமல்லாது தெய்வத்தையும் சுட்டி நிற்பதை மூத்தநாயனார் என்று பிள்ளையாரைச் சுட்டுவதன்மூலம் (உம்: மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை) கண்டு கொள்ளலாம்.

வைணவ, மரபில், அடியார்களை ஆழ்வார் கள் என்று சுட்டுவது மரபு. ஆழ்வார்கள் என்பதற்கு திருமாலின் திருக்குணங்களில்

ஆழ்பவர்கள் என்று பொருள் கொள்வது வழமை. ஆனால் அச்சொல் முற்காலத்தில் ஆள்வார்கள் என்று எழுதப்பட்டமைக்குச் சான்றுண்டு. அந்நிலையில் அச்சொல் ஆட்சி செய்பவர்கள் என்று பொருள்படுவதாகின்றது. வைணவ மரபில் தெய்வத்தை ஆழ்வார் என்று சுட்டும் மரபு இருத்தலும் கருதத்தக்கது (உ-ம்: சக்கரத்தாழ்வார்). வைணவ மரபில், அரையர் என்று சுட்டப்படும் ஒருவகை அடியார்களும் உளர். திருமால் கோவில்களில் இடம்பெறும் திவ்வியப் பிரபந்த அத்யயன உற்சவத்தில் ஆழ்வார் பாசுரங்களை ஆசாரியர் உரைகளோடு அநுசந்தித்தும் சில பாசுரங்களுக்கு அபிநயம் பிடித்தும், மக்களைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்துபவர்களே அரையர் எனப்படுவோர். அரையர் என்ற சொல் அரசர் என்று பொருள் படுவதாகும்.

இவ்வாறாக நோக்குகின்றபோது இச்சொற்கள் யாவும் ஒரே பொருளுடையனவாக சமயத்தலைவர்களை வழிபாட்டுக்குரியவர்களைக் குறிப்பனவாக அமைவதைக் காணலாம்.

இந்தியாவைப் பொறுத்தவரையிலே ஆரம்ப காலத்திலே நிறுவனமயப்பட்ட மதங்களான சமணம் பௌத்தம் என்பவற்றிலேயே அடியார் வழிபாடு முதன்மை பெற்றிருந்ததென்று கொள்ளக் கிடக்கின்றது. அடிகள் என்ற சொல்வழக்கை முதன்முதலில் சமண, பௌத்த மரபு சார்ந்தே தமிழிலக்கியங்களிற் காண்கிறோம். உ-ம்: கவுந்தியடிகள் : சிலப்பதிகாரம் அறவணவடிகள் மணிமேகலை. பிற்காலத்திலேயே சைவ மரபு சார்ந்தவர்களை அடிகள் என்று சுட்டுவதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. வேணாட்டடிகள், ஐயடிகள் காடவர்கோன், இளம்பெருமானடிகள், அதிராவடிகள், திருவெண்காட்டடிகள் என்போர் அவ்வாறாக அடிகள் என்று சுட்டப்பெற்ற சைவ மரபினர். இவர்களுட் பலரும் அரச குலத்தினர் என்பது அவதானிக்கத்தக்கது. அப்பூதியடிகள், அப்பரடிகள், திருவாதவூரடிகள் என்ற வழக்கு களும் உள.

நாயன்மார் என்போர் சைவ மரபில் அறுபத்து மூவர் என்பது பெரிய புராணத்தின் வழியாக தாபிதமானது. ஆயினும் அந்த அறுபத்து மூவர் தவிர வேறு சிலரையும் நாயனார் என்ற பின்னடை கொடுத்து வழங்கும் மரபு சைவத்தில் உண்டு. கபிலதேய நாயனார், பரணதேய நாயனார், நக்கீரதேவ நாயனார் என்போர் அவ்வாறு சுட்டப் பெறுபவர்கள். அத்தகைய ஒரு மரபின் அடிப்படையிலேயே திருவள்ளுவரும் திருவள்ளுவ நாயனார் எனச் சுட்டப்பெறுகிறார். இவ்வாறிருக்க, சைவமரபில் மிகுந்த முக்கியத்துவம் உடையவரான மாணிக்கவாசகர், நாயனார் எனச் சுட்டப்பெறாமை அவதானிக்கத்தக்கது. சைவமரபுக்கு அப்பால் வைணவ மரபிலும் ஓரிருவர் நாயனார் எனச் சுட்டப்பெறுதலும் ஈண்டு குறிப்பிடத்தக்கதே. உ-ம்: அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.

அடியார் என்று பொருள்படுவதாக வடமொழி மரபின் அடியாக வந்த வேறு இரு பெயர்களையும் நோக்கிவிட்டு அப்பாற் செல்வது நலம். அவற்றுள் ஒன்று மாகேஸ்வரர் மற்றையது பாகவதர். மாகேஸ்வரர் என்பது சிவனது திருப்பெயர்களுள் ஒன்றான மகேஸ்வரன் என்பதன் அடியாகப் பிறந்த தத்திதாந்த நாமம். மகேஸ்வரனுடைய அடியார்கள் மாகேஸ்வரர்கள். பாகவதர் என்பது பகவானுடைய அடியார்கள் என்று பொருள்படுவது பகவான் என்ற சொல்லின் அடியாகப் பிறந்த தத்திதாந்தம். முன்னையது சைவ மரபுக்கே உரியது. பின்னையது பொதுவானதாயினும் வைணவ மரபுக்குரியதாகவே பெரும்பாலும் வழங்குவது.

## அடியார் வழிபாடு தொடர்பான இலக்கியச் செய்திகள்

வைதீக மரபில் அடியாரைப் போற்றுகின்ற நெறி தோன்றியமைக்கான தெளிவான சான்றுகள் தேவாரப் பதிகங்களில் புலனாகின்றன. தேவார ஆசிரியர்கள் பலவிடத்தும் இறையடியார்களைப் பொதுவாகப் போற்றுகின்ற தன்மை காணப்படுகின்றது. அடியார் இயல்புகளை அவர்கள் எடுத்துரைக்கிறார்கள். உதாரணமாகச் சிலவற்றை நோக்கலாம்.

"அருள்பேணிப் பொய்யில்லாத மனத்தர்" (16)

"மெய்யராகிப் பொய்யை நீக்கி வேதனை யைத் துறந்து செய்யரானார்" (540)

"கொள்கையினால் உயர்ந்த நிறையு டையார்" (559)

"அகனமர்ந்த அன்பினராய் அறுபகை செற்று

ஐம்புலனும் அடக்கி ஞானம் புகலு டையோர்" (1421)

"கொன்றைத் தொங்கலான் அடியார்கட்குச்

சுவர்க்கங்கள் பொருளல்லவே" (1912)

"நாவினால் நவின்று ஏத்தல் ஓவார்

செவித் துளைகளால் யாவுங் கேளார்

அவன் பெருமையல்லால்" (2717)

இவ்வாறு அடியார் பெருமை பேசுவதோடமையாது, அவர்கள் வழிபடப்பட வேண்டியவர்கள் என்பதையும் தேவார ஆசிரியர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். உம்:

"வீடு ஞானம் வேண்டுதிரேல். பாடு ஞானம் வல்லார் அடி சேர்வது ஞானமே" (1490)

"பொய்யன்பில்லா அடித்தொண்டர்க்குத்

தொண்டராம் புண்ணியமே" (5142)

"எம்மான் எந்தை மூத்தப்பன் ஏழேழ் படிகால் எமை ஆண்ட

பொம்மான் அடியார்க்கு அடியேன் ஆவேனே" (7762)

தேவாரப் பதிகங்களில் ஆங்காங்கே அடியார் வழிபாட்டின் பயனும் சுட்டப் பெற்றுள்ளது. (உ+ம்):

"செடிகொள் நோயின் அடையார் திறம்பார்

கறுதீவினை கடிய கூற்றமும் கண்டகலும் புகல்தான்வரும்

திருவாஞ்சியத்து அடிகள் பாதம் அடைந்தார் அடியார் அடியார்கட்கே" (1544)

"தொண்டர் தொண்டரைத் தொழுது அடிபணிமின்கள் தூநெறி எளிதாமே" (2603)

இப்பாடலடிகளில் இறைவன் அடியார் என்று அல்லாமல் "அவன் அடியார் அடியார் அவரடியார்" என்றவாறாக அடியார் வழிபாடு சிறப்பிக்கப்படுதல் அவதானிக்கத்தக்கது.

மேற்கண்டவாறு அடியார் வழிபாடு குறித்த செய்திகள் பொதுப்பட அமைவன போக குறித்த அடியார் ஒருவரின் பெயரைச் சுட்டி அவரை மகிமைப்படுத்துகின்ற தன்மையும் தேவாரப் பதிகங்களுட் காணப்படுகின்றது. அவ்வகையில் நாவுக்கரசர் தம் பதிகங்களில் மேல்வரும் தனியடியார் பதின்மரைச் சிறப்புச் செய்துள்ளார்.

1. சண்டீசர்
2. கண்ணப்பர்
3. நமிநந்தியடிகள்
4. கோச்செங்கணான்
5. தண்டியடிகள்
6. புகழ்த்துணையார்
7. முருக நாயனார்
8. சிறுத்தொண்டர்
9. நீலநக்கர்
10. மங்கையர்க்கரசியார்
11. குலச்சிறையார்
12. நீலகண்ட யாழ்ப்பாணர்
13. நின்றசீர் நெடுமாறர்

அப்பர், சம்பந்தர் ஆகியோரால் பாடப்பட்ட மேற்படி அடியார்களுள்,

1. அப்பூதியடிகள்
2. முருக நாயனார்
3. சிறுத்தொண்டர்
4. நீலநக்கர்
5. குலச்சிறையார்
6. மங்கையர்க்கரசியார்
7. திருநீலகண்ட யாழ்ப்பாணர்
8. குங்குலியக்கலயர்

என்னும் ஒன்பதின்மரும் அவ்விருவரதும் சமகாலத்தவர்கள் என்பதும்

1. கோச்செங்கணான்
2. சண்டேசர்
3. கண்ணப்பர்
4. சாக்கியர்
5. கணம்புல்லர்
6. அமர்நீதியார்
7. அரிவாட்டாயர்
8. நமிநந்தி
9. தண்டியடிகள்
10. புகழ்த்துணையார்

ஆகிய பதின்மரும் அப்பர் சம்பந்தர்க்குக் காலத்தால் முற்பட்டவர்கள் என்பதும் உணரத்தக்கன. தமக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்து அடியார் என்று போற்றும் வழக்கினைப் பெற்றவர்களை மாத்திரமல்லாது சமகாலத்துத் தொண்டர்களையும் இவர்கள் போற்றியுள்ளமை குறித்துணரத்தக்கதே.

அடியார்கள் பற்றிய செய்திகள் தேவாரப் பதிகப் பாடல்களில் ஆங்காங்கே வருவது போக, சில பதிகங்கள் முழுப் பாடல்களிலும் அடியார் பற்றிய செய்தி களைக் கொண்டு அமைந்துள்ளமை குறிப் பிடத்தக்கது. உதாரணமாக, மூன்றாம் திருமுறையில் அடங்கும் 120ஆம் பதிகம் மங்கையர்க்கரசியாரையும் குலச்சிறை யாரையும் மாறிமாறி ஒவ் வோர் பாடல்களாற் சிறப்பிக்கின்றது. குலச்சிறையாரைப் போற்றும் அடிகள் அவரை அடியார் வழிபாட்டிற் சிறந்த ஒருவராகக் காட்டுதல் ஈண்டு அவ தானிக்கத்தக்கது.

"வெற்றவே அடியார் அடிமிசை வீழும் விருப்பினன்

...குலச்சிறை" (4091)

"கணங்களாய் வரினும் தமியராய் வரினும்
அடியவர் தங்களைக் கண்டால்
குணங்கொடு பணியும் குலச்சிறை" (4093)

(இங்கு அடியார் திருக்கூட்டம் பற்றிய செய்தி அவதானிக்கத்தக்கது)

"நாவணங்கியல்பாம் அஞ்செழுத்தோதி
நல்லராய் நல்லியல்பாகும்
கோவணம் பூதி சாதனம் கண்டால்
தொழுதெழு குலச்சிறை" (4097)

(இங்கு அடியார் திருவேடம் குறிப்பிடப் படுதல் அவதானிக்கத்தக்கது)

இவ்வாறே மூன்றாந் திருமுறையிலடங்கும் 63ஆம் பதிகத்தின் பாடல்தோறும் சிறுத்தொண்டரைப் போற்றுகிறார் சம்பந்தர்.

சம்பந்தர் அப்பர் ஆகியோருக்கு ஒரு நூற்றாண்டுக்குப் பிற்பட்ட ஒரு காலத்தில் வாழ்ந்த சுந்தரர், அடியார் வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடுடையவராகப் புலப்படுகின்றார். அவர் பல இடங்களிலும் தம்மை 'அடியார்க்கு அடியன்' என்ற பாங்கிலே சுட்டுகிறார். பதிகம் ஒன்றின் (VII : 55) பாடல் ஒவ்வொன்றிலும் அடியவர்க்கருளும் திறம் கண்டே தாம் இறைவனை அடைந்து வழிபடுவதாகக் குறிப்பிடுகின்றார். அப்பதிகத்தில் மார்க் கண்டேயர், ஏயர்கோன், சண்டேசர், சம்பந்தர், நாவுக்கரசர், திருநாளைப்போவார், சாக்கிய நாயனார், கண்ணப்பன், கணம்புல்லர் முதலானோரைக் குறிப்பிடுகின்றார். தென்னகச் சைவமரபில் அடியார் வழிபாடு தாபிதம் செய்யப்படுவதற்கு ஏதுவாயமைந்தது சுந்தரர் பாடிய 'திருத்தொண்டத் தொகை' என்னும்

பதிகமே. திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் அறுபது தனியடியார்களையும் ஒன்பது தொகையடியார்களையும் குறிப்பிட்டு அவர்க்கெல்லாம் அடியேன் என்று தம்மைக் குறிப்பிடுகிறார்.

சுந்தரரது திருத்தொண்டத் தொகையை அடிப்படையாகக் கொண்டே சோழர் காலப்பகுதியில் சைவ அடியார்கள். தனியடியாராகிய நாயன்மார் அறுபத்து மூவரும் தொகையடியார் ஒன்பதின்மரும் என்று ஸ்தாபிதம் செய்யப்படுகின்றது. அதற்கான அத்திவாரத்தை நம்பியாண்டார் நம்பி சோழப் பெருமன்னரின் ஆதரவில் சைவத்துக்குப் பெருந்தொண்டாற்றியவர். சைவத் திருமுறைகளைத் தொகுத்தவர். சேக்கிழார் பிற்காலத்தில் சைவ அடியார் வரலாறுகளையும் பெருமைகளையும் பேரிலக்கியமாகப் படைப்பதற்கு அடிப்படையாயமைந்த திருத்தொண்டர் திருவந்தாதியையும் அடியார் பெருமை பேசும் வேறுசில பிரபந்தங்களையும் இயற்றியவர்.

நம்பியாண்டார் நம்பி, சுந்தரரது திருத் தொண்டத் தொகையை அடிப்படையாகக் கொண்டே தமது திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடினார். சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகையில் அறுபது தனியடியாரையே பாடியிருக்க நம்பியாண்டார் நம்பி அறுபத்து மூவராக அத்தனியடியார் தொகையை அதிகரித்திருக்கிறார் (தொகையடியார் தொகையில் மாற்றம் இல்லை). அது நிகழ்ந்தது எவ்வாறு என்பதை அறிந்து கொள்வதற்கு முன்பாகத் திருத்தொண்டத் தொகையைச் சொல்லுக்குச் சொல் அடியொற்றி திருத்தொண்டர் திருந்தாதியை நம்பி அமைத்த திறத்தை உணர்ந்து கொள்ள வேண்டும்.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்கைக்கும் அடியேன்
இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரிபொழில் சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்கு அடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்
ஆரூரான் ஆரூரில் அம்மானுக்காளே.

என்பது சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையின் முதற்பாடல். இப்பாடல் போலவே அதில் அடங்குகின்ற ஏனைய பத்துப் பாடல்களும் சில அடியார்களைக் குறிப்பிட்டு அவர்களுக்குத் தாம் அடிமையென்று கூறி இறுதியில் 'ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே' என்ற ஒரே தொடரோடு முடிகின்றன. மேற்படி முதற்பாடலில் சுந்தரர்,

1. தில்லைவாழ் அந்தணர்
2. திருநீலகண்டர்
3. இயற்பகையார்
4. இளையான்குடிமாறர்
5. மெய்ப்பொருள் நாயனார்
6. விறன்மிண்டர்
7. அமர்நீதி நாயனார்

ஆகிய அடியார்களைக் குறிப்பிட்டு அவர்க்குத் தாம் அடியேன் என்கிறார். தொண்டர் தொகையை அடிப்படையாகக் கொண்டு அந்தாதி பாட முற்பட்ட நம்பி மேற்படி அடியார் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் பாடலைப் பாடிவிட்டு (சிலருக்கு இரண்டு பாடல்) மேற்படி பாடலின் இறுதியில் வரும் 'ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே' என்ற தொடரில் அமைந்த ஆரூரர் பேரிலும் ஓரிரு பாடலைப் பாடி அப்பாலே செல்கிறார். தொண்டர் தொகையின் அடுத்த, அடுத்த பாடல்களிலுள்ள அடியார் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் பாடலைப் பாடித் தொண்டத் தொகையில் 'ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே' என்ற தொடர் வரும் இடங்களிலெல்லாம் சுந்தரரைப் பாடித் தன் திருத்தொண்டர் திருவந்தாதியை அமைத்துக் கொள்கிறார். இதனால் தொண்டத் தொகையில் அறுபதாக இருந்த தனியடியார்

தொகை, அந்தாதியில் அறுபத்தியொன்றாக அதிகரிக்கின்றது. எவ்வாறு அவ்வெண்ணிக்கை அறுபத்து மூன்று ஆயிற்று என்பதற்குத் தொண்டத் தொகையின் இறுதிப் பாடலாகிய திருக்கடைக்காப்பை நோக்க வேண்டும். அது வருமாறு:

மன்னிய சீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கு அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க் கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பராவாரே.

இப்பாடலில் 1. பூசலார், 2. மங்கையர்க் கரசியார், 3. நேச நாயனார், 4. கோச் செங்கட் சோழன், 5. திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஆகிய ஐந்து தனியடியார்களையும் குறிப்பிட்டு அவர்களுக்குத் தாம் அடியேன் என்கிறார் சுந்தரர்.

பின்னர் முத்திரைக் கவி என்ற வகையால் பதிகத்தைப் பாடியவர் யார் என்ற விவகாரத் தையும் பதிகத்தை ஓதுவதால் ஏற்படக்கூடிய பயனையும் குறிப்பிடுகிறார். பதிகத்தைப் பாடியவர் 'சடையனார், இசைஞானியார் ஆகியோரின் அன்பனான (மகனான) திருநாவலூர்க்கோன்' என்றும் பதிகத்தைப் பாடுவதாற் கிட்டும் பயன் திருவாரூர் இறைவனது அன்புக்குப் பாத்திரமாதல்' என்றும் பொருள்படும் வகையிலே பாடுகிறார். அந்த இடத்தில் வந்த சடையனார், இசைஞானியார் ஆகியோரையும் ஒவ்வோர் தனியடியாராக்கி நம்பியாண்டார் நம்பி அந்தாதி பாடியதனாலேயே தனியடியார் தொகை அறுபத்து மூன்றாயிற்று. அல்லாமல் சுந்தரர் தம்முடைய தாய் தந்தையரைத் தனியடியாராகக் குறிப்பிடவில்லை என்பது மனங்கொள்ளத்தக்கது.

இவ்வாறாக சைவ நாயன்மார் தொகை அறுபத்து மூன்று என்பதை தாபிதம் செய்த நம்பியாண்டார் நம்பி, அடியார் வழிபாட்டை நிலைநிறுத்துவதில் கணிசமான பங்காற்றினார் என்பதற்கு அடியார்கள் மேல் அவர் பாடிய ஏனைய பிரபந்தங்களும்சான்றாய் அமைவதால் அவை குறித்தும் சிந்தித்தல் தக்கதே. நம்பி சம்பந்தர் மேல் ஆறு பிரபந்தங்களைப் பாடியுள்ளார். அவையாவன:

1. ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி
2. ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்
3. ஆளுடைய பிள்ளையார் திருமும் மணிக்கோவை
4. ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை
5. ஆளுடைய பிள்ளையார் திருக் கலம்பகம்
6. ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை

நம்பி, நாவுக்கரசர் மேல் 'திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை' என்னும் பிரபந்தத்தைப் பாடினார். மாணிக்கவாசகர், சுந்தரர் காலத்துக்குப் பிற்பட்டவராதலால் மாணிக்கவாசகரைத் திருத்தொண்டத் தொகையில் அவர் பாடவில்லை. சுந்தரரது திருத்தொண்டர் தொகையை அப்படியே விரித்து அந்தாதி பாடியதால் நம்பியும் அதில் மாணிக்கவாசகரைப் பாடவில்லை. எனினும் மாணிக்கவாசகர்மேல் தனியான பிரபந்தமும் அவர் பாடினாரில்லை. ஆயினும் தாம் பாடிய 'கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம்' என்னும் நூலில் வரும் ஒரு செய்யுளில் மாத்திரம் மணிவாசகரைக் குறிப்பிட்டார் என்பது உணரத்தக்கது. அச்செய்யுள் வருமாறு:

"வரு வாசகத்தின் முற்றுணர்ந்தோனை
வண்தில்லை மன்னைத் திருவாரூர்ச்
சிவபாத்தியன் செய் திருச்சிற்றம்பலப்
பொருளார்தரு திருக்கோவை கண்டேயும்
மற்றப் பொருளைத் தெருளாத உள்ளத்தவர்
கவிபாடிச் சிரிப்பரே".

நம்பியாண்டார் நம்பி பாடிய பிரபந்தங் களின் எண்ணிக்கை பத்து. அவற்றுள் விநாயகக் கடவுள்மேற் பாடப்பட்டதான 'திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை'யும் சிதம்பரத்தின்மேற் பாடப்பட்டதான 'கோயிற்றிருப்பண்ணியர் திருவிருத்த'மும் தவிர ஏனைய எட்டும் அடியார் பெருமையே பேசுவனவாய் அமைந்தமை அடியார் வழிபாட்டின்மேல் அவர் கொண்ட அக்கறையையே உணர்த்துவதாம்.

'இறைவனை அடைவதற்குச் செய்ய வேண்டிய கடுந்தவம் எதனையும் செய்யாமல் அடியாரை வழிபட்டே ஆன்ம ஈடேற்றம் அடையலாம்' என்னும் பொருள் தொனிக்கும் பாடலொன்றில் அடியார் வழிபாட்டில் நம்பிக்குள்ள அசையாத நம்பிக்கை நன்கு புலனாகின்றது. நாவுக்கரசர் மேலதான பிரபந்தத்தில் அமையும் அப்பாடல் இது:

"உற்றான் அலன் தவம் தீயில் நின்றானலன்
ஊண்புனலா
அற்றானலன் நுகர்வும், திருநாவுக்கரசு எனும் ஓர்
சொல் தான் எழுதியும் கூறியுமே என்றும் துன்பில் பதம்
பெற்றான் ஒரு நம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே".

நம்பியாண்டர் நம்பி பாடிய பிரபந்தங்களில் அடியார் பெருமை மாத்திரமன்றி அவர்களது வாழ்க்கை வரலாறாக வழங்கும் கதைகள் தொடர்பான குறிப்புக்கள் பலவும் இடம் பெற்றுள்ளன. நம்பியாண்டார் நம்பி ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் எனக் கொள்ளப்படுகிறார். அவருடைய காலத்திலோ அல்லது சற்று முன்போ வாழ்ந்த சிலராற் பாடப்பெற்று, பதினொராம் திருமுறையில் அடங்கும் பிரபந்தங்கள் சிலவற்றில், அடியார் வரலாற்றுச்செய்திகள் விவரிக்கப்பட்டுள்ளமை அறியத்தக்கது. குறிப்பாகக் கண்ணப்பருடைய கதையை உட்கொண்டதாக 'திருமறம்' என்னும் ஒவ்வோர் பிரபந்தங்களை நக்கீரதேவ நாயனாரும், கல்லாடதேவ நாயனாரும் பாடியுள்ளனர். அடியார் பற்றிய செய்திகள் எவ்வாறு கதை வடிவு பெறத் தொடங்குகின்றன என்பதற்கு நல்ல உதாரணமாக அமையத்தக்கது திருவெண்காட்டடிகள் பாடிய 'திருக்கழுமல மும்மணிக்கோவை'யில் அமைந்துள்ள மேல்வரும் பாடல்.

"தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னாயோ என்று அழைப்ப முன்னின்று
ஞானபோனகத்து அருள் அட்டிக் குழைத்த
ஆனாத் திரளை அவன்வயின் அருள
அந்தணன் முனிந்து தந்தாரி யாரென
அவனைக் காட்டுவன் அப்ப வானார்
தோடுடைய செவியன் என்றும்
பீடுடைய பெம்மான் என்றும்
கையிற் சுட்டிக் காட்ட
ஐய நீ வெளிப்பட்டு அருளினை ஆங்கே".

பிற்காலத்தெழுந்த பெரிய புராணம் சம்பந்தர் தந்தையைக் காணாமையால் அழுதார் என்று கூற இப்பாடல் சம்பந்தர் பசியினால் அழுதார் என்று கூறுதல் அவதானிக்கத்தக்கது.

மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் கண்ணப்பர், சண்டீசர் ஆகிய இரு அடியார்களே தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றனர் என்பதும் ஒன்பதாம் திருமுறைப் பாடல்களில் சண்டீசர், கணம்புல்லர், கண்ணப்பர், அப்பர், சம்பந்தர், சுந்தரர், சேரமான்பெருமாள் ஆகிய அடியார்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதும் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில் நாயன்மார் பற்றிய குறிப்புகள் இல்லை என்பதும் ஈண்டு மனங்கொள்ளத்தக்கன. ஒன்பதாம் திருமுறையில் சுந்தரரும் சேரமானும் (இருவரும்) வெள்ளானை மீது சென்றார்கள் என்ற கதைக்குறிப்பு காணப்படுவதும் அறியத்தக்கதே.

மேற்கண்டவாறு தேவாரங்களிலும் பிற பிரபந்தங்களிலும் காணப்பட்ட செய்திகள், கல்வெட்டு முதலான தொல்லியற் சான்றுகள் முதலானவற்றையும் உலக வழக்குகளையும் பரிசீலித்து தக்கவென்று கண்டவற்றைத்

தொகுத்து புராண காவியமாக அவ்வடியார் வரலாறுகளை உலகுக்குத் தந்தார் சேக்கிழார். சேக்கிழார் கி.பி. 12ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்தார் என்பது ஆய்வாளர் பலரதும் முடிவு. அவர் தமக்கு ஓரிரு நூற்றாண்டு முற்பட வாழ்ந்து அடியார் வழிபாட்டு நெறியை நிலைநிறுத்துவதிற் பெரும்பங்காற்றிய நம்பியாண்டார் நம்பியாலே இயற்றப்பெற்ற திருத்தொண்டர்திருவந்தாதியையும் சுந்தரரின் திருத்தொண்டத் தொகையையும் பின்பற்றியே தம்முடைய நூலை அமைத்துக் கொண்டார். (நம்பியாண்டார் நம்பி தமக்கு முன்பு பல்லவர் காலத்தில் வாழ்ந்த சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையை அவ்வாறே பின்பற்றியமை முன்பே கூறப்பட்டது).

சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பதின்மூன்று சருக்கங்களைக் கொண்டது. அவற்றுள் முதலாவதும் இறுதியானதுமான சருக்கங்கள் சேக்கிழாரால் காவியப் புனைவுக்கேற்ற வகையில் அமைத்துக் கொள்ளப்பட்ட சில விடயங்களைக் கொண்டன. தம் காவியத்தின் நாயகனாகப் பாடும் சுந்தரருடைய சரிதையின் பெரும்பகுதியை அவற்றுள் அமைத்துக் கொண்டார் சேக்கிழார். இடையிலுள்ள பதினொரு சருக்கங்களும் மேற்படி முதல் நூல்கள் இரண்டையும் அனுசரித்து அமைக்கப்பட்டவையே. அச்சருக்கங்களின் பெயர் கூட சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையின் பாடல் ஒவ்வொன்றினதும் தொடக்கத் தொடர்களால் ஆனவையே. தில்லைவாழந்தணர் சருக்கம், இலைமலிந்த சருக்கம், திருநின்ற சருக்கம், வம்பறா வரிவண்டுச் சருக்கம் என்றவாறாக அச்சருக்கங்களின் பெயர்கள் அமையும். அவ்வப்பாடல்களுள் அடக்கிச் சுந்தரராற் கூறப்பட்ட அடியார்களின் வரலாறுகள் அவ்வச் சருக்கங்களின் உபபுராணங்கள் எனத்தக்க வகையிற் பாடப்பட்டன. திருத்தொண்டர் தொகைப் பாடல் ஒவ்வொன்றின் இறுதியிலும் 'ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே' என்னும் தொடர் வரும் இடங்களில் ஆரூரன் என்னும் சுந்தரரின் பெயர் வருவதால் ஒவ்வொரு சருக்க முடிவிலும் சுந்தரரின் வரலாற்றுச் செய்திகளையோ பெருமைகளையோ ஓரிரு பாடல்களாலேனும் பாடிச் செல்கிறார். இந்த அமைப்பு நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர்திருவந்தாதியைப் பின்பற்றியே சேக்கிழாரால் மேற்கொள்ளப்பட்டதாகும். இன்று முக்கியமாகப் பேசப்படுகின்ற சமய குரவர் நால்வருள் ஒருவராகப் போற்றப்படுகின்ற மாணிக்கவாசகரைச் சேக்கிழார் பாடாமைக்குக் கூறத்தக்க நியாயம் திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் மாணிக்கவாசகரைப் பாடாமையே ஆகும். சுந்தரர் மாணிக்கவாசகரைப் பாடாமைக்குக் காரணம் மாணிக்கவாசகர் சுந்தரருக்குக் காலத்தாற் பிற்பட்டவர் என்பது சொல்லாமலே அமையும்.

சேக்கிழாரது திருத்தொண்டர் புராணத்தை மொழியியல் அடிப்படையில் நோக்கும்போது ஓர் உண்மை புலனாகும். சேக்கிழார் காலம் வரையில் அடியார்களைச் சம்பந்தன், சுந்தரன், நாவுக்கரசன் என்றவாறாக ஒருமையிலேயே சுட்டினார்கள். ஆனால், சேக்கிழாரோவெனில் அடியார் யாவரையும் சம்பந்தர், சுந்தரர், நாவுக்கரசர் என்றவாறு மரியாதை கொடுத்துப் பன்மை வடிவிலே சுட்டுவாராயினார். சேக்கிழார் காலத்தின் பின் வந்தவர்கள் அவ்வடியார்களை ஒருமையில் சுட்டுவதற்கு இயலாதவர்களாகும்படி அடியார்களுக்கு ஒரு உயர்நிலையினைச் சேக்கிழார் வகுத்து வைத்தார் எனலாம்.

இவ்வாறாகப் பல்லவர் காலப்பகுதியில் அரும்பிய அடியார் வழிபாட்டு நெறி சோழர் காலத்திற் காவிய நிலைப்படுத்தப்படுகின்றது. கடவுளுடைய பெருமை பேசிய புராணங்கள் யாவற்றையும் விடத் திருத்தொண்டர் புராணம் பெரியது என்னும் பொருள் தொனிக்க அதற்குப் 'பெரிய புராணம்' என்ற வழக்கு உண்டாகின்றது.

பிற்காலத்தில் ஔவையார், 'யாவற்றையும் விடப் பெரியவனான இறைவனோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம் ஆதலால் தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்றவாறாகப் பாடித் தலைப்படுகின்றார். சோழர் காலத்தின் முடிவிலே சைவ சித்தாந்தம் என்ற தத்துவம் நிலைநிறுத்தப்படும்போது அத்தத்துவமும் அடியவர்களை இறைவனுக்குச் சமமாகப் பேசி அவ்வழிபாட்டு நெறியைத் தத்துவ நிலைப்படுத்துகின்றது.

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே"

சிவஞானபோதம்

பல்லவர் காலந்தொட்டு அடியார் வழிபாட்டு நெறி வளர்ந்துவந்ததற்கான சான்றுகள் தேவாரப் பதிகங்களில் புலப்படுவது போன்று வைணவ மரபில் ஆழ்வார் பாசுரங்களில் ஆங்காங்கே புலப்படுவதாகத் தெரியவில்லை. திருமங்கையாழ்வார் பாசுரத்தில் கோச்செங்கணான் பற்றிய குறிப்பு வருகின்றது. கோச்செங்கணான் சைவ மரபினர். ஆண்டாள் பாடல்களில் பெரியாழ்வார் பற்றிய குறிப்புக்கள் (திருக்கடைக் காப்புகளில்) பெரிதும் வருகின்றன. ஆனால் ஒரு அடியார் என்ற நிலையில்லாமல் ஆண்டாளின் தந்தை என்ற வகையிலேயே. வைணவ மரபில் மதுரகவியாழ்வாரின் பதிகம் அடியார் வழிபாடு சம்பந்தமாக எடுத்துரைக்கத்தக்கது. அவர் பாடியது ஒரேயொரு பதிகமே. ஆனால் அப்பதிகம் திருமாலை அல்லாமல் திருமாலடியாரான நம்மாழ்வாரையே போற்றித் துதிக்கின்றது. 'தொண்டரடிப்பொடி' என்ற ஆழ்வார்தம் பெயரும் அடியார் வழிபாட்டில் அவருக்கிருந்த அளவுகடந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துவதாம்.

பன்னிரு ஆழ்வார்களுள் மிகவும் போற்றப் பெறுபவர் நம்மாழ்வார். ஏனைய ஆழ்வார்கள் யாவரும் அவயவங்களை உடைய அவயவி நம்மாழ்வாரே என்றும் கொள்வது வைணவ சம்பிரதாயம். அவ்வகையில் மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரைப் பாடினால் ஏனைய ஆழ்வார்களையும் பாடியதாகவே ஆகிறது.

சோழர் காலத்தில் சைவ மரபில் அடியார் வரலாறு கூறும் காவியம் ஒன்று தோன்றியது போல் வைணவ மரபில் ஒன்று தோன்றவில்லை. ஆனால் அக்காலப் பகுதியில் வாழ்ந்தவரும் தமிழின் பெருங்கவிஞராகப் போற்றப்படுபவருமான கம்பர் நம்மாழ்வாராகிய சடகோபர்மேல் ஓர் அந்தாதி பாடினார். அச்சடகோபரந்தாதியில் கம்பர் நம்மாழ்வாரைத் திருமாலாகவே போற்றுதல் அவதானிக்கத்தக்கது. திருமாலது அவதாரங்கள் பதினொன்று என்றும் அவற்றுள் ஒன்றே நம்மாழ்வார் அவதாரம் என்றும் அந்த உண்மையை உலகம் அறியாமல் மறைத்துக் கொண்டது. 'திருவாய் மொழி' பாடித் தன்னைத்தானே புகழ்ந்து கொண்டது உலகுக்குத் தெரிந்துவிடலாகாது என்பதற்காகவே என்றும் நயம்படக்கூறுகிறார்.


"பாவகத்தால் தன் திரு அவதாரம் பதினொன்று என்று
இப்பூவகத்தார் அறியாதவண்ணம் தன்னையே புகழ்ந்து
நாவகத்தால் கவி ஆயிரம்பாடி நடித்து அளித்த
கோவகத்தாருக்கு அன்றி என் புறத்தார் செய் குற்றேவர்களே".

சடகோபரந்தாதி நூறு பாக்களை மாத்திரம் கொண்ட சிறியதொரு நூலாகவே இருப்பினும் சைவ மரபில் நாயன்மார் மேலும் அவர்களால் அருளிச்செய்யப்பட்ட தேவாரம் முதலிய தோத்திரங்கள் மேலும் கொண்ட ஈடுபாடு காரணமாக சேக்கிழார் படைத்த பெரிய புராணம் போன்று கொள்ளத்தக்க சிறப்புக்குரியது. வைணவ மரபில் ஏனைய ஆழ்வார்களையெல்லாம் அவயவங்களாகக் கொண்ட அவயவியாகச் சடகோபர் கருதப்படுவதால் இந்நூல் சடகோபரைப் பாடிய அளவில் ஏனைய ஆழ்வார்களையும் சேர்த்தே பாடியதாகக் கொள்ளவும் இடம் உள்ளது. மேலும் சேக்கிழார் பாடிய

பெரிய புராணத்துக்கு நாயன்மார்களுள் ஒருவராகிய சுந்தரர் பாடிய 'திருத்தொண்டத் தொகை' என்னும் ஒரு பதிகம் ஆதாரமானது போல, கம்பர் பாடிய சடகோபரந்தாதிக்கு ஆழ்வார்களுள் ஒருவராகிய மதுரகவியாழ்வார் பாடிய 'கண்ணிநுண் சிறுதாம்பு' என்னும் பதிகம் ஆதாரமாகியது. சைவ மரபு நாயன்மார்களைப் பாடிய சேக்கிழாரையும் ஒரு நாயனாராக்கி சேக்கிழார் நாயனார் எனப் போற்றும். அது போலவே, ஆழ்வாரைப் பாடிய கம்பரும் 'கம்பநாட்டாழ்வார்' எனச் சிறப்பிக்கப்படும் செய்தியும் ஈண்டு கருதத் தக்கதே. எனினும் ஆழ்வார்களின் சரிதங்களைக் கூறுவனவாயமையும் 'குருபரம்பராபிரபாவம்' முதலான எழுத்துக்கள் சோழர் காலப் பகுதிக்குப் பின்னரே தோன்றுகின்றன. அந்நூல்களிலெல்லாம் ஆழ்வார்கள் திருமாலம்சங்களின் அவதாரங்கள் என்று சிறப்பிக்கப் பெறுகிறார்கள். அவ்வகையில் வைணவ மரபும் அடியார்களை ஆண்டவனின் அம்சமாகவே கொள்ளுதல் புலனாகும். பல்லவர் காலப்பகுதியில் வாழ்ந்த ஆழ்வார்களின் பாசுரங்களைப் பொன்னேபோற் போற்றித் தொகுத்தளித்த நாதமுனிகள் சைவத்திருமுறைகளைத் தொகுத்தளித்த நம்பியாண்டார்நம்பி காலத்துக்கு ஏறக்குறைய சமமான ஒரு காலப்பகுதியிலே சோழர் காலத்திலே வாழ்ந்தார் என்பதும் ஈண்டு நினைவிற் கொள்ளத்தக்கதே.

க.இரகுபரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

அகராதி தொகுத்த மேதை



வண. மைரன் உவின்சிலோ

# மாணவரின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் வகிபாகம்

குடும்பமும் பாடசாலையும் பிள்ளையின் ஆளுமை வளர்ச்சியில் அதிக செல்வாக்குச் செலுத்தி வருகின்றமையை அண்மைக்கால ஆய்வுகள் வலியுறுத்திக் கூறுகின்றன. ''பிள்ளையைச் சமூக இயைபுடையவனாக்குவதில் மற்றெல்லாத் தாபனங்களையும் விட குடும்பம் பெரும் பங்கு வகிக்கிறதென்பர். குடும்பத்தின் ஒத்துழைப்பின்றி மிகச் சிறந்த பாடசாலையெனினும் பிள்ளையின் முழுமையான வளர்ச் சிக்கு வழிவகுக்க முடியாது. குடும்பங் களை வளப்படுத்துபவர்களும், வழிப்படுத்து பவர்களும் பெற்றோர்களே.

பிள்ளைக்கு நற்கல்வி வழங்கும் நன் நோக்கத்தோடு நல்லாசிரியரைக் கொண்டு நல்ல நேரத்தில் குலதெய்வத்தைக் கும்பிட்டு குழந்தையாகிய குலக்கொழுந்துக்கு வித்தியாரம் பஞ் செய்து வைக்கும் நாளை பெற்றோர்கள் தம்மியல்புக்கேற்ப குதூகலமாகக் கொண் டாடுகின்றனர். பிள்ளையை நீராட்டிப் புனிதமாக்கி புத்தாடை அணியவைத்து அலங்கரித்து, "கலைவாணி ! என் பிள்ளைக்கு அருள்வாய் நீ'' என சைவ சமயத்தவர்கள் தமது கல்வித் தெய்வத்திடம் மனம் வாக்குக் காயத்தால் மன்றாடுவது மட்டுமன்றி, அன்று எழுத்தறிவித்தவனை இறைவனாக ஏற்றிப் போற்றுவதோடு கையுறையுங் கொடுத்து களிப்படையச்செய்யுங் காட்சி மூலம் பிள்ளையின் கல்விக்குக் கொடுக்கும் மாட்சியை மட்டிட முடிகிறது.

சைவ சமயத்தவர்கள் மட்டுமன்றி , பௌத்தர்களும் , இஸ்லாமியர்களும், கத்தோலிக்கர்களும் ஏனைய வேறு சமயத்தவர்களும் வித்தியாரம்பத்துக்கு விசேட முக்கியத்துவங் கொடுத்து வருகின்றமை கவனிக்கத்தக்கதாகும்.

தாயின் வயிற்றில் பத்துமாதம் (கரு) குழந்தை குடியிருக்கின்றது. தாயினதும், தந்தையினதும் பல்வேறு இயல்புகளையும் பெற்று குழந்தை இப்புவிக்கு வந்தடைகிறது. பிள்ளை பாடசாலைக்குச் செல்லும் காலம் வரை பிள்ளையுடன் நெருங்கிய தொடர்பு கொள்பவர்களில் தாய் தந்தையர்களே மிக முக்கியமானவர்களாவர்.

பெற்றோர் குழந்தையின் ஆரம்ப உள அறிவு விருத்திக்கு அத்திவாரம் இடுகிறார்கள். பாடசாலைக்குச்செல்லத் தொடங்கிய பின்பும் பிள்ளை பெருமளவு நேரத்தை வீட்டிலேயே செலவழிக்கின்றது.

தன்னுடைய மகனை கல்வியறிவிற் சிறந்த ''சான்றோனாக'' உயர்த்துவது தந்தையின் பொறுப்பு என்பதனை சங்ககால இலக்கியமான புறநானூறு "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே'' என அழ்காக வலியுறுத்திக் கூறுகின்றது.

''தந்தையோடு கல்வி போம்'' என்பது ஆன்றோர் அறிவு மொழியாகும். ''துள்ளித் திரிகின்ற வேளையிலே என் துடுக்கடக்கிப் பள்ளிக்கு வைத்திலனே என் தந்தையாகிய பாதகனே" என்கிறார் பட்டினத்தார்.

துள்ளித் திரியும் பருவத்தில் அடி மூலம் அடக்கியாதல் தனக்குக் கல்வியைப் பெற்றுத் தரவில்லையே என கல்வியின் அருமை பெருமை தெரியும் பிற்காலத்தில் மனம் நொந்து தந்தையைப் பாதகனே என இழித்துரைக்கும் பாங்கினைக் காண்கின்றோம். ''தந்தை மகற்காற்று நன்றி அவையத்து முந்தியிருப்பச்செயல்" என்றும், "மகன் தந்தைக் காற்று நன்றி இவன் தந்தை என் நோற்றான் கொல் என்னுஞ் சொல் என்றும் வள்ளுவப்

பெருந்தகையால் சொற்சுருக்கமாகவும், பொருட்பெருக்கமாகவும் கூறப்பட்டிருப்பது தந்தையின் கல்விக் கடமையால் மகன் முன்னேறி வருவதும் மகன் முன்னேற்ற மடைவதால் தந்தை மற்றையோரால் மதிக்கப்பட்டு தரம் உயர்வதுமாகிய நிலையினை நாம் கண்டுகொள்ள முடிகிறது.

பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்து பகலிரவாய் குழந்தையை வளர்ப்பவள் தாயாகும். அவளது அன்புக்கிணையாக இந்த உலகத்தில் எதனையுமே கூறமுடியாது. கருவிலிருந்து கல்லறை வரை கற்றல் இடம்பெறுகிறது. குழந்தை பூமியை வந்தடையும் வரை தாயையே தஞ்சமென பிற உலகத் தொடர்புகளெதுவுமின்றி வாழ்கிறது. தாய் கருவுற்ற காலத்தில் அதிர்ச்சிகளின்றியும் கவலைகளின்றியும் வாழவேண்டியதன் அவசியத்தை விஞ்ஞானிகள் விளக்கியுள்ளனர். தனது பிள்ளையின் உள, உடல் வளர்ச்சி கண்டு அதனால் வேறொருவரும் அடையாத பெறுபேற்று பேருவகையுற்று நடமாடுகின்ற தெய்வம் தாயைத்தவிர வேறொருவருமில்லை.

தனக்கொரு குழந்தை கிடைக்கும் போது அத்தனை தாய்மாரும் அகமகிழ்கின்றனர். அந்நாளை சுபநாளாக நன்நாளாக பெரு நாளாகப் போற்றி இறும்பூதடைகின்றனர். எனினும் தன்னுடைய மகன் "சான்றோன்" எனக் கேட்கும் போது தாயானவள் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. இதனையே, "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்" என வள்ளுவர் கூறியுள்ளார். பிள்ளைகளின் உயர்வுகண்டு உள்ளம் பூரித்துப் பெருமிதமடையும் கள்ளமில்லா உள்ளம் கொண்டவள் தாய்.

அமுதூட்டும் வேளையிலும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் நல்லொழுக்கங்கள் ஒன்றையும் ஒழுகவிடாது ஒழுங்காக ஊட்டக் கூடிய சந்தர்ப்பங்கள் தாய்க்கு அதிகம் கிடைக்கிறது. தாயின் ஆளுமை இயல்புகள் அவளது பிள்ளைகளிற் செறிகின்றன. உலகத் தலைவர்கள் பலரின் உயர்நிலைக்கு தாய்மார்களின் செயற்பாடுகள் துணைநின்றன. உடற்தோற்றம், உள இயக்கம், மன உணர்ச்சி போன்றன தாயைப் பிரதிபலிப்பதாலேயே "தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை" என்ற பழமொழி வழங்கி வருகின்றது.

குழந்தையுள்ளம் ஒரு வெற்றுப்பலகையாகும். அக்கள்ளமில்லா வெள்ளையுள்ளத்தில் நல்லனவற்றை உருவாக்க வேண்டியது தாயின் பொறுப்பாகும். "அம்மா" என்பது குழந்தையின் முதல் வார்த்தையாகும். அவ்வார்த்தையினை வெளிப்படுத்தும் குழந்தையினது ஆற்றலை ஆற்றுப்படுத்த வேண்டியது தாயின் தலையாய பொறுப்பாகும். பிள்ளையின் உடம்பு வளர வேண்டுமென விரும்பும் தாய்மார்கள் அத்தனை பேரும் பிள்ளையின் அறிவும் வளர வேண்டுமென்பதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. குழந்தையை ஏமாற்றியாவது கூடுதலான உணவை ஊட்ட விரும்பும் தாய்மார்களின் தொகையிலும் பார்க்க தந்திரமாக நல்ல பழக்கவழக்கங்களை ஊட்ட விரும்பும் தாய்மார்கள் ஒப்பீட்டளவில் குறைவு என்பதை யாரும் மறுக்க முடியாது.

குழந்தையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது பெற்றோரின் பொறுப்பாகும். அன்பு, காப்பு, கணிப்பு போன்றன பிள்ளையின் அடிப்படை உளவியற் தேவைகளுட் சிலவாகும். உணவு, உடை போன்ற உடலியற் தேவைகளும் பெற்றோராலும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். உளப் பசியையும் போக்கி அவ்வப்போது அறிவுப்பசியைத் தூண்டி அதற்கு இரைதேட தன் பிள்ளையை ஊக்குவிப்பது பெற்றோரின் கடமையாகும்.

"நீயொரு கெட்டிக்காரன்" என்று சொன்னதும் அகமும் முகமும் மலர்கின்ற பிள்ளை உள்ளங்களை நாம் காண முடிகிறது. பிள்ளையின் கல்வி விருத்தியை பிரதான நோக்கமாகக் கொண்டு கற்றலில் ஆர்வம்

ஏற்படுத்தக்கூடிய ஊக்குவிப்புக்களுக்கு சிறு வயதிலிருந்தே முக்கியம் கொடுக்க வேண்டும். பிள்ளையின் உள வயதிற்கேற்ப ஊக்குவிப்புக்களின் மாதிரிகளும் அளவும் வேறுபடலாம் என்பதைப் பெற்றோர் அறிந்திருப்பது அவசியமாகும். பாராட்டுதலும் பரிசில் வழங்குதலும் கணிப்புக் கொடுத்தலும் கல்வி விருத்திக்கு ஊக்கமளிக்குமென உணரும் சந்தர்ப்பங்களை தக்கபடி பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். சிறுவயதுமுதல் தினமும் கல்வி விருத்திக்கு எடுத்து வரும் நடவடிக்கைகளின் விளைவே பரீட்சையில் சித்தியடைதல் என்பதனை என்றென்றும் மறந்துவிடாது மனதில் வைத்திருக்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.

கண்டிப்பும் தண்டனை வழங்கலும் பொருத்தமானசந்தர்ப்பங்களில்பொருத்தமான அளவில் மாத்திரம் காணப்படுவதே விரும்பத்தக்கதாகும். ஏதாவது ஒரு பரீட்சையில் எதிர்பாராத வகையில் குறைவான புள்ளிகளைப் பெற்றுவிட்டால் முன்பின் சிந்திக்காது ஆத்திரப்பட்டு "நீயொரு மொக்கு" என்றும், " உனக்கு இனிப்படிப்பு வராது" என்றும் பிள்ளையின் உள்ளம் பாதிக்கக் கூடிய வகையில் சில பெற்றோர்கள் செயற்படுவது வேதனைக்குரியதாகும். தன்னுடைய பிள்ளை கண்டிக்கப்படுவதை பெரும்பாலான பெற்றோர் பொதுவாகவே விரும்புவதில்லை. பிள்ளை மீது பெற்றோர் பாசம் வைத்திருப்பது விரும்பத்தக்கதே. எனினும் நன்னோக்கத்தோடு ஆசிரியர் கண்டிப்போடு நடப்பதை பெற்றோர் வரவேற்க வேண்டும்.

''காலை எழுந்தவுடன் படிப்பு'' என்ற பாரதியாரின் பாடலை தம் பிள்ளைகளூடாக நடைமுறைப்படுத்துவது நல்ல பலன் கொடுக்கும். காலையில் மன அமைதியும் நிம்மதியும் நிறைந்திருக்கும். காலையில் மனம் மட்டுமன்றி புறச்சூழ்நிலைகளும் கற்றற் செயற்பாட்டிற்கு மிகவும் பொருத்தமானதாக அமைகிறது. காலம் பொன்னானது. கடமை கண்ணானது என்று கூறுவார்கள். தினமும் கற்பது பிள்ளையின் கடமையாகும். பொன்னான நேரத்தை கண் போன்ற கல்விக் கடமையில் செலுத்தாது வீணே காலத்தைக் கரைத்து விட்டு பிற்காலத்தில் சிந்தை கலங்குவதில் பயனில்லை.

ஆசிரியர் வழங்கும் கற்றல் தொடர்பான வீட்டு வேலையைச் செய்வதற்கு வீட்டில் மாணவன் நேரத்தை ஒதுக்க வேண்டும். இதனைக் கண்காணிக்க பெற்றோர் தமது நேரத்தை ஒதுக்கத் தவறக் கூடாது. பாடசாலையில் என்ன படித்தீர்கள்? என அவ்வப்போது வினாவுவதன் மூலமும் அப்பியாசப் புத்தகங்களை பார்வையிடுவதன் மூலமும் பாட ஆசிரியர்களோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதன் மூலமும் பிள்ளைகளின் சகபாடிகளது தொடர்பை அவதானிப்பதன் மூலமும் கண்காணிப்பை வலுப்படுத்தி குறைபாடுகளை களைவதற்கு பெற்றோர் முயற்சிக்க வேண்டும்.

கணிப்பீடு, தவணைப் பரீட்சை போன்றவற்றின் அடைவுகளை நுணுக்கமாகப் பரிசீலிக்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும். தேவையான செயற்பாடுகள் மூலம் பிள்ளையின் கற்றலை மேலும் ஊக்குவிக்க முயற்சிக்க வேண்டும். இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்களை ஈடுபட வைக்க தங்களால் ஆன பங்களிப்பை வழங்க பெற்றோர் எந்தச் சந்தர்ப்பத்திலும் தவறக் கூடாது.

மாணவர்களை சில பெற்றோர்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்து வதுடன் கவனிப்பதனை நிறுத்தி விடுகின்றனர். இந்த நிலை மாற வேண்டும். மாணவர்கள் நிலை மாறக்கூடிய பருவம் க. பொ. த சா/தரம், க.பொ.த உ/தரம். இதனை உணர்ந்து பெற் றோர்கள் தமது தொடர்ச்சியான கண்காணிப்பை, ஊக்குவிப்பை தொடர்ந்து வழங்க வேண்டியது முக்கியமானது. மாணவர்களின் நிலை அறிந்து அவர்களது கற்றலுக்கு

உதவவேண்டியது பெற்றோரின் முக்கிய கடமை ஆகும். நிலைமாறும் பருவமாகிய (Teen age) காலத்தில் மாணவனுடன் நெருங்கி அவனது கற்றலை சீர்செய்யும் பணியில் தங்களை இணைப்பது அவசியமானது. மாணவர்கள் வீட்டிலே கற்பதற்குரிய சூழலை சரிசெய்து கொடுப்பது முக்கியமானது. தினந்தோறும் கற்ற விடயங்களை செவ்வை பார்ப்பதும், பலவீனங்களை பலமாக்குவதும் , பலமான விடயங்களை மேலும் பலம் அடைய வைக்கவும் பெற்றோர்கள் வழிகாட்டுவது அவசியமானது. மாணவர்களின் சகபாடி குழுக்களை அவதானிப்பதும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் தொடர்பை வலுப்படுத்துவதும் முக்கியமானது.

இன்று கல்வியை சீர்குலைக்கும் அம்சமாக இணையத்தளங்கள், தொடர்நாடகங்களின் பங்களிப்பு முக்கியமானது. பெற்றோர்கள் மாணவர்களின் கற்றலில் பாதிப்பு அடையக்கூடிய தொடர்நாடகங்களை பார்வையிடுவதை தவிர்க்க வேண்டும். இந்தச் செயற்பாடு மாணவர்களின் கற்றலில் அவர்களது சிந்தனையில் பலபின்விளைவுகளை ஏற்படுத்தும் கொலை, களவு, முறையற்ற பாலியல், மதுப்பாவனை, கலாசார பிறழ்வான நடத்தைகள் போன்றன மாணவர்களின் நடத்தை மாற்றத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை. இதனை உணர்ந்து பெற்றோர்கள் செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. தொலைக்காட்சியில் நல்ல விடயங்களைப் பார்ப்பது பிரச்சினைக்குரியது அல்ல மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் விடயங்களை பெற்றோர்கள் தவிர்க்க வேண்டும். இணையத்தளங்களின் பாவனை மாணவர் மத்தியில் அதிகரித்துள்ளது. அவர்கள் இதனை கற்றலுக்கு பயன்படுத்துவது வரவேற்கத்தக்கது. ஆனால் மாணவர்கள் திசை மாறும் நிலைக்கு இணையத்தளங்கள் கொண்டுசெல்ல வழிகள் உள்ளன. இதனை பெற்றோர்கள் முகாமை செய்வது முக்கிய மானதாகும்.

எனவே உங்கள் பிள்ளையின் எதிர்காலம் ஒளிமயமானதாக விளங்க வேண்டும் ஆயின் நீங்கள் உங்கள் பிள்ளையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் உங்களுக்கான காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டியது காலத்தின் தேவையாகும். தங்கள் பிள்ளைக்கு வினைத்திறனான கல்வியை வழங்குவதற்குரிய வழிகளை சரியாக உணர்ந்து விளைதிறனை அதிகரிக்க உங்களின் உச்சப்படியான பங்களிப்பை வழங்கி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முன்வருவீர்களாக.

**ஆக்கம் திரு. அரியபுத்திரன் லிங்கராஜ்**
**ஆசிரியர்.**
M. A. in Tamil (Hons), M.ED (Hons)

# தற்கொலை பிரச்சினைக்குத் தீர்வல்ல?

"அரிது அரிது மானிடராதல் அரிது. அதனிலும் அரிது

கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது"

என்றார் ஔவையார். இத்தகைய அரிய பிறவியை எடுத்த மானிடர்கள் தற்கொலை என்னும் நரகத்தில் புகுந்து கொள்கின்றனர். தற்காலத்தில் உலகளாவிய ரீதியில் தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக புள்ளிவிபரங்கள் எடுத்துகாட்டி நிற்கின்றன.

எமது நாடான ஈழத்திருநாட்டிலே குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் தற்கொலை செய்து கொள்பவர்களைப் பற்றி சிந்திக்க வேண்டிய கட்டாய சூழ்நிலையில் இன்று நாம் காணப்படுகிறோம். முப்பது வருடகால யுத்தத்தின் பிடியிலே தமிழினம் சிக்கித்தவித்து இழந்த விலை மதிப்பற்ற உயிர்களின் எண்ணிக்கை ஏராளம் ஏராளம். தமிழ் மக்களின் காவல் தெய்வங்களாக இருந்த எத்தனையோ இளைஞர்களையும் யுவதிகளையும் போர் என்னும் கொடிய அரக்கனிடம் பறிகொடுத்தோம். தந்தையை, தாயை, சகோதரனை, சகோதரியை, பிள்ளைகளைத் தொலைத்தவர்களின் சோகம் இன்னும் தணியவில்லை. தற் போது போதை என்னும் வலையிற் சிக்கியும் விபத்துக்களாலும் தமது இன்னுயிரை இழந்து கொண்டிருக்கும் இளைய தலைமுறையினரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பதிவாகிய வண்ணம் உள்ளது. இத்தகைய இழப்புக்களின் மத்தியில் தற்கொலைகள் எம்மினத்திற்கு வேண்டிய ஒன்றுதானா? சற்று சிந்தித்துப் பாருங்கள்.

வாழ்க்கையில் பல்வேறுபட்ட உள, சமூகப் பிரச்சினைகளின் அழுத்தம் காரணமாக அவற்றில் இருந்து மீண்டுவர எந்தவொரு வழியும் இல்லாத ஒரு சூழலில் தன்னை மாய்த்துக் கொள்ளத் தீர்மானித்தல் தற்கொலை எனப்படுகிறது.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையத் தவறுகின்ற பத்து வயதுப் பாலகிமுதல் க.பொ.த.சாதாரண தரம், உயர்தரம், பிற போட்டிப் பரீட்சைகள் என்பவற்றில் தோல்வியைத் தழுவுகின்ற மாணவர்களும். காதலில் தோல்விகண்ட இளைஞர், யுவதிகளும். குடும்பத்தில் ஏற்படுகின்ற பிணக்குகளால் பெற்றோர், பிள்ளைகள், இளம் குடும்பத்தவர்கள், முதியவர்கள் என பல்வேறு வயதுப் பிரிவினரும் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்ற செய்திகளை ஊடகங்கள் வாயிலாக அறிகிறோம். இவ்வாறு வெளிவரும் செய்திகள் சில; வெளிவராத செய்திகள் பல.

மானிடப்பிறப்பின் தத்துவமே அனுபவித்தற் கோட்பாடாகும். தாயின் கருவில் தோன்றியது முதல் பரகதி அடையும் வரை மனிதன் இப்பூவுலகின் தாற்ப்பரியங்களை முடிந்த வரை அனுபவித்துவிட்டு விடைபெறவேண்டும். இந்து சமயம் மனிதனுக்கு ஏழு பிறவிகள் உண்டென்று கூறுகிறது. ஒருவர் எடுத்த பிறவியின் பயனை அப்பிறவியிலேயே அனுபவித்து முடிக்க வேண்டும். இடையிலே நாம் எமது வாழ்வை தற்கொலை செய்து முடித்துக் கொள்வோமாயின் இந்தப் பிறவியில் அனுபவித்து முடிக்காத பயன்களை அடுத்த பிறவியிலும் அனுபவிக்க நேரிடும்.

பஞ்சமா பாதங்களில் மகாபாவமாகக் கூறப்படுவது கொலை ஆகும். இதனையே வள்ளுவரும்

"நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம் - கொலையஞ்சி

கொல்லாமை சூழ்வான் தலை"

என்று கூறுகிறார். அதாவது வாழ்வைத்துறந்த யோகியை விட உயிரைக் கொல்லாதவர்கள் மேலானவர்கள். இவ்வாறு பிற உயிர்களைக் கொல்லாதிருக்க வேண்டிய நாம் எமது உயிரை கொல்லலாமா? இறைவனால் படைக்கப்பட்ட எம்மை நாம் அழிப்பதற்கு உரிமை உடையவர்களா?

மாதா பிதா குரு தெய்வம் என்னும் கோட்பாட்டு முறையிலே வாழுகின்ற நாம் எமது பெற்றோர் எமக்காகச் செய்த தியாகங்களை மறந்து விடலாமா? எம்மீது அக்கறை கொண்ட பெற்றோர் எமது தவறுகளை தண்டிக்க முனையும் போது அவர்களை பழிவாங்கும் நோக்கில் "உங்களுக்குச் செய்து காட்டுகிறேன் பாருங்கள்" என்று கூறி உடனடியாக தற்கொலைக்கு முயற்சிக்கின்றோம். இதன் பின் விளைவுகளை நாம் எண்ணிப் பார்ப்பதில்லை.

எங்கள் முன்னிலையில் எமது பெற் றோரை யாராவது தகாத முறையில் அவமானப் படுத்தினால் எம்மால் பொறுத்துக் கொள்ள முடிகிறதா? இல்லை. உடனே நாம் அவர்களை தண்டிக்க முனைகிறோம். இத்தகைய அன்புகொண்ட பெற்றோர்களை எங்களின் இழப்பால் வாழ்க்கை பூராகவும் வேதனைப்பட வைக்கலாமா? இத்தகைய சிந்தனைகளை எமது உள்ளங்களில் வளர்த்தால் எந்த நிலையிலும் தற்கொலை செய்யத் துணிய மாட்டோம். தோல்விதான் வெற்றியின் முதற்படி. உலகிலே வெற்றி என்னும் சிகரத்தில் ஏறிய அனைவரும் தோல்வி கண்டவர்களே எனவே பரீட்சையில் தோல்வியடைந்து விட்டோம் என்று எமது உயிரை மாய்த்து விட்டால் பிரச்சினை தீர்ந்து விடுவதில்லை. பரீட்சையில் தோல்வி கண்ட எத்தனையோ பேர் வாழ்க்கையில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். உலகப் புகழ் பெற்றவர்களாக காணப்படுகிறார்கள். கல்வி அறிவேயற்ற காமராஜர் உலகப் புகழ் பெறவில்லையா? எனவே தோல்வியை கண்டு துவண்டுவிடாதீர்கள். மறுபடியும் முயலுங்கள் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

அதீத வளர்ச்சி கண்டுள்ள தொழிநுட்ப சாதனங்களாலும் தற்கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. மாறிவரும் உலக மாற்றத்திற்கேற்ப நாமும் மாறவேண்டும் என்பது நியதி. எனினும் தவறான பாதைகளை நாம் தேடக்கூடாது. இன்றைய இளைஞர், யுவதிகள் முகப்புத்தகத்தின் மூலம் பல்வேறு நண்பர்களை இணைத்துக் கொள்வதும் இறுதியில் காதல் என்னும் நோயில் விழுந்து அக் காதல் பொய்யாகின்ற போது தற்கொலை செய்து கொள்வதும் சாதாரணமான ஒன்றாகிப் போகிறது நாம் எமது எண்ணங்களுக்குத் தடை போட வேண்டும். நல்ல நண்பர்களை தேர்ந்தெடுத்துப் பழக வேண்டும். முன்பின் தெரியாத ஒருவருடன் தொடர்பினை ஏற்படுத்தக் கூடாது. இவ்வாறு நேற்று எங்கள் வாழ்வில் சந்தித்த ஒருவருக்காக இறந்து போனால் எங்களுக்காகவே வாழ்கின்ற பெற்றோர்கள், சகோதரர்கள் உறவுகளின் நிலை என்ன? சற்றே சிந்தித்துப் பாருங்கள்.

இருட்டில் தனியே வெளியில் செல்லப் பயப்படுகின்ற பத்து பதினொரு வயதுச் சிறுவர்கள் தற்கொலைக்கு முயற்சிக்கின்றார்கள் என்றால் அவர்கள் அதன் விளைவுகள் எதனையும் சிந்திக்காதவர்கள் என்பது புலனாகும். ஊடகங்களில் வெளிவரும் தற்கொலைச் செய்திகளும் இதற்குக் காரணமாகிறது. பெரிய பெரிய எழுத்துக்களில் தலைப்பிட்டு வருகின்ற செய்திகள் சிறுவர்களின் ஆழ்மனதில் பதிந்து விடுகிறது. தமக்குப் பிரச்சினை வருகின்ற போது அதனைப் பரீட்சிக்கவே அவர்கள் முனைகிறார்கள்.

தற்கொலைக்கு முயற்சித்து தப்பிப்பிழைத் திருப்பவர்களிடம் கேட்டால், ஏன் இப்படிச் செய்தேன் என்று எனக்கே தெரியாது. முட்டாள் தனமான செயல் என்று இப்போது உணர்கி றேன். நல்லவேளை தப்பிவிட்டேன் என்று கூறுவார்கள். சின்னச் சின்னப் பிரச்சினைகளுக்கு பின் விளைவுகளை எண்ணாது எடுக்கும் தீர்மானங்கள் பின்னர்

எங்களையே வருந்த வைக்கும். இதுமட்டுமன்றி பல்வேறு உடல் உபாதைகளையும் தோற்றுவிக்கும்.

"ஒருவன் எதை நினைக்கிறானோ அதுவாகவே அவன்
இருக்கிறான்"

என பைபிள் கூறுகிறது.

"நாம் இருக்கின்ற நிலைமைக்கு நம்முடைய
எண்ணங்களே காரணம்"

என புத்தபெருமான் உபதேசித்துள்ளார். எனவே எங்கள் மீது நாம் நம்பிக்கை கொள்வதோடு உயர்ந்த எண்ணங்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மானிடராகப் பிறந்த அனைவருக்கும் ஏதோ ஒரு பிரச்சினை இருந்து கொண்டேதான் இருக்கும் தடைகள், சோதனைகள், பிரச்சினைகள் இல்லாவிட்டால் வாழ்க்கைக்கு அர்த்தமே இல்லாமல் போய்விடும். பிரச்சினைகள் இல்லாமல் இருப்பதே மகிழ்ச்சி என்று ஆகிவிடாது. கஷ்டங்களை வெற்றி கொள்வதிலும் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் தான் மகிழ்ச்சியே இருக்கிறது.

மனம் சம்பந்தப்பட்ட பல நோய்களுக்கும் உணர்ச்சி சம்பந்தப்பட்ட நோய்களுக்கும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் பளுவாகிவிடுவதே காரணமாகிறது. எமக்கு ஏற்படுகின்ற பிரச்சினை மாறத்தான் போகிறது; அது உடனேயும் மாறலாம் காலந்தாழ்த்தியும் மாறலாம். எனவே கோபம், உறுத்தல், தொல்லை ஆகியவற்றுக்குக் காரணமான நிகழ்ச்சியை நினைத்து நினைத்து இருப்பதைவிட அதனை மறக்க முயற்சிக்க வேண்டும்.

"நமக்கு என்ன கிடைத்திருக்கிறதோ அதைப் பற்றி நாம் அதிகம் எண்ணிப்பார்ப்பதில்லை. எது நம்மிடம் இல்லையோ அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டு இருக்கிறோம்"

என ஷோஃபேனர் என்ற தத்துவஞானி கூறுகிறார்.

ஆம், கிடைக்காத பொருட்களுக்கு ஆசைப்படாது கிடைத்தவற்றைக் கொண்டு திருப் தியோடு வாழலாம் என்ற எண்ணத்தை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

வாழ்க்கைச் சுமை ஒருவனை முழுமையாக அழுத்தி விடுகிறபோது அதன் பயங்கர விளைவுகளில் ஒன்றான மனநோயை ஏற்படுத்துகிறது. அதுவே தற்கொலைக்கும் இட்டுச் செல்கிறது. எனவே வாழ்க்கைச்சுமை நம்மை அழுத்துவதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது தாங்கமுடியாத சுமையினை வாழ்க்கை எமக்கு ஏற்றி வைப்பதில்லை. அது நாமே நமக்கு ஏற்படுத்திக் கொண்டது தான். துன்பங்களும் அவ்வாறு தான். கோபம் ஏற்படுவதனால் தான் துன்பங்களும் எம்மை அணுகுகின்றன.

"ஒருவனுடைய அறிவின் முதிர்ச்சியை எந்த அளவுக்கு கோபம் தணிந்தவனாக அவன் இருக்கிறான் என்பதை வைத்துக் கணிக்கலாம்" என தத்துவஞானி நீஷே கூறியுள்ளார். கோபப்படுகின்ற குணத்தை நாம் விலக்கிக் கொள்ள முடியும்.

"கோபம் பாவத்தைத் தேடும்" என்னும் முதுமொழி கோபத்தினாலே தான் எமது செயல்கள் தவறாகிவிடுகிறது என்பதைக் காட்டுகிறது. எனவே எமக்கு ஏற்படும் கோபத்தை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

**கோபத்தை தவிர்த்துக் கொள்ள சில வழிமுறைகள்**

- இறைவழிபாடும் தியானமும்
- நல்ல நூல்களை வாசித்தல்
- யோகாசனப் பயிற்சிகள்
- கலைகளில் ஆர்வம் காட்டுதல்
- மகிழ்ச்சியான நினைவுகளை எழுதி வைத்தல்

- மனச் சுமைகளை பிறருடன் பகிர்ந்து கொள்ளுதல்
- உளவளத் துணையாளருடன் கலந்துரையாடுதல்
- மந்திர உச்சாடனம் செய்தல் (ஒரு சொல்லை / சொற்றொடரை திரும்பத் திரும்பச் சொல்லுதல்)
- தேகத்தைப் பிடித்து விடுதல்
- மகிழ்ச்சியான விடயங்களில் ஈடுபடுதல்

"தன்னைத்தான் காதலன் ஆகின்
அனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்"

என்றார் வள்ளுவர். ஒருவன் தன்னைத் தானே நேசிக்க வேண்டும் அப்போதுதான் வாழ்க்கையில் விருப்பம் வருகிறது. தன்னில் நம்பிக்கை ஏற்படுகிறது. நம்பிக்கைதான் நிஜயமான விடயங்களை உருவாக்குகிறது.

உசாத்துணை நூல்கள்:

எண்ணிய எண்ணமே – கழக வெளியீடு

எண்ணங்களை மேம்படுத்துங்கள் – Dr. எம். ஆர் காப்மேயர்

பிரச்சினைகளைப் பெரிதாக்கும் பூதக்கண்ணாடியைத் தூக்கி எறியுங்கள். சிறிய மணல் மேடுகளை பெரிய மலைகளாக எண்ணாதீர்கள். மலைகளை மண்மேடுகள் என எண்ணுங்கள்.

விதியை மதியால் வெல்ல முடியும். விதி ஒரு கதவை மூடுகின்றபோது நம்பிக்கை இன்னொரு கதவைத் திறந்து வைக்கும். ஏனெனில் இன்னும் உயர்ந்த இலட்சியத்தை நோக்கிப் பயணிப்பதற்காக.

எனவே இறைவன் தந்த இனிய வாழ்வை இடையில் நாமாக முடித்துக் கொள்ளாமல் நம்பிக்கை என்னும் மந்திரத்தைப் பயன்படுத்தி வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிசமைப்போம்.

"எண்ணங்களை மேம்படுத்துங்கள்
வாழ்க்கை இனிதாகும்."

**திருமதி. கனேஸ்வரி தனமூர்த்தி**
ஆசிரியை.

**உவமையணி**

பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளோடு பொருள்புணர்த்
தொப்புமை தோன்றச் செப்புவ துவமை

பண்புந், தொழிலும், பயனும் என்கின்ற இவை காரணமாகப் பொருளோடு பொருளை ஒன்றும் பலவுமாகப் பொருந்த வைத்து, அவ்விரு பொருட்கும் ஒப்புமை தோன்றும் படி சொல்லப்படுவது உவமையணியாகும்.

புணர்த்து சொல்லப்படும் அவ்விரு பொருள்களுள்ளே, ஒப்புமையறிவதற்குக் காரணமாய் நிற்கும் பொருள் "உபமானம்" எனவும், அதனால் உபமிக்கப்படும் பொருள் "உபமேயம்" எனவும் சொல்லப்படும். உபமானத்தினை "உவமை" எனவும், உபமேயத்தினைப் 'பொருள்' எனவுஞ் சொல்லுவர். இவ்விரு பொருள்களிடத்தும் சமஞ் சொல்லுவதற்குக் காரணமாய்ப் பொருவாயிருக்குந்தன்மை 'பொதுத்தன்மை' எனப்படும்.

# எமது நூலகங்கள்

புத்தகம் மூலம் உலக எழுச்சிக்கு வித்திட்ட பிதாமகர்கள் தங்களது வாசிப்பு மகத்துவத்தால் சமூகத்தை முன்னேற்றினர். வேலைப்பளு வாழ்க்கை முறையால் மக்கள் நூல்களை வாசிப்பதிலிருந்து அந்நியப்பட்டு வருகிறார்கள். வாசிப்பதற்கான தூண்டுதல்களும் குறுகி வருகின்றன.

இன்றைய உலகம் கல்வி, பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் எனப் பன்முகப்படுத்தப்பட்ட துறைகளில் தேடல் மிக்கதாக இருக்கிறது. அறிவுக்கு அடிப்படையாக இருப்பது வாசிப்பு. அறிவுசார் சிந்தனையை உருவாக்கப் பரந்த வாசிப்புத் திறன் முக்கியம். வாசிப்பைத் தூண்டக்கூடிய மிகப்பொருத்தமான இடம் நூலகங்களே. நூலகங்கள் அறிவுப் பதிவேடுகளின் சுரங்கம் ''கடலைப் போன்றது நூலகம் மணலை விரும்புவோர் மணலை எடுக்கலாம் சிப்பி, சங்கு சோகிகளைப் பொறுக்குவோர் அவற்றைப் பொறுக்கலாம், குளிப்போர் குளிக்கலாம், காற்று வாங்குவோர் காற்று வாங்கலாம்.'' செல்கின்றவரது நோக்கம் எதுவோ அதனை அவர் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற ம.சண்முகலிங்கத்தின் கருத்துப்படி நூலகங்கள் மனிதனுக்கு மிக அவசியமானவையாகக் கருதப்படுகின்றன.

இந்நூலகங்களின் தோற்றுவாய் பற்றி நாம் ஆராய்ந்தால் கி.மு 668-627இல் தொன்மையான களிமண் தகட்டு நூற் றொகுதிகள் பாபிலோனியாவில் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. எகிப்தில் நூல்கள் மரப்பட்டைகளில் தயாரிக்கப்பட்டன. அவை தவிர மாட்டுத்தோல், ஓலைச்சுவடிகள், கோரைப்புற்கள் போன்றவற்றிலும் எழுதப்பட்டதாக அறிய முடிகிறது. 'பப்பிரஸ்' என்ற தாவரத்திலிருந்து கடதாசி தயாரிக்கப்பட்டதால் அத்தாவரத்தின் பெயரை அடிப்படையாகக் கொண்டு 'பேப்பர்' என்ற சொல் வழக்கில் வரலாயிற்று. அரிஸ்டோட்டில் என்ற கிரேக்க பேரறிஞர் முதன் முதலில் நூலகம் ஒன்றை வைத்திருந்தார். நூல்களை அறிவியற் சிந்தனையின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தி வைக்கும் கலையை உண்டு பண்ணினார்.

அரண்மனைகளிலும் மடாலயங்களிலும் கோயில்களிலும் ஆரம்ப கால நூலகங்கள் இயங்கி வந்தன. காலப்போக்கில் காகிதம் கண்டுபிடிக்கப்பட்டதன் பின் அச்சுக்கலையின் துரித வளர்ச்சியுடன் நூல்களின் எண்ணிக்கை பெருகியது. எனவே அவற்றைத் தொகுத்துப் பேணவேண்டிய தேவையும் எழுந்தது.

முதன்முதலில் கிரிஸ் நகரிலே பொது மக்களுக்கான நூலகங்கள் நிறுவப் பட்டன. உலகின் முதலாவது நவீன நூலகம் ஐக்கிய அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் 1854இல் உருவாகியதாகக் கூறப்படுகிறது.

இலங்கையில் 13ஆம் நூற்றாண்டு வரை தமிழர் பிரதேசங்களில் நூலக வரலாற்றைக் குறிப்பிடக்கூடிய ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் பௌத்த மதம் இலங்கைக்கு வந்த காலப்பகுதியிலிருந்து வரலாற்றுப் பதிவுகளைப் பேணும் பெரும்பணியை பௌத்த விகாரைகளும் வழிபாட்டுத் தலங்களும் தொடர்ந்து செய்து வந்தமைக்குத் தீபவம்சம், மகாவம்சம் போன்ற நூல்கள் சான்றாகின்றன.

தமிழ்ப்பகுதிகளில் சிறப்பான ஆட்சி நிலவிய போதிலும் வன்முறையான ஆய்வுகள் மேற் கொள்ளப்படாமையால் நூலக வரலாற்றைக் கூறக்கூடிய தொல்பொருட் சின்னங்களோ

கல்வெட்டுக்களோ இதுவரை கிடைக்கவில்லை.

13ஆம் நூற்றாண்டளவில் சரஸ்வதி மகாலயம் என்ற பெயரிலமைந்த நூலகம் யாழ்ப்பாணத்தில் நல்ல நிலையில் இருந்தது என முத்துக்கவிராயர் எழுதிய கைலாயமாலையில் குறிப்பிடப்படுகிறது. யாழ்ப்பாணத்தை ஆண்ட விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி எனும் மன்னனால் சரஸ்வதி மகாலயம் உருவாக்கப்பட்டது என யாழ்ப்பாண வைபவமாலையில் கூறப்பட்டுள்ளது. சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி காலத்தில் பண்டிதர்களால் ஆக்கப்பட்ட நூல்கள் இம் மகாலயத்தில் வைக்கப்பட்டன. இங்கு வைத்தியம், சோதிடம் தொடர்பான நூல்களும் பாதுகாக்கப்பட்டன. பின் இது சிங்கள அரசன் ஒருவனால் தீ வைக்கப்பட்டதாக சரித நூல் கூறுகின்றது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் ஆதீனத்தில் சிறந்த சுவடி நூலகம் செயற்பட்டது என்ற தகவலைப் பெற முடிகிறது. 7ஆம், 8ஆம் நூற்றாண்டுக்குரிய இவ்வாலயத்தின் சுவடி நூலகத்தில் கிரந்தம் மற்றும் தமிழ் நூல்களில் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன.

இலங்கையில் நூலகங்களின் வளர்ச்சிக்கு பல்வேறு நடவடிக்கைகள் காரணமாயிருந்தன. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் நவீன நூலகம் கொழும்பில் உருவாக்கப்பட்டது. 1813இல் இராணுவத்தினரின் பாவனைக்கு ''யுனைட்டட் சேவிஸ் நூலகம்'' என்ற நூலகமும் 1821இல் கொழும்பு நூலகமும் 1829இல் சட்டத்தரணிகள் பாவனைக்கு 'பெட்டா' நூலகமும் ஆரம்பிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் 1842இல் எஸ்.சீ. கிரினியர் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட பொது நூலகம் சட்டத்தரணிகளாலேயே பயன்படுத்தப்பட்டது. அங்கிலிக்கன் திருச்சபையினர் யாழ் குடாநாட்டில் பல பாடசாலைகளில் நூலகங்களை ஆரம்பித்தனர். தாய்மொழிக் கல்வியும் இலவசக் கல்வியும் யாவருக்கும் கற்கும் வாய்ப்பை வழங்கியதால் நூலகப் பயன்பாடு அதிகரிக்கத் தொடங்கியது.

### யாழ்ப்பாணப் பொதுசன நூலகம்

1934 யூன் மாதம் 9ஆம் திகதி கலாநிதி ஐசாக் தம்பையா தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பொது நூல் நிலையத்துக்கான தோற்றம் அடிகோலப்பட்டது. செயலாளர் க.மு. செல்லப்பா அவர்களால் திரட்டப்பட்ட 1184 ரூபாவை மூலதனமாகக் கொண்டு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வாடகை அறை ஒன்றில் சிறியதொரு நூலகம் 1934.08.01ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. வசதிகள் குறைந்த இந்நூலகத்தை யாழ் பட்டினசபை பொறுப்பேற்று வேறு ஒரு இடத்துக்கு இடமாற்றம் செய்தது. நாளுக்கு நாள் அதிகரித்த வாசகர் தொகையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. எனவே சகல வசதிகளையும் கொண்ட நூலகம் ஒன்றை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

1952இல் இக் கட்டடத்தை அமைப்பதில் சாம். ஏ. சபாபதி, வணபிதா. லோங் அடிகள், கலாநிதி எஸ். ஆர் இரங்கநாதன் ஆகியோர் பெருமுயற்சி செய்தனர். இதற்கான பணமும் களியாட்ட விழா, அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு என்பவற்றின் மூலம் திரட்டப்பட்டது. கட்டிடத்துக்கான அடிக்கல் 1953.03.29இல் நாட்டப்பட்டது. வரைபடத்தைக் கட்டடக்கலை நிபுணரான கே. எஸ். நரசிம்மன் தயாரித்து வழங்கினார். முதற்கட்டம் பூர்த்தியாகி அன்றைய மாநகர முதல்வர் அல்பிரட் த. துரையப்பாவால் 11.10.1959இல் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது. மொத்தம் 15, 910 சதுர அடிகளைக் கொண்ட விசாலமான நூலகக் கட்டடம் பாரம்பரிய திராவிட முறைப்படி அமையப் பல பெரியார்கள் பாடுபட்டார்கள்.

தமிழ் மக்களுக்கு பலவித சேவைகளை இந்நூலகம் வழங்கி வந்தது. இரவல் வழங்கும் பகுதி, பத்திரிகைகள், சஞ்சிகைகள் , சிறுவர்

நூலகம், உசாத்துணைப்பகுதி, கேட்போர் கூடம் முதலானவை இரவு 8.00 மணி வரை இயங்கி, வடபகுதி அறிவாளிகளை வளம்படுத்தி வந்தது.

1981ஆம் ஆண்டு மே-31ஆம் திகதி தமிழர்களின் அறிவுக் களஞ்சியமாகத் திகழ்ந்த அறிவாலயமான இந்த நூலகம் இனவெறித்தாக்குதலுக்கு உள்ளாகியது. 97,000 அரியநூல்கள் பலநூற்றாண்டு பழமை வாய்ந்த 1800 ஓலைச் சுவடிகள் எனத் தமிழினத்தின் கருவூலம் தீயினால் அழிக்கப்பட்டது.

தென்கிழக்காசியாவின் முதன்மையான நூலகமாக விளங்கிய இந்த அரும்பெரும் நூலகத்தை தீக்கிரையாக்கிய செயல் ஒரு பண்பாட்டுக் கொலை என உலகத்தால் கண்டிக்கப்பட்டது. இச்செயலைக் கேள்விப்பட்ட சென். பற்றிக் கல்லூரி ஆசிரியர் வண. தாவீது அடிகளார் உடனே உயிர்நீத்தார். கலை, கலாசார வரலாற்று நூல்களை, கையெழுத்துப் பிரதிகளை, ஏட்டுச் சுவடிகளைமீளப்பெறுவது முடியாதபோதிலும் நல்லுள்ளம் கொண்டோரின் முயற்சியால் நூலகம் மீளுருவாக்கம் பெறத்தொடங்கியது.

அன்றைய தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் 5 லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்தார். பிரித்தானிய தமிழ் அகதிகளை மறுவாழ்வு நிறுவகம் மலேசியா பாராளுமன்ற உறுப்பினர், இந்தியத் தூதரகம் போன்ற பல அமைப்புக்கள் உதவி வழங்கின. நூலகம் மீளச் செயற்படத் தொடங்க போர்ச்சூழல் இடங்கொடாமையால் பல கிளை நூலகங்களூடாக அதன் சேவை இயங்கியது.

வளர்ந்து வந்த நூலக சேவைக்கு 1995இல் ஏற்பட்ட யாழ்ப்பாண இடப்பெயர்வு பேரிடியாக அமைந்தது. இந்த இடப்பெயர்வினால் ஏறத்தாழ 29000 நூல்கள் இழக்கப்பட்டன.

மீண்டும் யாழ்ப்பாண நூலகப் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன ஜனாதிபதி நூலகக் குழு அமைக்கப்பட்டு பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2008 ஜனவரி 14ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று புனரமைக்கப்பட்ட புதிய நூலகம் திறந்து வைக்கப்பட்டது. எனவே எமது பிரதேசத்தின் அறிவுச்செல்வம் நூல்நிலையங்களூடாகவே வளர்க்கப்பட்டு வந்துள்ளன.

ஒரு நூல்நிலையத்தின் கதவு திறக்கப்படும் போது

ஒரு சிறைச்சாலையின் கதவு தாழிடப்படுகிறது.

என்றார் சுவாமி விவேகானந்தர்.

**அடிக்குறிப்புகள்**

1. கலைக்கேசரி- 2012
2. அகவிழி- 2011
3. தினக்குரல் - 07.11.2011

**திருமதி. சத்தியபவானி செபமாலைதாசன்.**
( B.A. Dip in Ed, M.A ) ஆசிரியை.

# பெருங்காப்பியம்

பெருங்காப்பிய நிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வரு பொரு ளிவற்றினொன்
றேற்புடைத் தாகி முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்
தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகட னாடு வளநகர் பருவம்
இருசுடர்த்த தோற்றமென் றினையன புனைந்து
நன்மனம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழி னுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியின் புலத்தல் கல்வியிற் களித்தலென்
றின்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சந்தியிற் றொடர்ந்து சருக்க மிலம்பகம்
பரிச்சேத மென்னும் பான்மையின் விளக்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப


**பொருள்:** பெருங்காப்பியமாவது வாழ்த்து, வணக்கம், எடுத்துக் கொண்ட பொருள் என்னும மூன்றினுள் ஒன்றினை ஏற்று வருதலுடைத்தாகிப் பாயிரத்திலே வருதலைப் பொருந்தியும் நாற்பொருள்களையும் பயக்கும் நீதிநெறிகளையுடையதாயும், சிறந்த நாயகன் ஒருவனையுடையதாயும் மலை, கடல், நாடு, நகர், பருவம், சூரியோதயம், சந்திரோதயம் என்பவைகளையும் இவை போன்ற பிறவற்றையும் வர்ணித்தலுடையதாகியும், மணம் புணர்வு, முடிசூட்டு, பொழில் விளையாட்டு, புனல் விளையாட்டு, உண்டாட்டு, புதல்வர்ப்பேறு, புலவியிற் புலத்தல், கல்வியிற் களித்தல் என்பவைகளையும் இவை போன்ற பிறவற்றையும் வர்ணித்த நடையுடையதாயும் மந்திரம், தூது, மேற்செலவு, போர்புரிதல், வெற்றி பெறுதல் என்பவைகளைச் சந்தி போலத் தொடர்ந்து வர்ணித்தலுடையதாயும், சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்னும பாகுபாடுகளுள் ஒன்றினால் விளங்குதலுடையதாகியும் மிக்க சுவையும் பாவமுமுடைமையால், யாவரும் விரும்பும்படி கவிஞரால் அலங்கரித்துப் பாடப்படுந் தன்மையுடையதாகும் என்றவாறு.

**தண்டியலங்காரம்**

# அடைமொழியால் குறிக்கப்பெறும் சான்றோர்

| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழ்த் தென்றல் | - | திரு. வி. க |
| 2. | தமிழ்த் தாத்தா | - | உ. வே. சாமிநாத ஐயர் |
| 3. | மொழி ஞாயிறு | - | தேவநேயப் பாவாணர் |
| 4. | தமிழ்நாட்டின் மாப்பஸான் | - | புதுமைப்பித்தன் |
| 5. | உவமைக் கவிஞர் | - | சுரதா |
| 6. | கவிக்கோ | - | அப்துல் ரகுமான் |
| 7. | உரையாசிரியர் | - | இளம்பூரணர் |
| 8. | கவிமணி | - | தேசிய விநாயகம் பிள்ளை |
| 9. | குழந்தைக் கவிஞர் | - | அழ வள்ளியப்பா |
| 10. | கவிச்சக்கரவர்த்தி | - | கம்பன் |
| 11. | சொல்லின் செல்வர் | - | ரா. பி. சேதுப்பிள்ளை |
| 12. | கிறிஸ்துவக் கம்பர் | - | எச். ஏ. கிருஷ்ணபிள்ளை |
| 13. | மகாவித்துவான் | - | மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 14. | சிறுகதை மன்னன் | - | புதுமைப்பித்தன் |
| 15. | சிறுகதைத் தந்தை | - | வ. வே. சு. ஐயர் |
| 16. | புதுக்கவிதைத் தந்தை | - | பாரதியார் |
| 17. | தமிழ் வரலாற்று நாவலின் தந்தை | - | கல்கி |
| 18. | தமிழ் நாடகத் தந்தை | - | பம்மல் சம்பந்த முதலியார் |
| 19. | தமிழ் நாட்டு பேணாட்ஷே | - | மு. வரதராசனார் |

**வைத்திய கலாநிதி கிறீன் அவர்களின் முதலாவது மருத்துவ வகுப்பு**



இடமிருந்து வலம் : எஸ். மில்லர், சி. மீட், என். பார்க்கர், ஜே. டான்போர்த், ஜே. எச். ரவுண், ஏ. சி. ஹோல்.
(வேலுப்பிள்ளை) (கணபதி) (அருணசலம்) (பெரியதம்பி) (பூபாலசிங்கம்) (குமாரு)


Maithely Nagai Madam
மைதிலி
நகைமாடம்
தங்கநகை வியாபாரி
89V, Kasthuriyar Road, Jaffna.
Tel : 021-2227902


KAJAMUGAN Hardware
கஜமுகன் ஹாட்வெயர்
கட்டிடப்பொருட்கள், லங்கா கம்பி, G.I பைப் வகைகள், சீமெந்து, Macson Mesh, பெயின்ற் வகைகள் மற்றும் Pepsi Soda & Accessories அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
Dulux
NIPPON CEMENT
147. 149 ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.
E-mail : kajamuganhw@hotmail.com
Tel : 021 222 2833
021 222 7144
Fax: 021 222 2368

யாழ் நகரில் முதல் தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# கிருபா லேணர்ஸ்

Reg - DS 589 (அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை)

Kirubaa Learners

## மும்மொழிகழிலும் வாகனப் பயிற்சி அளிக்கப்படும்



- வாகன பயிற்சிகள் சுன்னாகக் கிளையிலிருந்து ஆரம்பிக்கப்படும்.
- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
- ஞாயிற்றுக் கிழமைகளில் மருத்துவ சான்றிதழ் (மெடிக்கல்), புகைப்படம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- அனுபவம் வாய்ந்த வாகன பயிற்றுனர்களால் வாகன பயிற்சிகள் வழங்கப்படும்.
- தாங்கள் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
- தவணை முறைக் கட்டணங்கள்.
- வான், கார், முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், லான்ட் மாஸ்ரர், ரக்டர், பஸ் என்பவற்றுக்கு பயிற்சியுடன் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.



# KIRUBA LEARNERS

(GOVT. APPROVED DRIVING TRAINING SCHOOL)

226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 2224353, 021 4923200
ஏ9 வீதி, சாவகச்சேரி. 021 4923202, 021 3201616
நெல்லியடி 021 3006550, 021 4923201
கிளிநொச்சி 021 2285505
விசுவமடு 021 3201515
கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். 021 2242022, 071 4546956, 0777 225292

# MYL DESIGN CENTRE

***Building Construction, & Consulting Planning & Permit Drawing, Estimates***




No.247, Palaly Road, Kantharmadam.
E-mail : thivakar82@gmail.com

Ph. No. 077 284 0177
077 780 4397

# Northern
## Central Hospital

Channeling Services
Intensive Care Unit (ICU)
ECHO Cardiography/ ECG
Digital X-Ray
EMG and EEG
Laparoscopic Surgeries
Premature baby unit
Health care packages
Lung function test
Plastic Surgery
Cardiothoracic Unit (CTU)
Emergency Unit (ETU)
Exercise Tolerance Test (ETT)
MRI/CT
Ultrasound Scan
Endoscopy
Physiotherapy and Speech Therapy
Hemodialysis Unit
Neurosurgeries
Immunizations




**24 hours Laboratory, Pharmacy, OPD, Ambulance, and Accident &Emergency Services**


342, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263
Fax: 021 221 6677 email: nchjaffna@gmail.com
Website: www.nchjaffna.com

தமிழ் ஆரத்தை வாழ்த்துகிறோம்...

# New Science World

*Brown Road,*
*Jaffna.*



பொன் செல்வ மகால்
Pon Selva Mahal
பொன் செல்வ மகால்
Rasaveethy,Neervely North,
Neervely,Jaffna.
info@ponselvamahal.com
Tel: 021 223 0590
021 320 2600
Mob: 077 9 944453
Narayana
Hardwares Trader
Distributors for
Lanka Tiles, Lanka Wall Tiles,
Tokoyo Cement, Multibond,
Union PVC Pipes, Jat Holdings,
Sanitarywares,
Bathroom Accessories, etc...
High Quality Product Available
under one roof
#92C, Stanley Road,
Jaffna.
nhtjaffna@gmail.com
Tel : 021 222 5390
021 567 5390
Fax : 021 222 5390
Shopi Sound
RECORDING STUDIO
Ph. No. 0777481506
விஷ்ணுஜா
பந்தல் சேவை
சொக்கட்டான் பந்தல், சாதாரண பந்தல்,
மேக்கப், மணமகளுக்குரிய சோடனை
வகைகள், மணவறை வகைகள், பிளாஸ்ரிக்/
இரும்புக் கதிரைகள், பாய்கள், சமையல்
பாத்திரங்கள், கேக், ஐசிங், சோடா வகைகள்,
அனைத்து சேவைகளையும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்.
இல.2, நொத்தாரிஸ் லேன்,
அரியாலை, யாழ்ப்பாணம்.



Asian
Texttile
Dealers in textile
&
Fancy Goods
No. 24, Palaly Road, Thirunelvele.
Tel : 0777-243461, 0212212518


சாரங்கா
நகைமாடம்
SARANGA
Nakaimadam
No. 157/1, Kasthuriar Road,
Jaffna.
Tel : 021 222 6972
021 222 8869



New
V.M.K.
Jewellery
வீ.எம்.கே ஜுவெல்லரி
Dealers in 22 Kt.
gold Jewellery
No. 80/03 Kasthuriar Road,
Jaffna.
Tel : 021 222 2515
021 720 1117



ABI
Fashion World
Largest textile showroom
in Jaffna
112, K.K.S Road Jaffna.
abifashionworld@gmail.com
www.abifashionworld.com
94 21 222 3738
fb/abifashionworld


ISHARA
NEW DRESS MART
இஷாரா
நியூ டிறெஸ் மார்ட்(பிறைவேட்) லிமிடெட்
Number one Name
In the
Fashion World...!
No. 199/A, 199/B
Power House Road,
Jaffna.
Tel : 021 221 9925
Mob : 077 262 8933
www.isharanewdressmart.com
senura@isharanewdressmart.com



உரிமையாளர் : ந.யோகேஸ்வரன்
EN
தீன்சுவை மிக்சர்
தொழிலகம்
Theensuvai Mixture
Industry
0771864860
0212230594
பலாலி றோட். உருமபிராய் சந்தி
யாழ்ப்பாணம்.
A9 வீதி. கைதடிச்சந்தி
கைதடி.


கீர்த்திகா
ரெக்ஸ்ரைல்
Fashion
Quality
Value & Service !
Palaly Road, Urumpirai Junction,
Urumpirai, Jaffna.
Tel : 021 223 1107 | 077 228 8245



அம்பிகா ஜுவலர்ஸ்
தங்கப்பவுன் நகை வியாபாரம்
Manufacturers of Gold Jewels
22 கரட் தங்க நகைகளை
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
34A, Kasthuriar Road, Jaffna.
Tel :021 222 2538


"பசு வதை ஒழிப்போம்"
தேனு
களஞ்சியம்
29. நவீன சந்தை உட்புறம்.
திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.
T.P. 021 4921185,
021 4921259,
021 222 6013



Mayil
Beauty Care &
Moderling Studio
Facial(Type of Skin)
Bridal makeup (Types of)
Icing
Rebonding
Straightening
Perming
Threading
Hair Treatment
Pimple Treatment
Under eye Treatment
Dandruff Treatment
Neck Treatment
Manicure Pedicure
Hair Cutting
Nail Art Permanent & other
Beauty Treatment
No. 137, Post Box Junction,
Palaly Road, Thirunelvely
www.mayilbeautycare.com
T.P : 0215687774,
0776914123


நியூ
மைதிலி
ஜீவலர்ஸ்
நடராசா கஜந்தன்
இல. 38.40. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
T.P. 021 2217878
0212217877
newmaithily40@gmail.com



விஸ்னு
ஸ்ரோர்ஸ்
பல்பொருள்
வாணிபம்
விஷ்னு ஸ்ரோர்ஸ் குப்பிளான் தெற்கு.
குப்பிளான்



உதயா
ஜுவல்லர்ஸ்
UTHAYAA
JEWELLERSS
For Modern & Distinctive
No.81, Kasthuriar Road, Jaffna.
Tel : 021 222 4434
இல.81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


SWISSO
BUILDING DESIGN
Vaastu Astrologer
T.Kirushnamurthy
Proprietor
50, Point Pedro 1st Lane, Jaffna.
021 221 7579, 077 791 7579
tkirushnamurthy@gmail.com
Swisso@sltnet.lk
www.sisso.weebly.com
BUILDING DESIGN & ARCHITECTURAL


SRI MUTHUMARIAMMAN TRADERS
342,344, Hospital Road, Jaffna.
GENERAL MERCHANTS & COMMISSION AGENTS
Prima
Authorized Distributor For
Prima Ceylon (Private) Limited
Lanka Milk food (cwe) PLC
Fax
021 222 8666
Tel
021 222 8666
021 567 4110


Corporate Head Office
Mobitel (Pvt) Ltd
108, W.A.D Ramanayake
Mawatha, Colombo, Sri lanka.
Sri Lanka Telecom
Mobitel
We Care. Always.


Good Food Good Life
RATNA CAFE
NO.714, HOSPITAL ROAD, JAFFNA.
SRI LANKA.
021 221 5395
'RATNA CAFE - JAFFNA'


Thevi Karumaarie
Nahai Madam
Manufacturers of Gold Jewels
for modern
and distinctive
Articles are all guaranteed & Genuine
for quality jewels
No. 171, 173, power house road, Jaffna
T.P : 021 222 9508


" மாசற்ற நீரே குறைவற்ற செல்வம் "
RO with Ultraviolet
உங்கள் கிணற்று நீர் பருகுவதற்கு உகந்ததா என்பதில் சந்தேகமா?
மேலதிக கல்சியம், மக்னீசியம், நைட்ரைட் ஒரு பிரச்சினையா?
மலத்தொற்று கிருமிகள் போன்ற உயிர்க்கொல்லி நோய்க்கிருமிகள் உங்கள் கிணற்று நீரிலும் இருக்கலாம் என அச்சமா?
போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கான செலவு அதிகமா?
மேற்குறிப்பிடப்பட்டவை போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் நம்பிக்கை உத்தரவாதத்துடனான தீர்வு எம்மிடம் மட்டுமே...
UV உடனான HI-PURE RO நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் 100% தூய நீரை உங்கள் வீட்டிலேயே பெற்று பயன் பெற உடன் அழையுங்கள்.
EVER PURE HI-TEC (PVT) LTD
341,K.K.S ROAD ,JAFFNA.
TEL:- 0770573684, 0215677567

# எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்...

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது"

- எம் தமிழ் ஆரம் இதழின் மலர்வுக்கான ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்தி வழங்கிய பெரியோர்கள்
- தங்கள் ஆக்கங்களை இதழை மெருகூட்ட வழங்கியோர்
- எம் வழிகாட்டிகளான அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியப் பெருந்தகைகள்
- இன்றைய விழாவில் பிரதம விருந்தினராக, சிறப்பு விருந்தினராக, கௌரவ விருந்தினராக வருகை தந்து எம்மை மகிழ்வித்த பெரியோர்கள்.
- முதற்பிரதி, சிறப்புப் பிரதிகள் பெற்று தமிழ் மன்றத்தை ஊக்குவித்த உள்ளங்கள்
- விளம்பரங்களை வழங்கி பேருதவி புரிந்த வர்த்தக நிறுவனங்கள்
- "தமிழ் ஆரம்" வெளிவருவதற்கு எமக்குச் சகல வழிகளிலும் வழிகாட்டியாக விளங்கும் மன்றப் பொறுப்பாசிரியர் கே. ஆனந்தரட்ணம்
- எமது கனவை நனவாக்கி கற்பனைக்கு வடிவம் தந்து நேர்த்தியான முறையில் இதழ் மலர்வதற்கு உழைத்த கரிகணன் (தனியார்) நிறுவனத்தினர்
- புகைப்படங்களை அழகுற எடுத்துதவிய சாயி புகைப்படக் கலைஞர்கள்
- எமது ஒவ்வொரு நகர்வும் வெற்றிபெற தோளோடு தோள்நின்று உழைத்த எம் கல்லூரித் தோழிகள்
- இன்று இவ் விழாவை சிறப்பித்தோர்
- அத்துடன் "தமிழ் ஆரம்" வெளிவருவதற்கு எம்முடன் சேர்ந்து கைகோர்த்த அன்பு உள்ளங்களுக்கும் எம் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

சுபம்



**தமிழ் மன்றம்**
**யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

edexcel | PEARSON | London South Bank University | University of Wolverhampton | CIOB | RICS




UGC Recognized
TVEC Approved

Sharpen your **skills** with **BCAS** today for **Colourful Careers** tomorrow

INTAKE NOW ON

## UGC அங்கீகாரம் கொண்ட UK Degree இனை யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்யும் வாய்ப்பு

**ENG** ENGINEERING
- Civil & Construction
- Telecommunication
- Electrical | Electronics

**BM** MANAGEMENT
- Business Management | Marketing
- Human Resource Management

**IT** COMPUTING & SYSTEM DEVELOPMENT

**BMS** BIOMEDICAL SCIENCE
BIOTECHNOLOGY

**LLB** LAW

**QS** QUANTITY SURVEYING

*BA (Hons) / BSc (Hons) / BEng (Hons) & LLB (Hons)*

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

JAFFNA 077 710 2131
077 960 3753
COLOMBO 077 283 4595

**Jaffna Campus** 16, Point Pedro Road, Jaffna.

18 YEARS

ISO 9001:2008 CERTIFIED

**HOTLINE : 021 2219910**

Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

கல்விப் பயிர் வளர்க்க காலடிதனைப் பதித்தீர்
எல்லையில் உலகில் ஏற்றமாய் வாழ்வீர் !




கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்

கரிகணன்

வடக்கின் அச்சகதாரர்

A 681, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T +94 21 222 2717 | 8
W www.harikanan.com
E print@harikanan.com